உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0
R. No. M. 3606 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஞூ கார்த்திகை-மீ 24-உ. ( 9—12—1934) | மலர் 16.

## முதலாளிக் கொடுமையும், தொழிலாளி துயரமும்.

(சுயமரியாதைப்பாவலர் தோழர் தி. அ. வேங்கடசாமி பாடியது)

"கண்ணபிரான் என்றுதித்த காசினியவதாரன்" என்னும் மெட்டு.
(28—10—34 தேதி தொடர்ச்சி)

7. காலேஜு—பள் ளிக்கூடங்கள்
கட்டுவான்தொழி லாளி—அதில்
கற்பான்முத லாளி—மகன்
கற்கொணுதாம் உள்ளேசென் று
கட்டியதொழி லாளி (ஏழைத்)

பாலேடும் மாமிசமும்
படைப்பான்தொழி லாளி—அதைப்
பப்புவான்முத லாளி—அய்யோ
பழையகூழும் இன்றிப்பரி
தவிப்பான்தொழி லாளி (ஏழைத்)

8. மலைமலையாய்ப் பணம்குவித்து
வைப்பான் தொழிலாளி—அநுப
விப்பான்முத லாளி—அதில்
வட்டிக்குவாங் கிவயிறு
வளர்ப்பான்தொழி லாளி (ஏழைத்)

சிலைகோயில் தீர்த்தம்அமைத்
திடுவான்தொழி லாளி—உள்ளே
செல்வான்முத லாளி—அதில்
சென்றுசேவை செய்யக்கூடா
தென்றும்தொழி லாளி (ஏழைத்)

9. அரண்மனைசிங் காசனங்கள்
அமைப்போன்தொழி லாளி—அநு
பவிப்பான்முத லாளி—அதின்
அண்டையிலும் சென்றிடக்கூ
டாதாம்தொழி லாளி (ஏழைத்)

அரிசிபருப் புப்புமுதல்
அமைப்போன்தொழி லாளி—அன்னம்
ஆக்கியேமுத லாளி—உண்ணும்
அப்போசம பந்தியுண்ணொண்
ணுதாம்தொழி லாளி (ஏழைத்)

10. ஆடையலங் காரப்பொருள்
அமைப்போன்தொழி லாளி—அதை
அணிவான்முத லாளி—அந்த
ஆடையைமேல் போடவும்கூ
டாதாம்தொழி லாளி (ஏழைத்)

சோடுசெருப் பமைத்திடுவோன்
சோட்டுத்தொழி லாளி—அதைப்
பூட்டுவான்முத லாளி—அந்தச்
சோட்டைமாட்டி எதிர்ப்படலா
காதாம்தொழி லாளி (ஏழைத்)

11. மோட்டார்ரயில் வண்டிகள்செய்
தோட்டுவான்தொழி லாளி—காலை
நீட்டுவான்முத லாளி—புளி
மூடையிலும் கேடாய்நின்றதில்
வாடுவான்தொழி லாளி (ஏழைத்)

பாட்டாளிகள் படும்தொல்லையைக்
கேட்டார்சகிப் பாரோ—அன்பு
காட்டாதிருப் பாரோ—அவர்க்குப்
பகிர்ந்துசம மாம்உரிமை
கூட்டாதிருப் பாரோ (ஏழைத்)

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதா பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 | உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 | சாமிகளின் அடிமை | 0-12-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 | லோகல்போர்டு ஆக்ட் (சென்னை) | 2-0-0 |
| விவாக விடுதலை | 0-4-0 | பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 | நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| மனித உற்பவம் | 0-8-0 | பெண்ணுரிமைக் கீதங்கள் | 0-1-0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 | சமதர்மக் கீதங்கள் | 0-0-6 |
| The Right of Temple Entry (English) | 1-0-0 | | |
| The Crux of the Indian Problem (English) | 1-0-0 | | |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.


## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.


### "சமதர்மம்."

ஆசிரியர்:— வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.

விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

---

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோரும் வெளிவருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0

விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவாதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டிரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.



### மாதர் சுதந்திரம்.

இது பண்டிதர் சாமி சிதம்பரனார் அவர்களால் எழுதப்பட்டதாகும். இந்நூலில் பெண்கள் எவ்வெவ்வழிகளில் சுதந்திரம் பெறவேண்டும் என்பதும், பெண்கள் சுதந்திரத்துக்கு ஆண்கள் எவ்வளவு முட்டுக்கட்டையாய் இருக்கிறார்கள் என்பதும், பெண்கள் எப்படி தங்கள் சுதந்திரத்துக்கு பாடுபட வேண்டும் என்பதும் விளக்கமாக்கப்பட்டிருக்கிறது.

விலை அணா 8.

### மனித உற்பவம்.

இது தோழர் சிங்காரவேலு B. A., B. L, அவர்களால் எழுதப்பட்டது. பிரபஞ்ச உற்பத்தி—ஜீவராசிகள் சூரிய சந்திரன் உற்பத்தி—மனிதர்கள் எப்படி உண்டானார்கள் என்னும் விஷயங்களும் மனிதர்கள் ஜீவன்கள் பூர்வ சரித்திரம் இன்னது என்றும், இனி ஏற்படப்போகும் மாறுதல் என்ன என்றும் சரித்திரம்—விஞ்ஞானம் ஆகியவைகளை ஆதாரமாய் கொண்ட ஆராய்ச்சி நூல்.

விலை அணா 8.

### சாமிகளின் அடிமை.

இந்நூல் அமரிக்க சீர்திருத்த மாது மிஸ். மேயோ அம்மையால் எழுதப்பட்ட தேவதாசிகள் என்னும் ஆங்கிலப்புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. 170-பக்கம் கொண்டதாய் நல்ல கிளேஸ் காகிதத்தில் தெளிவானஎழுத்தில் பதிக்கப்பட்டது. ஏற்கனவே 1—8—0 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இப்போது விலை அணா 8.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

## குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# மதமொழிக்கும் உலகப்புரட்சி.

## ஜோசப் மெக்காபி எழுதியதின் மொழிபெயர்ப்பு.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நெப்போலியன் உலகத்தையே பிடித்து விட வேண்டுமென்று கினவு கண்டு எகிப்திற்குப் போனான். அவனுடைய ஆடம்பர வழக்கத்தின் படி அவன் தன்னுடன் ஒரு கப்பல் நிறைந்த படிப்பாளர்களையும் அழைத்துச் சென்றான். இங்கிலீஷ்காரர்கள் பிரஞ்சுக்காரர்களைப் பின் தொடர்ந்தார்கள். அவர்கள் புதியதாய்க் கண்டுபிடித்தவைகளில் நேர்த்தியானவையெல்லாம் திருடிக் கொண்டார்கள். பக்தி மிகுந்த அந்தக் காலத்தில் அது தர்ம நீதிக்கு உட்பட்டதென்றே கருதப்பட்டது. எகிப்தின் விஷயத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள். புராதன எகிப்து எழுத்திற்குச் சாவி போன்ற படிக்கும் வழிகண்டு பிடிக்கப்பட்டது. மிகப் பழைய காலத்து ராஜ்யம் மதப்பற்றுள்ள தாயும் நீதியுள்ள தாயுமிருந்திருப்பதைக் கண்டு உலகம் அதிசயித்தது. எகிப்து துட்டாங் ஆமென் காலத்திற்கு முன்பு நிரந்தரமான ஒரே கடவுளை வழிபட்டு வந்திருக்கிறது. அடுத்தாப் போல் பூர்வீக பேபிலோன் முறை வந்தது. கல்வெட்டு சாசன அதிகாரிகளின் மண்வெட்டிகளால் அங்குள்ள விசேஷங்கள் வெளியாயின. அவை மிகுந்த பயம் கலந்த ஆச்சரிய கரமாக இருந்தன. உலகம் பேபிலோன் வாசிகளைப் பற்றிய உண்மை அறியாமல் இரண்டாயிரம் வருஷங்களாக முழுதும் ஏமாற்றப் பட்டிருந்தது. நாம் ஏராளமான இலக்கியத்தைக் கண்டோம். அப்பாஷையைப் படிக்கவும் வழி தெரிந்தோம். பேபிலோனியர்களுக்குச் சட்ட வகுப்புகளும் இருந்ததாக அறிந்தோம். பேபிலோன் அக்கிரமத்தில் அழுந்திக் கிடந்தது. ஏன் அவர்கள் விபசாரத்திற்காக மனிதர்களை நதியில் அமிழ்த்தியும் பலவந்தச் சேர்க்கைக்காக ஆடவர்களை உயிருடன் நெருப்பிட்டுக் கொளுத்தியும் வந்தார்கள் என்பதை நாம் கண்டோம். உலக உற்பத்தியைப்பற்றியும் மனித உற்பத்தியைப்பற்றியும் வேண்டிய தஸ்தாவேஜுக்களை நாங்கள் அடைந்தோம். ஒருவருக்கும் அதைப்படிக்கத் தெரியவில்லை. உலக உற்பத்தியைப் பற்றிச் சொல்லும் முதல் புத்தகம் எனப்படும் "ஜீனிவிஸ்" என்னும் நூல் ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் வருஷங்களுக்கு முந்திய காலத்திய கதைகளின் தொகுப்பு என்பதை யாரும் அறியக்கூடவில்லை. அக்கதைகளின் பாஷா நடை மதாச்சாரத்திற்குத் தக்கபடி மாற்றப்பட்டது. சிருஷ்டியின் விருத்தாந்தம், ஆதியில் படைக்கப்பட்ட முதல் சதிபதிகள், தோட்டம் வீழ்ச்சி, பிரளயம் முதலியவை, "ஜீனிவிஸ்" என்னும் புஸ்தகத்தில் சொல்லப்பட்ட கதைகளோடு சரியாய் ஒத்திருக்கிறது. உலகம் இவ்வுண்மையைக் கண்டு ஆச்சரியமடைந்தது. அந்த உண்மை பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் பரவலாயிற்று. மறுபடியும் "ஜீனிவிஸ்" நூலில் இருந்த நம்பிக்கை ஒழிந்தது. நவீன பூகற்ப சாஸ்திரத்தோடு எவ்வித சண்டையுமில்லாமலே கதையின் நம்பிக்கை அழிந்தது.

இந்தச் சங்கதியைப் பரவ வைக்க வேண்டிய வேலையைப் போல அமெரிக்கா கல்வி இலாக்காவில் முக்கியமான விஷயம் வேறு ஒன்றுமில்லை "ஜீனிவிஸ்" புத்தகத்திலுள்ள பேபிலோனியன் கதைகளைப் படிப்பாளிகள் சென்ற சுமார் ஐம்பது வருஷங்களாக அறிந்திருப்பவைகளைப் பற்றி மிகச்சிறிய ஞானமும் ஆதிகர்த்தா கொள்கையினரின் எந்த ஒரு தலைவனுக்கும் கிடையாது. அவர்கள் யாவரும் கடவுளுடைய வார்த்தைகளைப் பற்றிப் பேசுகிறார்கள். பூர்வீக பேபிலோன் மெசப்பொட்டோமியாவில் அழிந்தபடியே இன்னும் கிடப்பதாக அவர்கள் கருதுகிறார்கள் போலும். சிருஷ்டிக் கதைகளும் வீழ்ச்சியும், பிரளயமும் பண்டைக் காலத்து சாமான்யக் கட்டுக் கதைகள் என்று யாரும் சொன்னதில்லை. அமெரிக்காவில் லட்சாதி லட்சம் ஆதி கர்த்தாக் கொள்கையினருக்கு அது புதிதாய் வெளிவந்த ஒரு பெரிய விஷயமாகும். மெசப்பொட்டோமியாவில் நகரங்கள் அழிந்து கிடந்த விடங்களில் நாம் கண்டெடுத்த சில கல்வெட்டு சாஸனங்களின் மொழிபெயர்ப்புகளைப்படிக்கவே அவர்களுக்குப் புதிய விஷயங்கள் தெரியலாயின. மெசப்பொட்டோமியா நகரங்கள் ஹீப்ருகாரர்கள் எழுதப் படிக்கத் தெரியாதிருந்த காலத்திற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பு அழிந்து போனவை.

ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மதத்திற்கு விரோதமாக எழுந்த பெரிய புரட்சியை உண்டாக்கின காரணங்கள் எல்லாவற்றையும் நாம் இன்னும் சொல்லி முடிக்க வில்லை. விஞ்ஞானம் என்னும் விஷயம் ஒருபுறமிருக்கட்டும். அடுத்த காரணம் தத்துவ சாஸ்திரமாகும். தத்துவ சாஸ்திரம் என்றால் என்னவென்று விளக்குவது இங்கு உபயோகமற்ற விஷயம். தத்துவம் என்றால் நம்முடைய சிந்தனை சக்தியைப் பற்றிய ஆராய்ச்சியாகும், உண்மையைப்பற்றிய ஆழ்ந்த யோசனையின் முடிவு காண்டல் எனலும் தகும். தத்துவ சாஸ்திரத்தைப் பற்றி அவ்வளவு சொன்னால் போதும். பதினெட்டாவது நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் ஜெர்மனியில் காண்ட் என்பவரிலிருந்து அநேக உயர்ந்த தத்துவ சாஸ்திரிகள் ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலியா, அமெரிக்கா முதலிய விடங்களில் தோன்றி வந்தார்கள்.

மனோராஜ்யம் செய்யும் சிந்தனை சக்திக்காரர்கள் எப்படி மகாஜனங்களின் மனப்பான்மையை மாற்றி நாஸ்திகத்தை வளர்க்க முடியும்? ஈசுவர இயக்கம் தீர்க்கதரிசன நம்பிக்கையை ஆட்டி விட்டதைப் போல மனிதனுடைய பகுத்தறிவினால் கடவுளின் இருப்பையும் ஆன்மாவின் அழிவின்மையையும் ருசுப்படுத்த பலமான முயற்சி நடைபெற்று வந்தது. ஒவ்வொரு மதவாதியும் மேலே கூறப்பட்ட விஷயங்கள் உண்மையில் பகுத்தறிவினாலேயே ருசுப்படுத்தப்பட வேண்டும் என்று அறிந்திருக்கிறான். அதன் பிறகு தீர்க்க தரிசனத்தைப் பற்றி நினைக்க வேண்டும். நாம் முதலில் தீர்க்கதரிசியைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். இக்காரணங்களையெல்லாம் ஆராய்ச்சிசெய்வது தத்துவ சாஸ்திரிகளின் வேலை. நம்பிக்கை யென்பதைத் தத்துவ சாஸ்திரிகள் அழித்துவிட காரணமானார்கள். அவர்கள் எல்லாத் துறைகளின் அபிவிருத்தியைப் பற்றியும் ஆழ்ந்த சிந்தனை செய்யக்கூடியவர்கள்

முடிவாக சமுதாய சீர்திருத்த இயக்கம் பத்தொன்பதாவது நூற்றாண்டில் மத விரோதப் புரட்சியை வளர்த்து விடலாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் மனிதனுடைய உரிமைகளுக்காக நடந்த பெரும் போராட்டத்தைப் பற்றி எவரும் இப்போது அறியமாட்டார்கள். அமெரிக்காவில் இவ்விஷயம் ஒருவாறு சுலபமாய் அறியப்படுகிறது. அமெரிக்காவில் அரசியல் ஸ்தாபனம் பகுத்தறிவுக் கொள்கை பற்றியவர்களாலேயே ஆக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு மானிட உரிமைகளில் மிகுந்த கருத்துண்டு. அமெரிக்காவில் கைத்தொழில் நிலைமை ஐரோப்பாவைவிட நன்றாக இருந்தது. ஐரோப்பாவைப்போல அமெரிக்கா நியாயத்திற்காக அதே பயங்கரப் போராட்டத்தைக் காணவில்லை. எந்த மனிதனாவது தற்கால மத இயக்கத்தைச் சரியாய் முழுதும் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அவன் அப்போராட்டத்தைப் பற்றிக் கொஞ்சம் அறிந்திருக்க வேண்டும்.

நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு சிற்றரசர்கள் அதிகாரத்திற்கு வந்தார்கள். ஒவ்வொரு தேசத்திலும் மதாதிபதிகளே அவர்களுக்குப் பலமுள்ள உதவியளித்து நின்றார்கள். அவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து கொண்டு இருந்தார்கள். அவர்களை தெய்வீக நேசக்கூட்டம் அல்லது வெள்ளைப் பயங்கரம் என்று சரித்திரம் கூறுகிறது. அரசையோ கோவிலையோ யாராவது எதிர்த்தால், அவர்கள் இரக்கமின்றித் தண்டிக்கப் பட்டார்கள். சீர்திருத்தம் என்பது ஒன்றும் வேண்டாமென்று மறுக்கப் பட்டது. பாதிரிகள் எந்த சீர்திருத்தத்தையும் மறுக்கவென்றே பட்டிருந்தார்கள். ஒவ்வொரு தேசத்திலும் மனித உரிமைகளுக்குச் சண்டை போட்டவர்கள் பிரதானமாய்ச் சுதந்தரச் சிந்தனை வீரர்கள் தான். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திவரையில் அவர்களுடன் எந்தப்பாதிரியும் சண்டை போடவில்லை. கோவில்கள் அவர்களை அசட்டை செய்தன. கல்வி கைத்தொழில் விருத்தி, குழந்தை உழைப்பு, அரசியல் உரிமைகள், பெண் சுதந்திரம், சிறை சீர்திருத்தம் முதலிய மக்களின் அவசரமான சீர்திருத்தங்களுக்குப் பாதிரிகள் விரோதிகளாயிருந்தார்கள்.

கிறிஸ்தவ நீதி ஒரு விதமாகவும், பாதிரிகளின் உண்மையானநடத்தை ஒருவிதமாகவும் இருந்தது. இதை ஐரோப்பியக் குடிஅரசுகள் விரும்பவில்லை. மதத்தைப்பற்றிய அறிவாராய்ச்சியால் மனமும் அறிவும் போராடலாயின. கற்றறிந்தனவர்களிடமிருந்தும், மத்திய வகுப்பினரிடமிருந்தும் புரட்சி லட்சாதிலட்சம் ஜனங்களிடையே பரவலாயிற்று, கல்வி அபிவிருத்தியும், புஸ்தகமலிவும் மகாஜனங்களின் புரட்சியைப் பூர்த்திசெய்யலாயிற்று.

## விஞ்ஞானப் பிரவேசம்

### 5-ம் அத்தியாயம்.

இது வரையில் விஞ்ஞானம் என்பதைப்பற்றிச் சரியான படி ஒன்றும் சொல்ல வில்லை. இவ்வழியில் மதத்திற்கு விரோதமான புரட்சியைப் படித்தறிதல் மிகவும்முக்கியமானது. பரிணாமமும் பொதுவாய் விஞ்ஞானமும் புரட்சியில் ஒரு பகுதியாகும். பரிணாமத்தைப் பள்ளிக்கூடங்களிலிருந்து எடுத்து விட்டால் புரட்சி தடுக்கப்பட்டு கிறிஸ்து மதம் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை மிகவும் தப்பானது.

எங்களுடைய தர்க்க வாதம் ஒன்றில் டாக்டர் ரீலி என்னை என் நம்பிக்கையில் பரிணாமம் நாஸ்திகத்திற் கொண்டு விட்டு விடுமா என்று யதார்த்தமாய்ச் சபையோருக்குச் சொல்ல முடியுமா வென்று கேட்டார். நான் முடியுமென்று தைரியமாய்க் கூறிய போது ஆதிகர்த்தாக் கொள்கையரின் தலைவர் வெற்றியினால் சந்தோ

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

# இவ்வருஷம் அரசர்கள் மீது "சங்கராந்தி"

சமீபத்தில் சியாம் அரசதம்பதிகள் தங்கள் நாட்டிற்குத் திரும்பிப் போகக் கூடுமோ என்பதைப் பற்றி மலாய் டிரிப்யூன் பத்திரிகையின் லண்டன் நிருபர் சியாம் அரச தம்பதிகளிடத்தில் வினவியதற்கு, அவர்களின் அந்தரங்கக் காரியதரிசியின் மூலம் பின் கண்ட மறுமொழி கிடைத்தது. "இங்கு குளிராக இருந்தபோதிலும் மன நிம்மதியாக வாழ்கிறோம்.

கொஞ்ச நாட்களுக்கு முன்னிருந்து அரச குடும்பங்களில் நடைபெற்று வரும் கொலைகளிலிருந்து பொதுவாக உலகத்திலுள்ள எல்லா அரச குடும்பங்களுக்கும் துர் அதிர்ஷ்டம் அண்மியுள்ளதாக அவர்கள் பெரிதும் நம்புகின்றனர்.

சியாம் அரச தம்பதிகளின் உயிரைக் கவர்வதற்காக சென்ற வருஷம் சியாம் நாட்டில் நடைபெற்ற உண்மையானதும், அபாயகரமான சூழ்ச்சிகள் பல நிறைந்ததுமான கதை அவர்களின் அந்தரங்கக் காரியதரிசியான கனம் மாக்ஸ் மன் என்பவரால் சவிஸ்தாரமாகக் கூறப்பட்டது. சியாம் ராஜ தம்பதிகள் ஏற்படுத்தியிருந்த ஒவ்வொரு திட்டமும் மரணம் அல்லது கொலையின் காரணமாகவே சிதறுண்டு போயின.

வர்ரே நாட்டுப்புறத்திலுள்ளநோல் என்னுமிடத்தில் சியாம் ராஜ தம்பதிகளால் குடிக் கூலிக்க மர்த்தப்பட்ட ஒரு அறையில் நாங்கள் மூவரும் வசித்து வருகிறோம்-

## கொலைச் சம்பவங்கள்

சியாம் தேச ராஜாவும், ராணியும் முதன் முதலில் பெல்ஜியம் சென்று ஆல்பர்ட் மன்னரைச் சந்திக்கப் போயினர். அங்கு ஆல்பர்ட் மன்னர் கொலையுண்டிறந்தார். அடுத்தாற்போல் நாங்கள் எல்லோரும் ஹாலந்து தேச இராணியைச் சந்திக்கஉத்தேசித்திருந்தோம். அந்தஏற்பாடுகள் யாவும் முடிவு பெற்றவுடன் இராணியம்மை இறந்துபோய்விட்டார்கள்.

பிறகு வியன்னாவுக்குச் சென்று அத்தேசத்தின் சர்வாதிகாரியாகிய டாக்டர் டொல்பஸுடன் வசிக்கலாமென்று எண்ணியிருந்தோம். அங்கும் டொல்பஸ் கொலை புரியப்பட்டு விட்டார்.

பிறகு சியாம் அரச தம்பதிகள் ஹாலண்டிற்கு மீண்டும் செல்ல உத்தேசித்தனர். எல்லா ஏற்பாடுகளும் நடந்தேறி விட்டன. மீண்டும் அப் பயணம் ரத்துச் செய்யப்பட வேண்டியதேற்பட்டது. இளவரசர் மன்ஸார்ட் இறந்த பிறகு மார்லேயில்லிஸ் ஒரே சமயத்தில் இருகொலைகள் நடந்தன. இவ்விஷயங்களெல்லாம், சியாம் அரசர்நாட்டை வெறுப்பதற்கு முன்னமிருந்து ஒருவருடமாக நிகழ்ந்து வருகின்றன.

தற்மயம் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் ஏதோ துர்திர்ஷ்டம் சம்பவித்துக் கொண்டிருப்பதாக நாங்கள் இப்பொழுது நம்புகின்றோம்' இந்த துரதிருஷ்ட காலம் சீக்கிரத்தில் முடிவு பெறவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். முன் கூறப்பட்ட கொலைச்சம்பவங்கள் யாவும் ஒன்றன் பின் ஒன்றாகவும், அடுத்தடுத்தும் நிகழ்ந்தவையாகும். இப்பொழுது எங்கள் நாட்டிலும் இக்கஷ்ட நஷ்டங்கள் உண்டு.

## ஜனங்களின் விருப்பமில்லை.

ஒருவனுக்கு உயிர்ப்பிச்சை வழங்கவோ, மரண தண்டனை வழங்கவோ உள்ள ஒரு விசேஷாதிகாரம் அரசனிடத்திலிருக்கக் கூடாதென்று பொதுஜனங்கள் விரும்பும் பக்ஷத்தில் அரசர் பொதுஜனங்களின் நோக்கம் போல அவ்வதிகாரத்தைப் பொதுஜனங்களிடம் அளிக்கவே செய்வாரென்பது எனக்குத் தெரியும். ஆனால் இதெல்லாம் பொதுஜனங்களின் விருப்பமல்ல. சில நேர்மையற்ற ராஜதந்திரிகளின் விருப்பமாக இருக்கின்றன. இன்னும் என்னென்ன காரியங்கள் நிகழப்போவதென்பதையாரறிவார்? எதிர்கால விஷயங்களை யார் முன்னடியே அறிவிக்கக்கூடும்? அரச தம்பதிகள் இம்மாரிக் காலம் முழுதும் இங்கு தானே தாமதிக்க விரும்புகின்றனர். குளிராக இருந்த போதிலும் ஆச்சரியப்படத்தக்க நிம்மதி இருக்கிறது. அரச தம்பதிகளுட்பட எங்கள் யாவருக்கும் ஜலதோஷம் பிடித்துள்ளது: சமீபத்தில் ஏற்பட்ட குளிர் மிகவும் கொடியதாக இருந்தது. இங்கிலாந்திலுள்ள இளவேனிற்காலத்தைக் காட்டிலும் எங்களது நாட்டின் மாரிக்காலம் உஷ்ணமாக இருக்கும். ராஜாவும் ராணியும் ஒருவரையும் பார்ப்பதில்லை. அவர்கள் லண்டனுக்குப் போக இஷ்டப்படுகிறதில்லை. அவ்விருவரும் டென்னிஸ் விளையாடுவதும் உலாத்தப்போவதுமாகவே இருக்கின்றனர்.

இராணி செல்வமாக வளர்க்கும் சியாம் தேசப் பூனைக்குட்டி இப்பொழுது அவர்களிடத்திலில்லை.

சியாம் தேசஅரச தம்பதிகள் மீது பிரிட்டிஷ் மக்கள் கொண்டுள்ள சிநேக பான்மைக்காக மிகவும் போற்றுகின்றனர். பார்க்கப்போனால் பிரிட்டன் தான் நிலைக்கலக்கமற்றதும் அரசியல் சீர்திருத்தம் வாய்க்கப் பெற்றதுமான ஒரு நாடாக இருக்கிறது. (ஸண்டே டிரிப்யூன்)

## 16 வருஷத்திற்குப் பிறகு கொலை.

சோவியத் மத்திய நிர்வாகக் கமிட்டியில் முக்கிய பதவி வகிப்பவரான ஸெர்ஜி மிரானோவிக் கைராவ் என்பவர்லெனின்கிராட்சோவியத் காரியாலயத்தில் இருந்த போது ஒருபாதகன் "தொழிலாளர் வகுப்பின் விரோதிகளின் கொலைஞன்" அவரை துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தி விட்டான்.

தோழர் கைராவ் சோவியத் சர்க்காரின் மத்திய நிர்வாக சபையில் அக்கிராசன கோஷ்டியில் ஒருவர் சோவியத்பொதுவுடமைக்கட்சியின் பிரதம காரியதரிசியான தோழர் ஸ்டாலினுக்கு வலது கை போன்றவர்.

1918-ல் லெனினைக் கொல்ல முயற்சி நடந்த பிறகு, சோவியத்தில்பெரிய அதிகாரியை கொலை செய்யஇதுவரையில் முயற்சி நடந்ததேஇல்லை.

கொலைகாரன் கைது செய்யப்பட்டிருக்கிறான்; அவன் யார் என்பதை அறிவதற்கு விசாரணை நடக்கிறது.

## லண்டன் மாநகரில் நிர்வாண சங்கத்தினர் மகாநாடு.

### சங்கோசம் கூடாது.

20 அடி உயரத்தில் நாலாபக்கமும் எட்டிக் கூடப் பார்க்க முடியாத நிலையில் மறைவு வேலி போடப்பட்டஓர் அழகிய சிங்காரவனத்தில் லண்டன் நகரைச் சேர்ந்த "பிஞ்ஜிலி வடக்கு" என்னுமிடத்தில் நிர்வாணசங்கத்தவர்கள் கூடினார்கள். அவர்களில் ஆண் பெண் 200 பேர்வரையில் இருந்தார்கள். இரண்டொருவர் தவிர மற்றெல்லோரும் முழு நிர்வாணந்தான். அவர்கள் தங்களுடைய இயக்கத்தைப்பற்றிப் பெருமையடைகிறார்களே யொழிய வெட்கப்படுவதாகத் தெரியவில்லை. வெளிப்படையாய் சமுத்திர ஸ்நானத்திற்கோ ஆற்று ஸ்நானத்திற்கோ எல்லா பொதுஜனங்களும் நிர்வாணமாய் சங்கோசமில்லாது குளிக்கும் நாளை அவர்கள் எதிர் பார்த்திருக்கிறார்கள்.

முழுஉடைஉடுத்திய பத்திரிகா நிருபர் ஷை கூட்டத்தில் இருந்தார். அவர்கள் இயக்கத்தைப் பற்றி அபிப்பிராயம் கேட்கப்பட்டது. இங்கிலாந்தில் எல்லாப் பாகங்களிலிருந்தும் இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு வந்தார்கள். தங்கள் இயக்கத்தை எப்படிப் பரப்புவது என்பது பற்றி யோசனை செய்யவே இவர்கள் இங்கு கூடியிருந்தார்கள். நிர்வாணமாக சூரிய ஸ்நானம் செய்தல் போன்றவற்றிற்கு யாதொரு விதமான உபத்திரவமும் இல்லாமல் எப்படித் தங்கள் இயக்கத்தைப் பரப்புவது என்ற விஷயமாய் அவர்கள் பெரிதும் யோசித்தார்கள். அவ்வியக்கத்தின் பிரதம அங்கத்தவராயிருந்த ஓர் பெண்ணை "உலகச்செய்திகள்" என்று சொல்லப்படும் பத்திரிகையின்நிருபர் கண்டு பேசிய சமயம் அப்பெண் கூறியதாவது:—

"இரகசியமாய் வைத்துக்கொண்டு இவ்வியக்கத்தை நடத்துவதில் எங்களுக்குப் பிரியமில்லை. இதனை அம்பலத்திற்கு எடுத்து அதிகம் பேர் இதில் கலந்து கொள்ளும்படி செய்ய வேண்டுவதே எங்கள் நோக்கம்" என்று சொன்னார். (தேச நேசன்)

---

## ஜப்பானில் கடுமையான பஞ்சம்.

### பஞ்சக் கொடுமையால் விபசாரத்துக்கு பெண் விற்பனை.

டொஹோக்கூ என்ற ஜில்லாவில் பஞ்சக்கொடுமை அதிகமாகவிருக்கிறது. பெற்றோர்கள் தங்களுடைய பெண்களை விபசாரத்திற்கு விற்கின்றனர்; சில விவசாயிகள் கடன்கொடுக்க முடியாமல் தற்கொலை புரிந்துகொண்டனர்; சிலர் ஊரை விட்டு ஓடிவிட்டனர். குழந்தைகள் உண்ண உணவின்றி மெலிந்துபோய்விட்டன. அநேக வாரங்களாக பஞ்சம் தாண்டவமாடுகிறது. இத்துடன் குளிரும் அதிகரித்து விட்டது. இதனால் ஜனங்கள் படும் கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

ஐவேட்டில் தான் பஞ்சம் மிகக்கடுமையாக விருக்கிறது. குழந்தைகள் ஜீரணம் செய்ய முடியாத சில பருப்புகளைத் தின்று விட்டு அவஸ்தைப்படுகின்றன. 20,000 குடியானவர்கள் பட்டினி கிடக்கின்றனர். அஸோஸா, காமிகோ முதலிய கிராமங்களிலிருந்து 100 வாலிப ஸ்திரீகள் தங்களுடைய குடும்பக் கஷ்டங்களைத் தீர்க்க தங்களைத்தாமே விற்கமுயற்சிக்கின்றனர்.

சில விடங்களில் பிச்சைக்காரர்கள் ஊருக்குள் அனுமதிக்கப்படுகிறதில்லை. 33 வருஷங்களுக்கொருதரம் ஜப்பானில் பஞ்சம் வருவதாகக்கூறப்படுகிறது. 1802 வருஷம் கடுமையான பஞ்சம் ஜப்பானில் ஏற்பட்டது.

அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகின்றனர்.

# சமதர்மத்தில் பெண்கள்.

(முன் தொடர்ச்சி)

தற்காலத்தில் தான் பெண்கள் யாவரும் உழைக்கிறார்களென்பதல்ல, மனிதவர்க்கம் தோன்றிய காலந்தொட்டே உழைத்து வருகிறார்கள். ஆண்களுக்கு முன்பே பெண்கள் பாட்டாளிகள். எல்லாத் தொழில்களிலும், முன்னோடிகளிலும், உற்பத்தி கர்த்தாக்களும் அவர்களே. ஒருகாலத்தில் ஆண்மக்கள் போர்வீரர்களாகவும், பொருள்களை அழிப்போராகவும் இருந்தபோது பெண்கள் தான் பண்டங்கள் உற்பத்தி செய்வோராகவும், ஆக்குவோராகவும் இருந்தனர். சமுதாய வாழ்வின் பரிணாமத்தில் ஒவ்வொரு காலத்திலும் தொடர்ச்சியாக பெண்ணும் தொழிலும் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைக்கப்பட்டிருந்து வருவதைக் காணலாம். இவ்வாறு இடை முறியாது, உடை படாது, தொடர்ச்சியாக ஒழுங்காக வந்து கொண்டிருக்கும் சமூக வாழ்வின் பரிணாமப்போக்கை, வருங்கால சமதர்ம வாழ்வு எவ்வாறு தடுத்து, முறித்து மாற்றி அமைத்து விடுமென்று நாம் நம்புவது?

சென்ற கால, நிகழ்காலப் பெண்களைப்போன்று வருங்காலப்பெண்களும் வேலை செய்வார்கள். ஆடவரைப்போல் அவர்களும் பல்வேறு தொழில்களைச் செய்வார்கள். தற்காலத்தில் வாழும் பெரும்பாலான மக்களின் வேலைப்பாடுகளைப்பார்க்கிலும், அவர்களுடைய வேலை, லேசாகவும், மனோகரமானதாகவும், பகுத்தறிவுக்கொத்ததாகவும், ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் அனுகூலமாயும் இருக்கும். வாழ்க்கை முழுவதும் உழைப்பையே ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே மனித ஜீவிதத்தில் உழைப்பே முக்கியமானதும், கௌரவிக்கத்தக்கது மென்ற தீர்மானத்தை அஸ்திவாரமாகக்கொண்டுதான் சமதர்ம சமூகம் கட்டப்படும். அந்த சமூகம், எல்லோருக்கும் வேலைகொடுக்கும்; எல்லோருடைய தேவைகளையும், அவசியங்களையும் பூர்த்தி செய்யத்தக்க மார்க்கங்களைக் கையாடும். வேலையற்ற ஆணோ, பெண்ணோ அங்கு இருக்க மாட்டார்கள். "உனது உழைப்புக்குத் தேவையில்லை. ஆகவே உனது அவசியங்களும் பூர்த்தி செய்யப்பட மாட்டாது." என்ற பேச்சே அங்கு எழுவதற்கில்லை ஓய்வொழிவில்லாத உழைப்பினால், ஆண்களும் பெண்களும் அகாலத்தில் வயோதிகமடைவதில்லை; உடல் நலமும் உயிர் வளமும் உடைந்து போவதில்லை, சமூக வளர்ச்சிக்குப் பயனில்லாது போவதில்லை. தொழிற்சாலைகளும், தொழிற்கருவிகளும் சமூகப் பொதுவுடமையாக்கப் படுமாகையால் நிர்வாகமும் சிலருடைய நன்மைக்காக அல்லாமல், எல்லோருடைய நன்மைக்காகவே நடைபெறும். வருங்கால பாக்டரியை நாம் நன்றாகச் சித்தரிக்கலாம். தற்காலப்பொதுப் பள்ளிக்கூடத்தில் எப்படி சமூகத்திற்கு அவசியமான அறிவைப்பெறுகிறோமோ, அப்படியே, வருங்கால, தொழிற்சாலையிலும் சமூகத்திற்கு அவசியமான உழைப்பே செலவு செய்யப்படும். பள்ளிக் கூடமும் அதற்குரிய தட்டுமுட்டுச் சாமான்களும் இன்றுபொதுவுடமையாகக் கருதப்படுகிறது. ஆகையால், பள்ளிக்கூடம் தனிப்பட்டவர்களின் லாபத்திற்காக நடத்தப்படுவதில்லை; பொது நலத்துக்காகவே நிர்வகிக்கப்படுகிறது. மாணவ மாணவிகளின் நன்மையே பிரதானமாக நோக்கம் சுத்தம், சுகாதாரம், உத்தரவாதம் செய்யப்படுகிறது. பாட நேரம் சுகாதாரத்துக்கேற்றபடி வரையறுக்கப்பட்டிருக்கிறது; வேலை செய்வதற்கு நேரம், விளையாடுவதற்கு நேரம் அளிக்கப்படுகிறது, உடல் மன நலத்தில் அபிவிருத்தி கவனிக்கப் படுகிறது. இதே விதிகளைப் பொதுவுடமை பாக்டரியிலும் அனுஷ்டிக்க முடியும். தொழிலாளர் நலமே முக்கிய நோக்கமாயிருக்கும். சுகாதாரவசதிகள் நிச்சயமாக அளிக்கப்படும்; சுகாதாரத்தைப் பாதிக்காமல், வேலைநேரம் வரையறுக்கப்படும்; ஒவ்வொரு தொழிலாளிக்கும் அறிவுக்கொவ்வும் முறையில், வேலை செய்வதற்கும், தமாஷாய் பொழுது போக்குவதற்கும், அறிவை விருத்திசெய்வதற்கும், சுயேச்சையாகத்தனியாக வாழ்வதற்கும் நேரம் பிரித்துக் கொடுக்கப்படும். பொதுவுடமையாக்கப்பட்டுப் பொது நிர்வாகத்தில் நடைபெறும் பாக்டரிகளில் பெண்களும், ஆண்களும் சமூகப் பொதுப்பள்ளிக்கூடங்களில் இன்று வாசித்து வரும் மாணவமாணவிகளைப்போல், இயற்கையாகவும், திருப்தி கரமாகவும் வேலை செய்வார்கள்.

புத்தி நுட்பமும், ஆராய்ச்சித் திறனும், விஞ்ஞான வளர்ச்சியும், பெருகப்பெருக, மனித வாழ்வின் நிபந்தனைகள் விசாலப்பட்டு, நவநவமான கருவிகளும் இயந்திரங்களும் எல்லையில்லாது கண்டுபிடிக்கப் பட்டு, பொருளாதார அபிவிருத்தி மிகுந்து வளர்ந்து கொண்டே போகும் நாகரீகத்தில் மனிதனுடைய அவசியங்கள் அதிகப்படும். ஆகவே, தொழில்களும் தற்காலத்தினும் பல்வேறு விதமாகக் கிளைத்துப் பெருகும். ஒரு குறிப்பிட்ட தொழிலைத்தான் ஒரு மனிதனோ, ஒரு கூட்டமோ செய்ய வேண்டுமென்று கட்டுப்படுத்துவதற்குப்பதிலாக, அவரவர் விருப்பத்திற்குத் தகுந்தவாறு எந்தத் தொழிலை வேண்டுமானாலும் செய்வதற்குரிய சந்தர்ப்பம் ஏற்படும். தற்கால சமூகத்தில் வளர்ச்சிக்கு வழியின்றி, அனேக நிபுணர்கள் ஏதாவதொரு யந்திரத்திலேயே தங்கள் வாழ்க்கையைப் போக்குகிறார்கள். பெண் அடிமையாயிருந்த காலங்களில், எத்தனை பெண்ரத்தினங்கள் உலகமறியாது சிற்றில்களிலும் அடுப்பங்கரைகளிலும் பலியாயினர். தற்கால சமூகத்திட்டத்திலும் சிலருக்கே முன்னேறுவதற்குச் சந்தர்ப்பமுண்டு. கணக்கு வழக்கற்ற, அபார சக்திகளும் சாமர்த்தியங்களும், உன்னதமான உணர்ச்சிகளும், வெளிக்குத்தெரியாத துக்ககரமான முடிவுகளுக்கு இரையாகி, தினே தினே பலியிடப்படுகின்றன. ஏனென்றால் பசியின் கொடுமையும், உழைப்பின் கடுமையும் சாமர்த்தியத்தையும் உன்னத உணர்ச்சியையும் சிதைத்து அபிவிருத்தியை அசாத்தியமாக்குகின்றன. சமதர்மக் கொடியின் கீழ் பெண்ணுக்கும் ஆணுக்கும் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ள பூரண சுதந்திரமுண்டு. ஒவ்வொரு வகைச் சாமர்த்தியமும், சக்தியும், நூதனமாகக் கண்டுபிடிக்கும் திறமையும், புதிதாக சிருஷ்டிக்கும் ஆற்றலும், சமூக வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அவசியமென்று மதிக்கப்பெற்று, அவைகளை அபிவிருத்தி செய்வதற்கென பூரண சந்தர்ப்பமும் அளிக்கப்படும். அவசியமானதாயிருந்து, யாரும் இஷ்டப்படாத வேலையை, சமதர்ம அரசாங்கம் செய்துதான் தீரவேண்டுமென்று வற்புறுத்தினாலும் கூட அவ்வேலை செய்வோருக்கு வேலை நேரம் குறைவாயிருக்கும், சுற்றுச் சார்புகள் மனோரம்மியமாயிருக்கும், வசதிகள் மிகுந்திருக்கும், தங்களுக்குப்பிடித்தமான வேறு வேலை செய்யப்போவதற்கும் அவகாசமும் சௌகரியமும் அளிக்கப்படும்.

தொழிலாளர் குடிஅரசில் பெண்களின் வேலையைப் பொறுத்தவரையில் சந்தேகமறச் சில கட்டுப்பாடுகள் இருக்கவே செய்யும். ஆனால் அவைகள் மனிதவர்க்கத்தின் நன்மைக்கு அத்யாவசியமான கட்டுப்பாடுகளாகவேயிருக்கும். தாய்மார்களும் பிரசவ வசதிகளும், புத்திர சந்தான கைங்கரியத்திற்கு இடைஞ்சல் நேருமாறு: பளுவான இயந்திரங்களில் வேலை செய்யவும், பல மணி நேரம் தொடர்ச்சியாக நிற்கவும், இது போல் பாதகம் விளைக்கும் தொழில் எதுவும் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் முன் எந்தக்காலத்திலும் காப்பாற்றப்படாதவாறு தாய்மை (Motherhood) பேணிக்காப்பாற்றப்படும். முதன் முதலாக பெண்மக்களும் மனிதர்களாகவே நடத்தப்பட்டாலும், வரும் தலைமுறையை ஈன்று வளர்க்கவேண்டியவர்களென்பதில் மிகமிகக்கருத்துச்செலுத்தப்படும்.

## சமதர்மத்தில் கல்வி.

ஆண்களும் பெண்களும் சரிசமமாக வேலைசெய்யும் சமதர்ம சமூகத்தில், வேலைக்குத்தகுந்த பயிற்சி அளிக்கப்படும். தற்கால சமூகத்தில் ஒவ்வொரு தொழிலாளியையும் தகுதியின்மை (Inefficiency) பின்னால் இழுக்கிறது. ஏனென்றால், தற்காலத்தொழில் நிபந்தனைகள், எந்தத் தொழிலும் திறமையடைய விடாமல் தொழிலாளியைஒருதொழிலிலிருந்து இன்னொரு தொழிலுக்கு ஓடும்படி நிர்ப்பந்திக்கிறது. பெண்களிடத்தில் இது விசேஷமாகக்காணப்படுகிறது. அவர்களில் பெரும்பாலோர் பால்யத்திலேயே எத்தகைய பயிற்சியுமில்லாமல் கூலிவேலைக்கு வந்து விடுகிறார்கள். சில வருஷங்கள் சென்றதும் இல்லக்கிழத்தியாக வீட்டுவேலைசெய்ய அவர்கள் போய்விடுகிறார்கள். அந்த வேலையிலும் அவர்களுக்குப் பயிற்சி இல்லை. ஒவ்வொரு தொழிலாளியும் தொழிலுக்குரிய யோக்யதை அடையும்படி செய்வதுதான் தொழிலாளர் குடி அரசின் அவசியமும் அவசரமுமான காரியமாகும். தொழிலாளர் குடி அரசில் பெண்களும் ஆண்களும் தொழிலைத்திறம்படச்செய்ய மாத்திரம் பயிற்சி அளிக்கப்படுவார்களென்பதல்ல. இலக்கியம், கலை, விஞ்ஞானம் இவைகளில் போதிய ஞானம் பெறும்படியும் பயிற்சி அளிக்கப்படுவார்கள்; சோம்பேறியாக வாழ்க்கை நடத்தும் முதலாளிகளுக்கு சௌகரியம் தரவே தற்காலம் உகந்தது என்ற ஞானமும் உணர்ச்சியும் அவர்களுக்கு அளிக்கப்படும். செம்மையாக அமைக்கப்பட்ட ஒரு சமூகத்தின் முக்கிய அலுவல் அதன் ஒவ்வொரு உறுப்பினர்க்கும் கல்வி புகட்ட வேண்டுமென்பது சமதர்மிகளின் நூதன சிருஷ்டியல்ல, தற்கால சமூகங்கூட பொதுஜனக்கல்வியை அங்கீகரித்திருப்பதோடு அதன் உண்மை தெளிவாக உணர்ந்து கொள்ள முயற்சித்து வருகிறது. திட்டப்படியும், சட்டப்படியும், தத்துவப்படியும் ஒவ்வொரு தொழிலாளி வீட்டுச் சிறுவனும் சிறுமியும், செல்வர் வீட்டு புத்திரிகளும் புத்திரர்களும் கிண்டர்கார்ட்டனிலிருந்துஆரம்பப்பாடசாலைக்கும் உயர்தரக்கலாசாலைக்கும், கல்லூரிக்கும் செல்ல இடமுண்டு. ஆனால் அனுபவ வாழ்க்கையில் தொழிலாளி வீட்டுச்சிறுவர் சிறுமிகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது முக்காலே மூன்று வீசம் ஆரம்பப்பாடசாலையைத்தாண்டிச் செல்வதில்லை. கூலி வேலையில் அவர்கள் புகுந்து தீரவேண்டிய அவசிய மேற்படுவதால் தற்காலக்கல்வி அளவுப்படி மிக மட்டமான அரைகுறைப்படிப்பில் அவர்கள் இருக்கும் பொழுதே, சட்டம் அனுமதித்ததும், பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேறி பாக்டரிகளினுள்ளும், ஸ்டோர்களினுள்ளும் நுழைகிறார்கள். செல்வர்களின் பிள்ளைகளும் பெண்களும் அக்கரையில்லாத

நவம்பர் மாதம் 7-ந் தேதி ருஷியாவுக்கு ஓர் கொண்டாட்ட தினமாகும். அன்றுசோவியத் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதின் 17வது ஆண்டுவிழாவாகும். இந்தக் கொண்டாட்டத்தை ருஷியாவில் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் ஜனங்கள் பண்டிகையாகக் கொண்டாடுவது போல் கொண்டாடினர்.

மாஸ்கோ நகரத்தில் அதிகாலை முதல் சூரிய அஸ்தமனம் வரையில் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் கோஷ்டி கோஷ்டியாக "ரெட் ஸ்குயர்" என்னுமிடத்திற்குச் சென்று, பெரியார் லெனின் ஞாபகார்த்தமாக வைத்திருக்கும் சின்னத்தைத் தொழுது, சோவியத் பிரதிநிதிகளுக்கு உபசாரம் செய்வார்கள்.

### எதற்காகக் கொண்டாட்டம்?

இவ்வளவு ஜனங்களும் எதைக் கொண்டாடுகிறார்கள்? ருஷியாவின் கொடுங்கோல் மன்னன் "ஸார்" அரசாண்ட காலத்திலிருந்தவர்கள் இன்னும் உயிருடனிருப்பார்களேயானால் அவர்கள், தாங்கள் கொடுங்கோல் அரசாங்கத்தின் கீழ்பட்ட அவதிகளையும், தங்களை மிருகத் தன்மை வாய்ந்த அரசாங்கத்தார் வதைத்துச் சுறண்டியதையும் நினைத்து, அக்காலமொழிந்து, நல்ல காலம் பிறந்து, சுக வாழ்வு வாழ்வதை எண்ணி மகிழ்வர்.

புரட்சி காலத்திற்கப்புறம் ஜனித்த இளைஞர்கள், இப்பொழுது தாங்கள் அனுபவித்து வரும் வாழ்க்கை சிறிது கடினமாகவிருப்பினும், தங்களுடைய முன்னோர்கள் கனவில்கூட எண்ணியிராத ஒரு வாழ்க்கை பிற்காலத்தில் ஏற்படப் போவதை எண்ணியெண்ணி மகிழ்வர்.

### சாதித்ததென்ன?

சோவியத் அரசாங்கம் 17 வருஷ காலத்தில் சாதித்தவைகளை சற்று சிந்தித்துப் பார்ப்போமாக! புரட்சி நடைபெற்ற பிறகு ருஷியா

---

வர்களாயும், சோம்பேறிகளாயும் மந்த மதிகளாயும் இருந்தாலுங்கூட கல்லூரிப்படிப்புப்பெற்று விடுகிறார்கள். ஏனென்றால் அவர்களுக்குக் கல்லூரிப்படிப்பு பெறுவதற்குரிய சக்தியும் சௌகரியமுமிருக்கின்றன. ஏழை எளியவர் வீட்டுக்குழந்தைகள் புத்தி நுட்பமுடையவர்களாயினும் மேலும் விருத்தி செய்ய மிகுந்த ஆர்வமுடையவர்களாயினும், 14 வயதிலோ அதற்கு முன்போ பள்ளிக்கூடம் செல்வதை நிறுத்தி, தங்கள் பெரும்பகுதி வாழ்க்கையை, ஊனையும் உள்ளத்தையும் சிதைக்கும், கஷ்டகரமான வேலையில் பலியிட நேரிடுகிறது. தற்கால சமூகம், கல்வி கற்பதற்கு மார்க்கத்தைக்காட்டுகிறதே யொழிய சந்தர்ப்பத்தை அளிக்கவில்லை. அது உடம்பைப் பட்டினி போட்டு, மனதைப் போஷிப்பதில் திருப்தியடைகிறது.

# வேலையில்லாத் திண்டாட்டமெங்கே?

## முன்யோசனையுடன் வேலைத்திட்டம் போட்ட பயன்.

### சோவியத் ரஷியாவின் முன்னேற்றம்.

"நியூ லீடர்" எழுதுவது.

3 வருஷங்கள் உள் நாட்டுச் சண்டைகளும், பஹிஷ்காரங்களும், எதிர்ப்புகளும் ஏற்பட்டதின் காரணமாக நிலங்கள் பயிர் செய்யப்படாமலும், உற்பத்தி செய்யப்படும் இயந்திரங்கள் நிர்மூலம் செய்யப்பட்டும் கஷ்டப்பட்டது. அப்பொழுது ருஷியாவின் ஜனத்தொகை 163,000,000 இவர்கள் 182 வகுப்பகளும், ஜாதிகளுமாயிருந்தனர். 100க்கு70 படிக்காதவர்கள். உலகத்தில் ருஷியாவை எதிர்க்காத தேசம் கிடையாது. இந்த மாதிரியான ஒரு நிலைமையில், சோவியத் ருஷியா ஆக்கல் தொழிலைக் கைக்கொண்டது. முன் வைத்த காலைப் பின் வைக்காமலும், திரும்பிப் பார்க்காமலும் தைரியமாக முன்னோக்கிச் சென்றது.

### இயந்திர மயமாக்கினர்

பயிர்த் தொழில் செய்து பிழைக்கும் குடியானவர்கள் நிறைந்த அகன்ற ருஷியா தேசத்தை ஆலைத் தொழில் மய மாக்க வேண்டியிருந்தது. வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்களை தருவித்ததுமல்லாமல், இயந்திரமோட்டும் சாஸ்திரத்தைக் குடியானவர்களுக்குக் கற்றுக்கொடுக்க அன்னிய நாட்டு இயந்திர சாஸ்திர நிபுணர்களும் தருவிக்கப்பட்டனர்.

இயந்திரத்தையே கண்டிராத குடியானவனுக்குச் சிக்கலான இயந்திர சாஸ்திரம் இலேசில் மூளையில் புகுந்து விடுகிறதா? இல்லை. ஆரம்பகாலத்தில் விரயம் ஏற்படுவதும் சகஜம். இவைகளை யெல்லாம் ஜயித்தாக வேண்டியிருக்கிறது. ஆனால் ருஷியக் குடியானவர்கள் படிப்படியாக இயந்திர சாஸ்திரங்களை கிரஹித்துக்கொண்டனர். இப்பொழுது உலகத்தில் இயந்திர சாஸ்திரத்தில் நிபுணர் ருஷியர்கள் தான். இப்பொழுது ருஷியாவில் அன்னிய நாட்டு இயந்திர சாஸ்திர நிபுணர் ஒருவர் கூட இல்லை வேலை செய்த பழக்கத்தினாலும், பழகிக் கொடுப்பதற்குக் கலாசாலைகளை ஏற்படுத்தியும் ஏராளமான நிபுணர்களைசிருஷ்டித்து விட்டது.

### விவசாயம்

ஆலைத் தொழில் அபிவிருத்தி செய்தால் மாத்திரம் போதுமா? விவசாயமும் நடைபெற வேண்டும். இதற்குமுன் ருஷியக் குடியானவர்கள் தனித்தனியாக, சிறிய சிறிய நிலங்களை வைத்துக்கொண்டு பயிர்த்தொழில் செய்து வந்தனர். எல்லா குடியானவர்களும் ஒன்று சேர்ந்து எல்லா நிலத்தையும் ஒற்றுமையுடன் பயிர் செய்தால், ஏராளமான உற்பத்தி செய்யலாமென்று சொன்னால் அது முதலில் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அனேக ஆண்டுகளாகப் பண்டைப் பழக்க வழக்கங்களுக்கு அடிமைப் பட்டவர்களை திடீரென்று மாற்றுவது சுலபமான காரியமா? இதையும் சிறுகச் சிறுகச் செய்து முடித்தனர். இப்பொழுது ருஷியாவில், பயிர்த் தொழிலை அரசாங்கமே நடத்தி வருகிறது. தனிப்பட்டவர்களுக்கு உரிமை கிடையாது. தேசத்திற்கு வேண்டிய கோதுமை, இறைச்சி, பால், வெண்ணை அனைத்தையும் ஏராளமாக உற்பத்தி செய்கிறது.

### கல்வி.

ருஷியாவில் 182 வகுப்பினரும், ஜாதியினரும் இருந்தார்களென்று ஏற்கனவே கூறியுள்ளோமல்லவா? இவர்களில் 70 சத விகிதம் படிப்பில்லாதவர்கள். இவர்களுக்குக் கல்விச் செல்வமளிப்பது எவ்வளவு கஷ்டமென்பது கவனிக்கத் தகுந்தது. இருப்பினும் 1932ம் வருஷத்திற்குள் ருஷியாவில் படிப்பில்லாதவர்கள்100க்கு 9-பேர் தான்.

### தற்கால நிலைமை.

தற்சமயம் ருஷியாவில் வேலையில்லாத் திண்டாட்டமென்பதே கிடையாது. அதிகக் கூலி கொடுக்கப்படுகிறது. வேலை செய்யும்காலம் குறைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக எல்லா ஜனங்களும் சுக வாழ்வுவாழ்கின்றனர். ரகம் வாரியாகப்போதிய உணவுஎல்லோருக்கும்கிடைக்கிறது. உடைகள் தரிப்பதரிதாக விருந்தகாலம்போய்விட்டது. ஒரு தனிக்கூட்டத்தார் அனுபவித்துவந்த புஷ்பங்கள், வாசனைத் திரவியங்கள், நகைகள் ஆகியவைகள் எல்லோருக்கும் கிடைக்கின்றன.

வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம்வெகு சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது. புரட்சிக்கு முன் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் என்னுமிடத்தில் ஒரு மனிதனுக்கு 1சதுர கஜம் வீதம் பதினாயிரக் கணக்கானஜனங்கள் வசித்து வந்தனர். ஒரு அறையில் பலர் படுத்துறங்குது வழக்கம். மாத்துக் கட்டு போட்டு, ஒரு கட்டிலையுபயோகிப்பதுண்டு.

ஆனால் இப்பொழுதோவெனில், ருஷியாவில வீடு வசதிக் கஷ்டமே கிடையாது. எல்லோரும் விலாசமான வீடுகளில்வசிக்கின்றனர். இன்னும் வீடுகள் கட்டும் திட்டம் முடியவில்லை, மேலும்மேலும் நடைபெற்றுக் கொண்டேஇருக்கிறது.

### சுகாதாரமும், கலையும்.

புரட்சிக் காலத்திற்கு முன் ஒருவரும் கேட்டிராத விதமாக சுகாதார வசதிகளை சோவியத் சர்க்கார் ஸ்தாபித்திருக்கின்றனர். முதலாளித்துவம் தாண்டவமாடும் அன்னிய நாடுகளிலிருப்பதை விட அதிகமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு பெரியதேசீய முன்னேற்ற வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள், தியேட்டர்கள், சினிமாக்கள், கிளப்புகள், விளையாட்டுப் பந்தயங்கள் ஆகியவைகளை மறந்துவிடவில்லை. இவைகளும் ஏராளமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் தொழிலாளிகள்தான் அனுமதிக்கப்படுவார் என்ற நிர்ப்பந்தமிருக்கிறது.

சோவியத் ருஷியாவில் ஆண், பெண் என்ற வித்தியாசத்தின் காரணமாய்ச் சில வேலைகளைப் பெண்களுக்குக் கொடுப்பதில்லை என்பது கிடையாது. ஒரு குறிப்பிட்ட வேலைக்கு ஆணுக்கும், பெண்ணுக்கும், ஒரே கூலிதான் கொடுக்கப்படுகிறது.

இவ்வளவு வேலைகளையும் தியாகம், கஷ்ட உழைப்பு, ஊக்கம் ஆகியவைகளில்லாமல் செய்து முடிப்பது அசாத்தியம். இவ்வளவு ஊக்கத்திற்கும் காரணமென்னவென்றால், ஒவ்வொரு தொழிலாளியும், ருஷியா தேசம்தன்னுடைய தேசமென்பதை உணர்ந்தது தான். தான் செய்யும் வேலை ஒருசிலர் லாபமடைவதற்கல்லவென்றும், பொதுவாக ருஷிய மக்களுக்குத்தானென்பதையும் உணர்ந்ததனால்தான். தொழிலாளிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து உழைக்கின்றனர். அவர்களின் உழைப்பின் பயனாக தேசம் முன்னேற்றமடைவதையும் காண்கின்றனர். அவர்கள் இப்பொழுது ஆற்றிவரும் தொண்டு, எதிர் காலத்தில் தங்களுக்கும் தங்களுடைய சந்ததியாருக்கும் சுக வாழ்க்கையைக் கொடுக்கக் கூடியதென்பதையும் உணர்ந்திருக்கின்றனர். (ஜெயபாரதி)

---

### விவசாரத்தடை

கும்பகோணம் டவுன் எல்லைக்குள்ளும், அதைச்சுற்றி ஐந்து மைல் விஸ்தீரணத்திற்குள்ளும் விவசாரத் தடைச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

## ஜஸ்டிஸ்கட்சி கவுன்சில் பார்ட்டி மீட்டிங்கு.

11—12—34 தேதி காலை 10 மணிக்கு சென்னை பொப்பிலி ராஜா அவர்கள் பங்களாவில் ஜஸ்டிஸ் கட்சி கவுன்சில்பார்ட்டி மீட்டிங்கு ஒன்று நடைபெறும்.

அதுசமயம் கீழ்க்கண்ட விஷயங்கள் யோசிக்கப்படும்.

1. ஜாயிண்ட் பார்லி மெண்டரி கமிட்டி ரிபோர்ட்டை பரிசீலனை செய்வது.

2. கவுன்சில் பார்ட்டி கொராவின்மீது நம்பிக்கை இல்லை என்று சில மெம்பர்களால் அனுப்பப்பட்ட தீர்மானத்தைப்பற்றி யோசிப்பது

3. கட்சியின் அமைப்பைப் பற்றி தக்க முயற்சி எடுத்துக் கொள்ளுவது.

போப்பிலி ராஜா
ஜஸ்டிஸ்கட்சித் தலைவர்.

## விருதுநகர் சு. ம. சங்கத்திலிருந்து அடியில்கண்ட தந்தி வந்திருக்கிறது.

"இந்திய சட்ட சபைத் தேர்தலில் மோசம் நடந்ததற்காக சம்மந்தப்பட்டவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர கவுன்சில் பார்ட்டி மீட்டிங்கு போட்டிருந்தாலும்கூட மீட்டிங்கானது ஒரு காரியமும் நடைபெறாமல் கோபக்காரர்களின் கண்ணைத் துடைத்துவிட்டு ஒத்திப் போடப்படுவதற்காக போட்டதே ஒழிய உண்மையான எண்ணத்துடன் மீட்டிங் போடப்படவில்லை என்று தெரிய வருகின்றது. அப்படிச் செய்யும் பக்ஷத்தில் கக்ஷியின் மீதும், தலைவர்கள் மீதும் பொதுஜனங்களுக்கு நம்பிக்கையில்லாமல் போவதுடன் பார்ப்பனரல்லாதார் கக்ஷி என்பதாக வேறு ஒரு கட்சி ஏற்படுத்த வேண்டி ஏற்படும்"

## வருந்துகிறோம்.

நமதுநண்பரும்,தோழர் உ. கந்தசாமிஅவர்களின் தந்தையாருமான தோழர் உச்சப்பக்கவுண்டர் அவர்கள் 4-12-34ந்தேதி தூக்கநாயக்கன் பாளையத்தில் காலஞ்சென்றாரென்பதை யறிந்து வருந்துகிறோம். இயற்கையை செவ்வனே யுணர்ந்த தோழர் உ. கந்தசாமி அவர்களுக்கு நம் அநுதாபத்தை தெரிவித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

## சென்னை சட்டசபை உபதேர்தல்.

### ஜே. சிவஷண்முகம் அபேக்ஷை.

சமீபத்தில் சென்னை சட்ட சபையில் காலியாகும் தோழர் சாமி வெங்கடாசலம் அவர்கள் ஸ்தானத்தின் உப தேர்தலில் நிற்க வேண்டுமென்று பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் வேண்டுகோட்கிணங்கி, சென்னை கார்ப்பொரேஷனில் தாழ்த்தப்பட்டார் பிரதிநிதியாக விளங்கும் தோழர் ஜே. சிவஷண்முகம் எம். ஏ. அவர்கள் அபேட்சகராக முன்வந்துள்ளார். தோழர் சிவஷண்முகம் கல்லூரியிலிருக்கும் போதே தமது சமூகத்தாரின் முன்னேற்றமே தம் முயர்வெனக் கருதி பொது ஜன சேவையில் ஈடுபட்ட உண்மை ஊழியராவர். தேசபக்தி காங்கிரஸ்காரர்களுக்கு மாத்திரமன்றி பாரத நாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு என்னும் உயரிய நோக்கங் கொண்டவர். தாம் சென்னை கார்ப்பொரேஷன் கௌன்ஸிலில் ஸ்தானம் வகித்தது முதல் விசேஷமாக தாழ்த்தப்பட்டாருக்கும், பொதுவாக பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாரென்கிற பாகுபாடின்றி எல்லா வகுப்பினருக்கும் தம்மாலியன்றவளவு உதவி புரிந்து வந்திருக்கின்றார்.

இவர் சென்னை சட்ட சபையில் ஸ்தானம் பெறுவாராஞல் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப்பெரிதும் நன்மை செய்வாரென்று பலரும் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனல் காங்கிரசு பிரதிநிதியான செட்டியாரின் ஸ்தானத்தை காங்கிரசு வாதியல்லாத ஒருவருக்கு காங்கிரசுகாரர்கள் விட்டுக் கொடுப்பார்களாவென்று கேட்கலாம். தாழ்த்தப் பட்டாரின் நன்மைக்காகவே உயிர் வாழ்வதாகச் சொல்லும் காங்கிரஸ்காரர்களாயினும், ஜஸ்டிஸ் கட்சியினராயினும், எக்கட்சியிலும் சேராத பிராமண, பிராமணரல்லாதாராயினும், மேடை பிரசங்கிகளாயினும், பத்திரிகாசிரியர்களாயினும் தாழ்த்தப் பட்டார் முன்னேற்றமென்கிற முறையில் இச்சந்தர்ப்பத்தை விட்டுக் கொடுத்து எழுதியதையும், பேசியதையும் செய்கையில் காட்டுவது தான் நீதியும், நியாயமுமாகும் என தோழர் சி. பி. சரவணம் எழுதுகிறார்.

—0—

## திருச்சியில் கலப்புமணம்.

திருச்சி தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கத்தினுதரவில் புத்தூர்பெத்தாச்சிசெட்டியார் பங்களாவில் 2-12-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு புதுக்கோட்டை தோழர் இராஜம் அவர்களுக்கும் தஞ்சை ஜில்லா போர்டுஇஞ்சினியரிங் ஆபீஸ் தோழர் சிற்சபேசன் அவர்களுக்கும் கலப்புமணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மணமக்களிருவரும் தோழர் நீலாவதி அவர்கள் இல்லத்திலிருந்து மாலை4மணிக்கு வந்துசேர்ந்தனர். சுமார் 2000 தோழர்கள் ஆடவர் பெண்டிர் கூடியிருந்தனர். சங்கசார்பில் தோழர் ராமசுப்ரமண்யம் மணமக்களை அறிமுகப்படுத்தி மாலை சூட்டியதும் தோழர் வக்கீல் டி. பி. வேதாசலம் தலைமையில் மணமக்கள் உறுதிமொழிகூறி, மாலைமாற்றிக்கொண்டனர். பின் தோழர்களான சாமிசிதம்பரஞர், கே. முத்துசாமி வல்லத்தரசு பி. எ. பி. எல். எம். எல். சி,எஸ். நீலாவதி, சென்னை டி. என். ராமன், டேவிஸ் ஆகியோர் பேசினர். மணமக்களின் நண்பர்களால் பல வெகுமதி பொருள்கள் வழங்கப்பட்டன. தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனம் கூறி இரவு 8மணிக்கு முடிந்தது. இரவு 8½ மணிக்கு தோழர் நீலாவதி ராமசுப்ரமண்யம் வீட்டில் ஒரு சமபந்தி விருந்து நடைபெற்றது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## தஞ்சை சுயமரியாதைச் சங்கம்.

தஞ்சை ஜில்லாசுயமரியாதைமகாநாடு இம்மாதக்கடைசிக்குள் நடத்த வேண்டியிருப்பதால் வரவேற்புக்கமிட்டிஅமைக்க 12-12-34ந்தேதி மாலை 4-மணிக்கு தஞ்சை சுயமரியாதை சங்கக்கட்டிடத்தில் கூட்டம் நடைபெறப்போவதால் இதைக்கண்ணுறும் இச்ஜில்லாவில் உள்ளஒவ்வொரு சங்கமும், அபிமானிகளும் அன்று அவசியம்வந்து சேரும்படிகோரப்படுகிறது. அவகாசம் இன்மையால் தனித்தனி அழைப்பு அனுப்ப சௌகரியப்படவில்லை. இதையே ஒவ்வொரு தோழரும் அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கோறப்படுகிறது என காரியதரிசி எழுதுகிறார்.

## சேலம் ஜில்லா ஓமலூர் தாலூக்கா ஆதிதிராவிட மகாஜன சபா.

### இந்திய சட்டசபைக்கு தாழ்த்தப்பட்டார் பிரதிநிதித்துவம்,

ஷை தாலூக்கா ஆதிதிராவிடர்களின் பொதுக்கூட்டம் 4-12-34ந் தேதி மாலை 5½மணிக்கு காமலாபுரம் ஆதிதிராவிடத்தெருவின் முன்பாகத்திலுள்ள காலிமைதானத்தில் நடைபெற்றது. தாலூக்கா ஆதிதிராவிட மஹாஜன சபையின் பிரசிடெண்டு தோழர் ஓங்காளி அவர்கள் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு 100 கணக்கான ஆதிதிராவிட பிரதிநிதிகளும், சில பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். அவ்வமயம் தாலூக்கா ஆதிதிராவிட மஹாஜன சபையின் காரியதரிசி தோழர் எ. சின்னசாமி அவர்களும் ஷை மஹாஜன சபையின் வைஸ் பிரசிடெண்டு உயர்திருவாளர் எஸ். பழனியப்பன் அவர்களும் இந்தியசட்டசபையும் தாழ்த்தப்பட்டார் பிரதிநித்வமும்என்பதைப்பற்றியும்தாழ்த்தப்பட்டார் சார்பாக உண்மைத்தலைவர்களை நியமனம் செய்யும் விஷயத்தைப்பற்றியும் நீண்டநேரம் பேசியபின் கீழ்கண்டதீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

1. மாட்சிமை தங்கிய இந்திய சக்கரவர்த்தி சக்கரவர்த்தினி அவர்களுக்கு இம்மஹாநாடு முழுமனதான வந்தனத்தைச் செலுத்தி நன்றிபாராட்டுகிறது.

2. தாழ்த்தப்பட்ட மக்களுக்கென இந்திய சட்டசபையில் நியமிக்கப் போகும் ஸ்தானத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மைத்தலைவரும் கிராமம் தோறும்நுழைந்து தேகச்சிரமத்தைப்பாராமல் அரும்பாடுபட்டுவரும்கோயமுத்தூர் ஆர். வீரையன் அவர்களை இந்தியசட்டசபையின் பிரதிநிதியாய் நியமிக்கவேண்டுமென்றுமேன்மைதங்கிய வைஸ்ராய் அவர்களையும், இம்மஹாநாடு வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறது. அதன் பின் வந்தனோபசாரத்துடன்இரவு 7½மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

(ஒரு நிருபர்)

## ஈ. வெ. இராமசாமி.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தோழர்கள் P. ஜீவானந்தம், A. பொன்னம்பலஞர், S. நீலாவதி அம்மையார் முதலியவர்களுடன்8-12-34ந் தேதிஇரவு ஈரோட்டை விட்டுப் புறப்பட்டு 9-12-34ந்தேதி விருதுநகருக்குச் செல்வார். அங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவார்கள். பின் நிலக்கோட்டை முதலிய விடங்களுக்குச்சென்று விட்டு 12ந் தேதி கீழாநூலுக் குச்சென்று அங்கு அன்று நடைபெறும் சுயமரியாதைத் திருமண ஒப்பந்தத்தில் கலந்துகொள்வார்கள். 13ந்தேதி வாக்கில் ஈரோடு திரும்பு வார்கள்.

### "சுதந்திரா"

திருச்சி தோழர்களான எஸ். நீலாவதி ராம சுப்பிரமணியம் இரண்டாவது குமாரத்திக்கு "சுதந்திரா" என்று பெயர் சூட்டி யிருப்பதாக தெரிவிக்கிறார்.

## காலமானர்.

பிராமணரல்லாதார் முன்னேற்றத்தில் பற்றுடையவரும், தோழர்கள் ஈ. வெ. கிருஷ்ணசாமி—ராமசாமி அவர்களின் குடும்ப நண்பரும், தோழர் உ. க. வின் தகப்பனருமான தோழர் உச்சப்பா அவர்கள் தமது அறுபதாவது வயதில் கோபி தாலூக்கா தூக்கநாயக்கன் பாளையத்திலிருக்கும் தமதில்லத்தில் 4-12-34ந்தேதி செவ்வாய்க்கிழமை 5மணி சுமாருக்கு உயிர் நீத்து வாழ்க்கையின் இறுதியடைந்தார், சுயமரியாதை இயக்கப் படியும், சிறப்பான ஊர்கோலத்துடனும் பிரேத தகனம் நடைபெற்றதென தோழர் டி. பி. பாக்ஷா தெரிவிக்கிறார்.

# ஜஸ்டிஸ் கட்சியின் புனருத்தாரணம்.

ஜஸ்டிஸ் கட்சியில் சட்டசபை நடவடிக்கைகளைப் பொருத்த வரை கவனிப்பதற்கு என்று கவுன்சில் பார்ட்டி என்பதாக ஒரு பிரிவு இருந்து வரும் விஷயம் யாவரும் அறிந்ததாகும். அந்தப் பிரிவுக்கு முக்கிய கொரடாவாக அதாவது சட்டசபையைப் பொருத்த வரையில் மெம்பர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கட்சி சார்பாய் தெரிவிப்பதற்காக தெரிந்தெடுக்கப்பட்டவரை கொரடா என்று சொல்லுவது. அந்த ஸ்தானத்தில் தோழர் குமாரராஜா முத்தய்யா அவர்கள் இருந்து வருகிறார்.

சமீபத்தில் இந்திய சட்டசபைக்கு நடந்த தேர்தல்கள் விஷயமாய் தோழர் ஷண்முகம் அவர்களுக்கும் தோழர் ராமசாமி முதலியார் அவர்களுக்கும் ஏற்பட்ட தோல்விக்கு முக்கிய காரணம் தோழர் குமாரராஜா முத்தய்யா செட்டியார் அவர்கள் சரியானபடி நடந்து கொள்ளாததே என்ற ஒரு அபிப்பிராயம், கட்சிப் பிரமுகர்களுக்குள் ஏற்பட்டு விட்டது.

மேற்படி தோல்விகளானது தமிழ் நாட்டில் ஜஸ்டிஸ் கட்சியின் நிலைமையை பாதிக்கக் கூடியதாய் போய்விட்டதால் அந்த வருத்தத்தை உத்தேசித்தும் மேலால் இந்தப்படி நேராமல் இருக்க வேண்டும் என்பதை உத்தேசித்தும் சில முன் ஜாக்கிரதையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாய்ப்போய் விட்டது.

ஆனபோதிலும் கட்சிப் பிரமுகர்களில் ஒருவரைப்பற்றியே இந்தப்படி நினைக்க வேண்டி ஏற்பட்டதானது சரியாய் இருந்தாலும், தப்பாய் இருந்தாலும் கட்சிக்கு மிகவும் நெருக்கடியான நிலைமை என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள் நெல்லூர் மகாநாட்டில் நடந்து கொண்ட போக்கானது கட்சியை எவ்வளவு கேவல நிலைக்குக் கொண்டு வரவேண்டுமோ அவ்வளவு கேவல நிலைக்குக் கொண்டு போய் விட்டது.

அதன் பிறகு தஞ்சாவூர் மகாநாடானது உலகமே சிறிக்கும்படியான நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது என்றாலும் பொப்பிலி ராஜா அவர்கள் கட்சித் தலைவர் ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டதின் பயனாய் ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி நான்குபேர் மதிக்கவோ அதைப்பற்றி நினைக்கவோ ஆகிய நிலைமையாவது இருந்து வந்தது.

ஆனால் இப்போது இந்திய சட்டசபைத் தேர்தல்களின் முடிவின் பயனாய் மறுபடியும் கேவல நிலைமைக்குப் போய்விடுமோ என்கின்ற பயமும் அதைரியமும் கட்சியில் அனுதாபமுடைய சுயநலமில்லாத ஒவ்வொருவருடைய மனதிலும் தாண்டவமாடிக் கொண்டு இருக்கின்றது.

இந்த நிலையானது கட்சியின் பிரவி எதிரிகளாகிய பார்ப்பனர்களுக்குமிகுந்த கொண்டாட்டத்தை ஏற்படுத்தி விட்டது.

ஆகவே இந்தசமயத்தில்கட்சிப் பிரமுகர்கள் ஒன்று கூடி ஏதாவது ஒரு பந்தோபஸ்தானதும் நிர்மாணமானதுமான காரியத்தைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமேயாகும். அதைப்பற்றி நமக்கும் பல தீர்மானங்களும் வியாசங்களும் வந்திருக்கின்றன.

தோழர் குமாரராஜா முத்தய்யா அவர்களும், ராஜா சர் அண்ணாமலை அவர்களும் கட்சிக்காக தாராளமாக பணம் உதவியும் செலவு செய்தும் இருப்பார்கள் என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அதற்கு தகுந்ததற்கும்மேலான பலன்களை அவர்களும் அடைந்திருக்கிறார்கள் என்று சொல்லப் படுவதையும் நாம் மறுக்கவில்லை.

யாதொரு சுயநலத்தையும் கருதாமல் கட்சிக்கு வேலை செய்தவர்கள் யார் என்று கண்டு பிடிப்பது கஷ்டமான காரியமாகும். கண்டுபிடிக்கப் பட்டாலும் கட்சி "பிரமுகர்கள்" அதை ஒப்புக் கொள்ளவுமாட்டார்கள் ஆதலால் அதைப்பற்றி பேசுவதில் பயனில்லை

இப்போது 11ந் தேதியில் நடக்கப்போகும் கவுன்சில் பார்ட்டி மீட்டிங்கினால் கக்ஷியில் பிளவு ஏற்படாமல் படிக்கும் இனியும் இந்த மாதிரியானகாரியங்கள் நிகழாமல் படிக்கும் இருக்கும்படியான ஒரு முடிவுக்கு வர வேண்டியது மிகவும் அவசியமான காரியம் ஆகும்.

அது வேராஜ தந்திரமுமாகும் தோழர் பனகால் அரசர் இப்போது இருப்பாரேயானால் இந்த மாதிரி ஒரு மீட்டிங்கு போடாமலே இரண்டாம் பேருக்கு தெரியாமல் என்ன என்ன செய்ய வேண்டுமோ அதை யெல்லாம் செய்து விடுவார் ஆனால் இப்போது வெளிப்படையாகவே எல்லாம் செய்யவேண்டியதாகி விட்டது. கக்ஷிகள் ஏற்பட்ட இந்த நிலையானது இன்று பார்ப்பனருக்கு மாத்திரமல்லாமல் அவர்கள் மூதாதைகளான அரசாங்கத்துக்கும் கொண்டாட்டமாய்விடும் ஏனெனில் இப் பிளவால் அரசாங்கம் ஜஸ்டிஸ் கக்ஷியை தங்கள் கை ஆயுதமாக உபயோகித்துக்கொள்ள கருதிவிடுவார்கள். எப்படி என்றால் ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டமல்லவா?

ஆகையால் சம ஒழுங்கு விதி சம்பந்தமான முறையில் இல்லாமல் தலைவர் தன் சொந்த முறையில் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அவர்கள் மூலம் உண்மையை கண்டுபிடித்து தகுதி அற்றவர்களிடம் ராஜீனமா பெற்றுக்கொள்ளுவது நல்ல காரியமாகுமென்று நமக்குத் தோன்றுகின்றது.

அப்படிக்கில்லையானால்ஜஸ்டிஸ் கக்ஷி கவுன்சில் பார்ட்டி மீட்டிங்குமாத்திரமல்லாமல் தென் இந்திய நல உரிமைச் சங்க நிர்வாக சபை மீட்டிங்கும், ஜஸ்டிஸ் கக்ஷி கார்ப்பரேஷன்(முனிசிபல்)பார்ட்டிமீட்டிங்கும்இப்படியேஇன்னும் பலதுகள் போடவேண்டி வரும். பிறகு அவற்றில் இருந்து கக்ஷிகள் முளைக்கும் இந்த நிலையானது கொள்கை இல்லாமலும் கக்ஷிக்கு யாதொரு பயனும் இல்லாமலும், கட்சியின் பெயரைக்கொண்டும் பிழைத்து வருகின்ற கூட்டத்துக்குஒரு பெரிய வெள்ளாமையாக முடிந்து அவர்களது தொல்லைக்கும் விஷமத்துக்கும்கட்சி ஆளாக வேண்டி வரும் என்று பயப்படுகின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சியானது பணக்காரர் ஜமீன்தார்கள் ஆகியவர்கள் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்பதில் இந்த மாகாணத்தில் உள்ள எந்த ஜஸ்டிஸ் கட்சியாரையும் விட நாம் முன்னணியிலேயே இருக்கிறோம்.

இன்றைய நிலைமையைக் கூட அதற்கு அனுகூலமாகத் தான் நாம் கொள்ளுகின்றோம்.

ஆனால் சொந்த குரோதங்களுக்கும் பிளவுகளுக்கும் வீண் தொல்லைகளுக்கும் இடமில்லாமல் எவ்வளவு செய்துகொள்ள வேண்டுமோ அவற்றை செய்துகொள்ள வேண்டியது புத்திசாலித்தனமாகும்.

எதற்கும் தென் இந்திய நல உரிமைச் சங்க நிர்வாக மீட்டிங் ஒன்று முதலில் கூட்டி அதிலிருந்து ஒரு முடிவை முதலில் செய்துகொள்வது மிக்க பலந்தருவதாகும் என்று அபிப்பிராயப்படுகின்றோம்.

இது சம்மந்தமாக வந்த பல பல தீர்மானங்களையும் சேதிகளையும் வெளியிடாமல் அவர்களுக்கெல்லாம் நமது அபிப்பிராயத்தை தெரிவித்து விடவே இதை எழுதினோம். ஆதலால் அவ்விஷயங்களைபிரசுரிக்காததற்காக நேயர்கள் மன்னிப்பார்களாக.

---

## கீழஈரால் சுயமரியாதைத் திருமணம்

### தோழர்கள் புறப்பாடு.

தோழர் ஈ. வெ. ராமசாமியவர்களும் அவரது கோஷ்டியாரும் 12-12-34 தேதி கீழஈராலில் நடைபெறும் சுயமரியாதைத்திருமணத்திற்கு வருவதையறிந்து தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் முதலிய இன்னும் பலவிடங்களிலிருந்து ஏராளமான சுயமரியாதைத் தோழர்கள் விஜயம் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

---

## மணமக்களின் மன ஒப்பந்த விழா.

12—12—34 புதன்கிழமை காலை 9-மணிக்கு எனது சகோதரி ராஜம்மாளுக்கும், கீழஈரால், கரு.நா. த. சிவத்தையா அவர்கள் புதல்வன் தில்லை நடராஜனுக்கும் ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமிப்பெரியார் அவர்கள் தலைமையில் கீழஈரால் ராஜாஸ்கூலில் நடைபெறும் வாழ்க்கைத்துணை ஒப்பந்த விழாவிற்கும், அன்று நடைபெறும் வைபவங்களுக்கும் தாங்கள் குடும்ப சமேதராய் விஜயஞ் செய்யக்கேட்டுக்கொள்கிறேன். என தூத்துக்குடி தோழர் கு. பழனிச்சாமி அறிவிக்கிறார்.

# ஒரு தோழரின் கடிதத்திற்கு
# ஈ. வெ. ராமசாமி பதில்.

"அன்புடைய ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கட்கு. க்ஷேமம். க்ஷேமத்துக்கு எழுதுங்கள். வெகு நாளாகக்கடிதப் போக்குவரத்தில்லை. நானும் உங்களுக்குச் சில விஷயங்கள் பற்றிக் கடிதம் எழுத வேண்டும் என எண்ணியெண்ணி முடியாது போயிற்று.

நான் சொல்ல விரும்பும் விஷயம் சிலவுண்டு. உங்கள் இயக்கம் உயர்வானது. அவ்வியக்கம் பலப்பட்டு எல்லா வகுப்பாருடைய உதவியும் பெற வேண்டுமானால் நீங்கள் தற்காலம் அனுஷ்டித்து வரும் முறை சரியல்லவென்பது எனது உண்மையான எண்ணம். உங்கள் இயக்கத்தில் எனக்கு ஆர்வமுண்டு. 10, 15 வருஷ காலமாக இவ்வியக்கத்தின் கொள்கை காரணமாய் நான் இந்தியாவில் நடைபெறும் ஒரு இயக்கத்திலும் நேர் முகமாய்க் கலந்து கொள்ளாது இருந்து வந்திருக்கிறேன். ஏனெனில் ஒவ்வொரு இயக்கத்திலும், சிற்சில நல்ல அம்சங்களிருக்கின்றன. பல கெட்ட அம்சங்களும் உண்டு.

சமதர்மக் கொள்கையை ருஷ்யாவில் கொண்டாடும் முறையில் இந்தியாவில் புகுத்துவது முடியாது. அவர்களது பழைய கொள்கைகளையே மாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

நீங்கள் செய்து வரும் பிரசாரத்தில் த்ற்காலம் இந்தியாவில் இருக்கும் ஒரு இயக்கத்துடனும் சேர்ந்திருப்பது சரியல்ல. அப்பொழுது உங்கள் இயக்கம் நாளுக்கு நாள் பலஹீனப்படும். விரோதிகளும், போலி சிநேகிதர்களும் ஏற்படுவார்கள்.

சமதர்மக் கொள்கைக்கு வேலை செய்ய முன் வருபவர்கள் யாதொரு விதமான வருமானத்தையும் எதிர் பார்த்தவர்களாயிருக்க முடியாது. ஏனெனில் இது ஏழைகளது இயக்கம்.

நமது நாட்டில் தோன்றியுள்ள காங்கிரஸ், ஜஸ்டிஸ், மற்றய இயக்கங்கள் எல்லாம் முதலாளிகளுடையவும் நிலச்சுவான்தார்களுடையவும் இயக்கமாகும். இவ்வியக்கத்தில் ஜஸ்டிஸ் இயக்கம் ஜாதி வித்தியாசம் பாராதது என்று எண்ண முடியவில்லை. அதிலும் முதலியார், நாயக்கர் சண்டையிருக்கிறது. காங்கிரஸும் அப்படித்தான். நீங்கள் ஜஸ்டிஸ் கட்சி இயக்கத்தில் சென்னையில் சேர்ந்து பிராமணர், பிராமணர் அல்லாதார் பிரச்னையைக் கிளப்பிப் பேசினீர்கள். உங்கள் கொள்கைக்கு அப்பிரச்னையே ஏது? அப்பிரச்னை யொன்றிருப்பதாக எண்ணியுமிருக்கக்கூடாது; அதைப்பற்றிப் பேசியுமிருக்கக் கூடாது. அவ்வாறு பேசியதிலிருந்து உங்கள் சமதர்மக் கொள்கையில் உங்களுக்கு பூரண நம்பிக்கை இன்னம் ஏற்படவில்லை யென்றோ, அல்லது அதனை நீங்கள் அறியவில்லை யென்றோ என்போலுள்ளவர்கள் நினைக்கவேண்டியேற்படுகிறது.

நான் இவ் விதம் எழுதுவதால் என்பேரில் வருத்தமடையமாட்டீர்கள் என்பது எனது நம்பிக்கை. இப்பொழுது காங்கிரஸ் அசம்பளித் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டது இவர்கள் சாதிக்கப் போவதொன்றுமில்லை. யாருக்குச் சௌகரியம் ஏற்பட வேண்டுமோ அவர்கட்கு ஏற்படப் போவதில்லையென்பது எனது முடிவு. ஏன்? அது முதலாளிகளால், கருப்பு முதலாளிகளால் வெள்ளை முதலாளிகளுக்கு விரோதமாய் ஏற்பட்ட இயக்கமாய் விட்டது. அதனைத் திருத்தியமைக்க மாட்டாமல் மகாத்மாவும் அவ் வியக்கத்தை விட்டு கிராமப் புனருத்தாரணத் திட்டத்திற்கு ஆயத்தம் செய்கிறார். இவ் வியக்கத்தைக் கவனிக்கையில் உள் நாட்டு முதலாளிகளின் சௌகரியத்திற்காக ஏழைகள் உழைக்க வேண்டிய காலமும் வரும் எனத் தெரிகிறது. இவர்களினின்றும் தப்பிக்க வேண்டி மறுபடியும் ஏழைகள் போராட வேண்டி வரும்.

ஆகவே சமதர்மக் கொள்கையென்று அறியக் கூடாத முறையில் எல்லா இயக்கத்தவர்களும் நமக்கு உதவி செய்யக்கூடிய நிலையில் ஓர் திட்டம் செய்து வேலையாரம்பிக்க வேண்டும். அதற்கான வேலையைத் தமிழ் ஜில்லாக்களில் ஆரம்பிப்பது அவசியம். நீங்கள் செய்துகொண்டு வரும் முறையில் மாறுதல் செய்ய வேண்டியது அவசியம் என்பதையாவது உணர்கிறீர்களா? நான் சொலவது தவறுதல் எனக் கண்டால் அதை யாவது தெரிவியுங்கள். பிற பின்."

என்று எழுதி இருக்கிறார்.

இதை அனுசரித்து இன்னும் சிலரிடமிருந்தும் பல கடிதங்களும் வந்திருக்கின்றன. ஆனால் அவர்கள் எல்லோருமே பார்ப்பன நண்பர்கள் ஆகலால் அவற்றிற்கெல்லாம் இந்த பதில் பயன்படும் என்று எண்ணுகிறேன்.

## ஈ. வெ. ரா. பதில்.

அன்புள்ள தோழர் அவர்களுக்கு வணக்கம்.

தங்கள் 24-11-34ந் தேதி கடிதம் கிடைத்தது. அதை கவனித்துப் பார்த்தேன். அதில் "எனது" இயக்கத்தைப் பற்றி புகழ்ந்திருப்பது குறித்து மகிழ்கிறேன். ஆனால் அதில் நான் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்ததும் பிராமணர்—அல்லாதார் என்கின்ற பிரச்சினையைக் கிளப்பினதும் தங்களுடைய சம்மதத்தைப் பெறவில்லை என்பது தெரிகின்றது. ஆனால் தாங்கள் சமதர்மத்தை மனப்பூர்வமாய் ஆதரிப்பவர்கள் என்றும் அதிலிருந்து தெரிகிறது.

நான் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்றபிரச்சினையை இன்று நேற்று அல்லாமல் இந்த 10 வருஷ காலமாகவே "கிளப்பிவிட்டு" அதற்காக வேலை செய்து வருவது தாங்கள் அறிந்ததாகும்.

இந்த நாட்டில் பாமர மக்களுக்காகவோ ஏழை மக்களுக்காகவோ ஒருவன் வேலை செய்ய வேண்டுமானால் அவன் உண்மையான தொண்டனாய் இருப்பானானால் அவனுக்கு முதலில் பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற பிரச்சினை தான் முன் நிற்கும். ஏனெனில் அப்பிரச்சினையைக் கிளப்பிவிட்டுஅதன்மீது மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி உண்டாகச்செய்து விட்டால்தான் அத்தொண்டினது வேலைசிறிதாவது பயன்படக் கூடியதாகும்.

மற்றும் நமது பாமர மக்களின் குறைவுஎன்ன? அவர்களதுதேவை என்ன? என்பதை ஒருவன் ஜாதி மத செல்வ அபிமானம் இல்லாமல் பார்ப்பானேயானால் அவனுடைய நேர்மையான நாட்டம் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரச்சினையில் தான் கொண்டு போய் விடும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். ஒரு சமயம் நான் பார்ப்பனரல்லாதாராய் இருக்கிறேன் என்பதினால் எனக்கு இந்த அபிப்பிராயம் தோன்றிற்றோ என்பது சம்சயத்துக்கு இடமுண்டாக்கக் கூடியதாய் இருந்தாலும் இருக்கலாம்.

பார்ப்பனர்— பார்ப்பனரல்லாதார் பிரச்சினை இன்றைய தினம் பார்ப்பனர் என்று சொல்லிக்கொள்ளும் சில ஆட்களைப் பொருத்ததோ, அல்லது பார்ப்பனர் அல்லாதார் என்று சொல்லிக் கொள்ளும் சில ஆட்களையும் பொருத்ததோ அல்ல என்பதையும், ஆனால் அது இன்று ஒரு பார்ப்பனன் என்று தன்னை சொல்லிக் கொள்ளுகின்றவன் அவன் உணர்ச்சியில்,ஒழுக்கத்தில் எப்படிப் பட்டவனாய் இருந்தாலும் அதற்காக கவலைப்படாமல் தனக்கு என்ன என்ன உரிமை எதிர் பார்க்கிறான், —என்ன என்ன உரிமை அனுபவிக்கிறான் என்பதையும் அதே மாதிரியாகவே தன்னை ஒரு பார்ப்பனரல்லாதான் என்று கருதிக் கொண்டிருப்பவனே சொல்லப்படுகின்றவனே ஆன ஒருவன் தனக்கு என்ன உரிமை உண்டு என்று எண்ணிக் கொண்டிருக்கிறான் என்பதோடு வாழ்க்கையில் என்ன உரிமை அனுபவிக்கிறான் என்பதையும் மற்றும் பார்ப்பனன் என்று தன்னை சொல்லிக் கொள்ளுபவனால் அல்லாதவனுக்கு என்ன என்ன உரிமை—நிலைமை உண்டு என்று எழுதி வைத்த ஆதாரத்தையும், அமுலில் இருக்கும் அனுபவத்தையும் பொருத்ததே ஒழிய வேறில்லை என்பதை தங்கள் ஞாபகத்துக்குக் கொண்டுவர நான் பணிவாய் ஆசைப்படுகின்றேன்.

ஆதலால் நான பார்ப்பனர்—அல்லாதார் பிரச்சினையில் எனது காலத்தைச் செலவழிப்பது குற்றம் என்று என்னால் கருத முடியவில்லை.

ஒரு மனிதன் சமதர்மக் கொள்கைக்காரனாய் இருப்பானானால் அவன் தனது உள்ளத்தில் மற்றொரு மனிதனை தனக்கு சமமாகவும், மற்றொரு மனிதனுக்கு தான் சமமானவனென்றும் கருதும்படியான ஒரு உணர்ச்சியைக்கொள்ளவில்லையானால் அல்லது கொள்ளும்படி செய்யவில்லையானால் சமதர்மத்தைப்பற்றி பேசும் பேச்சு எதற்கு என்பதும், அதற்காக பாடுபடுவது எதற்கு என்பதும் என் சிறிய புத்திக்கு விளங்கவில்லை.

ஜஸ்டிஸ் கட்சியிலிருப்பவர்கள் அயோக்கியர்களாக இருக்கலாம்- காங்கிரசில் இருப்பவர்கள் யோக்கியர்களாக இருக்கலாம் என்றே

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

# பகுத்தறிவு.

ஈரோடு, 1934-௵ டிசம்பர்-மீ 9-௨

## தோழர் சத்தியமூர்த்தி அய்யர்.

"யாருக்காவது பயித்தியம் பிடிக்கச் செய்ய வேண்டுமானால் அவருடைய யோக்கியதைக்கு மீறிய பவுசு வரும்படி செய்து விட்டால் போதும்" என்றுஒரு பழமொழி உண்டு.

அதுபோல் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களுக்கு அவர் யோக்கியதைக்கு மீறின (அதாவது 8-பங்கு 10-பங்கு அதிகமான) பவுசு ஏற்பட்டவுடன் இப்போது அவர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைக்கப்படவேண்டிய அளவுக்கு வந்து விட்டார். தலைகால் தெரியாமல் தாண்டவமாடுகிறார்.

இந்திய சட்டசபைக்கு சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் மெம்பராய் விட்டார் என்று சொல்லப்பட்டவுடன் அவர் பேச வாயைத் திறந்ததும் சென்னை கவர்னர் பிரபுவுக்கு ஒரு உத்திரவு போட்டார்.

அதாவது "இந்திய சட்டசபைத்தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்று விட்டதால் கவர்னர் மாகாண சட்டசபையை கலைத்து மந்திரிகளை வீட்டுக்கு ஓட்டிவிட வேண்டும்." என்று சொல்லி விட்டார்.

இந்திய சட்டசபைத்தேர்தலில் காங்கிரஸ்காரர் ஜெயித்ததற்கும், மாகாண சட்டசபைக்கும், என்ன சம்மந்தம் என்பது தோழர் சத்தியமூர்த்திக்கு சுய அறிவு இருந்தால் புரியாமல் இருக்குமா என்று கேட்கிறோம்,

இந்தியசட்டசபைக்கு இதற்கு முன்புங்கூட வெகுகாலமாக பார்ப்பனர்களாகவே தான வெற்றி பெற்றுவந்திருக்கிறார்கள். அங்குஎல்லோரும் பார்ப்பனர்களாக இருந்த அந்தக்காலத்தில்தான் ஜஸ்டிஸ் மந்திரிகள் உச்சஸ்தானத்தில் இருந்தார்கள். அப்போதெல்லாம் சென்னை சட்டசபை கலைக்கப்பட ஏற்படாத அவசியம் இப்போது என்ன ஏற்பட்டு விட்டது என்பது நமக்குப்புரியவில்லை.

ஆவணியாவிட்டத்திற்கும்அப்துல் காதர் சாயபுக்கும் பொருத்தம் வைப்பதுபோல இந்திய சட்டசபைத் தேர்தலுக்கும் மாகாண சட்டசபை மந்திரிகளுக்கும் பொருத்தம் வைத்து அர்த்தராத்திரியில் குடை பிடிக்கிறார் நமது சத்தியமூர்த்தி அய்யர்.

அதோடு நிற்காமல் அதற்கு அடுத்த இரண்டொரு நாளைக்குள் சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களை சட்ட மெம்பர் வேலையை ராஜினாமாச் செய்து காலி செய்யும்படி கேழ்க்கச் சொல்லி கவர்னருக்கு மற்றொரு உத்திரவு போட்டிருக்கின்றார். இதிலிருந்து தோழர் சத்தியமூர்த்தி அய்யருக்கு தலைதிருகிப் போய்விட்டது என்பது நன்றாய் தெரிகின்றது. இனி 2, 3 நாளையில் ஹோம் மெம்பரைப்பற்றியும் ஒரு உத்திரவு போட்டுவிடுவார்.

தோழர்கள் சி. பி. ராமசாமி அய்யர், கே. சீனிவாசய்யங்கார் முதலிய பார்ப்பனர்கள் இந்தஉத்தியோகங்களில்இருந்த போதுசர் கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் பேசியதையும், செய்ததையும் போல் பல பங்கு அதிகமாய் பேசியும் செய்தும் இருக்கிறார். அப்பொழுது தோழர் சத்தியமூர்த்திக்காவது, வேறுபார்ப்பனர்களுக்காவது இந்த யோசனைகள் தோன்றவில்லை.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் கவர்னருக்கு உத்திரவு போட்ட விஷயங்களில் நியாயம்இருந்தாலும் இல்லா விட்டாலும் இதில் அறிவுடைமை இருந்தாலும், முட்டாள் தனம் இருந்தாலும் அவற்றிலிருந்து ஒரு காரியம் மாத்திரம் நன்றாய் விளங்குகின்றது.

அதென்னவென்றால் சத்தியமூர்த்தி அய்யருடைய ஞாபகமும், அவர் ஜாதியாருடைய ஞாபகமும் சதாகாலம் பார்ப்பனரல்லாத மந்திரிகள் மீதும், பார்ப்பனரல்லாத நிர்வாகசபை மெம்பர்கள் மீதும் இருந்து கொண்டு இவர்களை எப்பொழுது ஒழிப்பது என்கின்ற கவலையிலேயே இருந்து வந்திருக்கின்றது என்பதேயாகும். இந்தஒரு முக்கியமான எண்ணமும், கவலையும்தான் இந்திய சட்டசபை எலக்ஷனில் எல்லாப் பார்ப்பனர்களையும் ஒன்று சேர்த்து ஒரே மூச்சாய் பாடுபட்டு ஒரு கை பார்த்து விடும்படியாகச் செய்து விட்டது என்பது இப்போதாவது நமது மக்களுக்கு விளங்கி இருக்கும் என்று நினைக்கின்றோம்.

தோழர் சர். சி. பி. ராமசாமி அய்யர், ஜி. ஏ. நடேசன் ஆகியவர்கள் மிதவாதிகள் என்று பெயர். கனம் சீனிவாச சாஸ்திரி என்பவர் சர்க்கார் தாசர் என்று பெயர். மற்றும் பல பார்ப்பனர்கள் ஐக்கோர்ட்டு ஜட்ஜி, ஐ. சி. எஸ். ஆபீசர், போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலிய பார்ப்பனர்களுக்கும் சர்க்கார் ஊழியர்கள் என்று பெயர். இப்படி எல்லாம் இருந்தும் அவர்கள் எல்லோரும் உயிரைக் கொடுத்து சத்தியமூர்த்தி ஜெயிக்கும்படி பாடுபட்டு அவருக்கு வாழ்த்தும் கூறி இருக்கிறார்கள் என்றால் மந்திரி பதவியும் சட்டமெம்பர், போலீசு மெம்பர் பதவியும் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு கண் உறுத்தலாய் இருந்திருக்கும் என்பது தானாகவே விளங்கவில்லையா?

தோழர் சத்தியமூர்த்திக்கோ அல்லது அவருடைய ஜாதியாருக்கோ ஒரு சமயம் இன்று சென்னை கவர்னர் வேலை கிடைத்திருக்குமேயானால் அவர் பதவிக்கு வந்தவுடன் சட்டசபையைக் கலைத்து மந்திரிகளை வீட்டுக்கு அனுப்பி சட்டமெம்பரையும், ஹோம் மெம்பரையும் டிஸ்மிஸ் செய்துவிட்டுத்தானே மலஜலம் கழிப்பார்கள் என்பதும் இதிலிருந்து விளங்குகின்றதா இல்லையா? என்று கேட்கின்றோம்.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் பேச்சு எவ்வளவு முட்டாள் தனமானதாயிருந்தாலும், குரோத எண்ணம் கொண்டதாயிருந்தாலும் இந்திய சட்டசபைத் தேர்தல் போலவே சென்னை மாகாண சட்டசபைத்தேர்தலும் முடியுமானால் இன்று உத்தியோகங்களில் உள்ள பார்ப்பனரல்லாத மக்களின் நிலைமை என்ன ஆவது என்பதையும் உணர்ந்து பார்க்கும்படி வேண்டுகிறோம்.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் ஒரு வெறும் புரோகித சாஸ்திரி என்கின்ற முறையில் அவர் அப்படிப் பேசியதாக யாரும் நினைத்துவிடக்கூடாது. இந்த நாட்டுப் பார்ப்பனர்களின் பிரதிநிதியாய் மாத்திரம் இருந்து பேசினார் என்றும் நினைத்துவிடக்கூடாது. இந்திய தேசியக்காங்கிரசின் தலைவர்களில் ஒரு முக்கிய தலைவராயும், சட்டசபை, பஞ்சாயத்து போர்டு காரியதரிசி என்கின்ற பதவியிலிருந்து கொண்டும், சென்னை மாகாண காங்கிரஸ் சர்வாதிகாரி என்கின்ற முறையிலும் காந்தியாரால் புகழ்ந்து கொண்டாடப்பட்ட தூய்மையான தேசபக்தர் என்கின்ற முறையிலும் தான் பேசியிருக்கிறார் என்பதை சுயமரியாதை உள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாத மக்களும் உணரவேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

இந்த நாட்டு மக்கள் சிறப்பாக சென்னை மாகாண மக்கள் இப்படிப்பட்ட தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களைத் தங்கள் மாகாண பிரதிநிதியாகவும், இந்திய மக்களின் தலைவர்களில் முக்கியமானவராகவும் கொள்ளத்தக்க நிலைமை இன்று இருக்குமானால் இந்திய மக்களின் யோக்கியதைக்கும் காங்கிரசின் தேசியத்துக்கும் பிரதிநிதித்துவத்தின் நாணயத்துக்கும், மேன்மைக்கும் எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை.'

காங்கிரஸ் சார்பாய் பார்ப்பனர்களின் தேசியம் என்ன என்பதுபற்றி நாம் இந்த பத்து வருஷகாலமாய் கூப்பாடு போட்டு வந்ததானது தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் இந்திய சட்டசபை மெம்பரான எட்டுநாளையில் உண்மையாக ஆகிவிட்டதா? இல்லையா? என்று யோசித்துப்பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

இந்திய சட்டசபைத்தேர்தல்கள் முடிந்தவுடன் தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கவர்னர் பிரபுவைப்போய் பார்த்து விட்டு வந்திருக்கிறார். அவரும் சட்டசபையைக்கலைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி கவர்னருக்கு சட்டம் எடுத்துக்காட்டி இருக்கலாம். அதுமாத்திரமல்லாமல் சென்னை மாகாண உத்தியோகத்தில் இருந்துவரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமைக்கு உலை வைக்க சூட்சி செய்துவிட்டு வந்திருக்கலாம்.

இவை எப்படியோ இருக்கட்டும். மற்றொரு முக்கியமான விஷயமென்ன வென்றால் இந்திய சட்டசபையின் பரிதாபகரமான நிலையைப் பற்றி சிறிது கவனிப்போம்.

தோழர்கள் சி. ஆர். தாஸ் என்ன, பண்டித மோதிலால் நேரு என்ன இப்படிப்பட்டவர்

கள் காங்கிரசின் சார்பாய் இருந்து வந்த ஸ்தானத்தில் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் போய் கட்சிப்பிரமுகராக இருக்கப்போகிறார் என்றால் அது மாத்திரமல்லாமல் இன்றைய இந்திய மக்களின் பிரதிநிதியாகப் போய் உட்காரப்போகின்றார் என்றால் இந்திய சட்டசபையின் கஷ்ட காலத்துக்கும் இவரைப் பிரதிநிதியாகக்கொண்ட மக்களின் சுயமரியாதைக்கும் எதை உதாரணம் காட்டுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்த லக்ஷணத்தில் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் ஜாதியைச் சேர்ந்த பத்திரிக்கைகளும் ஆசாமிகளும் தோழர் ஷண்முகமவர்கள் சட்டசபையில் இருந்ததைகுறை கூறி ''பட்டேல் என்கின்றசிங்கம் இருந்த இடத்தில் ஷண்முகம் என்கின்ற............:இருக்கிறது நியாயமா'' என்று எழுதியும், பேசியும் இருக்கிறார்கள்.

ஆனால் தாஸ், நேரு என்கின்ற மேதாவிகள் மாதம் 40-ஆயிரம் 50-ஆயிரம் வரும்படியைத்துறந்து விட்டுவந்த தியாகமூர்த்திகள் என்று சொல்லப்பட்டசிங்கங்கள் இருந்து வந்த இடத்தில் சத்தியமூர்த்தி அய்யர் என்கின்ற...... ................இருப்பது நியாயமா? என்று எழுதினால் அந்தப் பார்ப்பனர்கள் இந்த காலி இடத்தில்என்ன எழுதி பூர்த்தி செய்து என்ன பதில் சொல்லுவார்கள் என்று கேட்கின்றோம்.

ஆகவே இப்படிப்பட்ட இவரைக்கொண்ட இந்திய சட்டசபை எப்படிப் பரிமளிக்கப் போகிறது என்பதும், எப்படி மதிக்கப்படப்போகிறது என்பதும், மானமுள்ள சுயமரியாதையுள்ள மக்கள் அவரது தலைமையில் எப்படி வீற்றிருக்கப்போகின்றார்கள் என்பதும் நமக்கே பெரிய பிரச்சினையாகத்தான் இருக்கின்றது.

இன்றைய இந்திய சட்டசபைக்குக் காங்கிரஸ் சார்பாகவே யாரைத்தலைவராகப் போடுவது என்பது காங்கிரஸ்காரர்களுக்கே ஒரு பெரிய பிரச்சினையாகி விட்டதாகத் தெரிகின்றது. ஏனெனில் தோழர் காந்தியாரே இந்தப் பிரச்சினையில் கவலை செலுத்திப் பார்த்து அவரது நண்பர்களுடன் கலந்த பிறகுதான் தோழர் பண்டிதர் மாளவியா அவர்களை எப்படியாவது இந்திய சட்டசபைக்குக் கொண்டுவரவேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இதிலிருந்தே இன்றைய காங்கிரசில் பொறுப்பும் யோக்கியமுமான ஆட்கள் இல்லை என்றும் இருப்பவர்களுக்குள் சத்தியமூர்த்தியை மேலானவர் என்று மதிக்கவேண்டியதாகி விட்டதென்றும் விளங்கிவிட்டது.

அதனாலேயே தோழர் மாளவியா காங்கிரசின் இன்றைய முக்கிய கொள்கையாகிய வகுப்புத் திட்டத்தில் எதிரான அபிப்பிராயமுடையவராயிருந்தாலும் இந்திய சட்டசபையின் கௌரவத்தைப் காப்பாற்ற (யாருடைய கௌரவத்தை? பார்ப்பனர்களின் கௌரவத்தைச் காப்பாற்ற) வேண்டுமே என்கின்ற கவலை கொண்டு கொள்கையைகூட கவனியாமல் மாளவியாஜியைக் கூப்பிடுகிறார்கள். இதிலிருந்து காங்கிரசின் வகுப்புத் தீர்ப்பின் சம்மந்தமாக நாணயம் என்ன என்பதையும்கூட ஒருபுறம் அறிந்துகொள்ளலாம்.

இன்று இந்தியா முழுவதற்கும் இந்திய சட்டசபைக்குக்காங்கிரஸ்காரரே வெற்றி பெற்றுவிட்டார்களானாலும் இந்திய சட்டசபையில் அரசாங்கம் மதிக்கக்கூடிய நபரோ, பொதுஜனங்கள் மதிப்பு வைத்து கவனிக்கக்கூடிய நபரோ இல்லை என்று காந்தியாரும், ராஜகோபாலாச்சாரியாருமே உணரும்படி ஆகிவிட்டதென்றால் வெற்றியின் யோக்கியதை வெட்கப்படவேண்டியதாக ஆகிவிட்டது என்பது விளங்கவில்லையா என்று கேட்கின்றோம்.

# இதை நீங்கள் தயவு செய்து கவனியுங்கள்.

—:0:—

### எதற்காக தெரியுமா?

நீங்கள் ஒவ்வொருவரும் எப்படியாவது கஷ்டப்பட்டு இரண்டு அல்லது ஒரு சந்தாதாரரையாவது சேர்த்து 8 அணுவாவது அட்வான்ஸ் வாங்கி விலாசத்துடன் நமக்கு அனுப்பிக் கொடுங்கள்.

### ஏன்?

பகுத்தறிவு ஒரு தனி மனிதனுடைய சுயநலத்துக்கோ ஒரு தனி வகுப்பாருடைய நன்மைக்கோ நடைபெறுவதல்ல.

ஆனால் இன்று ஆதிக்கத்திலிருக்கும் வகுப்பாருடைய விஷமமும் சூழ்ச்சியும் நிறைந்த எவ்வளவோ எதிர்ப்புகளையும், தொல்லைகளையும் சமாளித்துக்கொண்டு இழிவு படுத்தப்பட்ட மக்களுக்காகவும், ஏழ்மைப்படுத்தப்பட்ட மக்களுக்காகவும், பின்தள்ளப்பட்ட மக்களுக்காகவும் நடைபெறுகின்றது.

இந்த வருஷத்தில் மாத்திரம் 3தடவை பத்திரிகைநிறுத்தப்பட்டு விட்டதாலும், 2, 3 தடவை ஜாமீன்கட்டும்படிஉத்திரவு செய்யப்பட்டதாலும், பத்திரிகை விஷயமாய் 3 கேசுகள் ஏற்பட்டு அபராதங்களும், தண்டனைகளும் விதிக்கப்பட்டதாலும், கேசுகளை எதிர்வழக்காடியதாலும் 5000 ரூபாய்க்கு மேற்பட்ட நஷ்டங்களேற்பட்டதோடு பத்திரிகை சந்தா எண்ணிக்கையும் குறையத் தலைப்பட்டு விட்டது. ஏஜண்டுகள் பெரும்பாலோர் அதாவது ''இயக்கத்தின்மேல் உள்ள ஆர்வத்தினால்—இயக்கத்தில் உள்ளவர்களால்—இயக்க நன்மைக்காக பாடுபட்டவர்கள்'' என்று சொல்லிக்கொள்ளுபவர்கள் எங்கெங்கு ஏஜண்டாயிருந்தார்களோ அவர்களது பாக்கிகள் 100-க்கு 90-ரூபாய் வீதம் வசூலாகாமல் போய்விட்டதுடன் கண்டித்து கேட்கப்பட்டதினால் அவர்களது விரோதத்துக்கும் ஆளாக நேரிட்டுவிட்டது. மற்ற பொது ஏஜண்டுகளும் சிலர் ஒழுங்காய் நடந்து கொள்ளாததால் எலக்ஷனுக்குப்பிறகு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திக்கொள்ள வேண்டியதாகிவிட்டது.

ஆதலால் ''பகுத்தறிவுக்கு'' ஆதரவளிக்க வேண்டும் என்று கருதுகின்ற ஒவ்வொரு தோழர்களும் தயவு செய்து இரண்டு சந்தாதாரர்களையாவது சேர்த்துக்கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்பட வேண்டியவர்களாகி விட்டார்கள். இதைச் சிறிது முக்கியமானதாகக் கருதவேண்டுமாய் வேண்டுகிறோம்.

பத்திராதிபர்.

குறிப்பு:—உதவி செய்தவர்கள் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

இதைக் கிழித்து பூர்த்தி செய்து அனுப்பவும்.

..................................................................

''பகுத்தறிவு'' காரியாலயம் மானேஜர் அவர்களுக்கு ஐயா அடியில் கண்ட விலாசப்படிக்கு ஒரு வருஷத்துக்கு பகுத்தறிவு பத்திரிகை அனுப்பி வைக்கக்கோருகிறேன். சந்தா ரூபாய் 3. இத்துடன் அனுப்பி இருக்கிறேன்.

தேதி.........................

விலாசம் கையெழுத்து

பேர்:........................................................

ஊர்........:..................................................

போஸ்டாபீஸ்::..............................................

## வேஷம் விளங்கி விட்டது.

''வெள்ளை அறிக்கையை பஹிஷ்காரம் செய்கின்றோம்.'' ''வைசிராய் வந்தவுடன் வெளியில் எழுந்து வந்து விடுகின்றோம்.'' என்றெல்லாம் கூறிஓட்டுவாங்கி சட்டசபைக்குச்சென்று இருக்கும் நமது காங்கிரஸ் வீரர்கள் இப்போது மெள்ள மெள்ள தங்கள் திரையை நீக்கிக்கொண்டு வெளியில்வர ஆரம்பித்து விட்டார்கள்.

அதாவது வெள்ளை அறிக்கையின் பயனாய் கிடைக்கக்கூடிய பதவிகளையும், உத்தியோகங்களையும், சம்பளங்களையும் கைப்பற்ற வேண்டுமென்றும், அந்தப்படி செய்யாவிட்டால் பிற்போக்காளர்கள் (காங்கிரஸ்காரர்கள் அல்லாதார்கள்) அதை அனுபவித்து விடுவார்களென்றும் சொல்லி

இப்போதே பழயபாடம் படிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

முன்பு ஒரு தடவையும் கூட இந்தப்படியே அதாவது காங்கிரஸ்காரர்கள் சட்ட சபைக்குச் சென்றால் மந்திரி வேலையை ஒப்புக்கொள்ளக்கூடாது என்றும், மந்திரிகளை ஆதரிக்கக்கூடாதென்றும் செய்திருந்த காங்கிரஸ் தீர்மானத்துக்கு விரோதமாய் மந்திரி உத்தியோகம் பெற ஆசைப்பட்டு அது சௌகரியப்படாமல் போகவே தங்கள் இஷ்டப்படி மந்திரிகளை ஆதரிக்கத் தொடங்கி மந்திரிகளின் கையாள்களாகவும் இருந்து வந்தார்கள்.

அதை மற்றமாகாணகாங்கிரஸ் வாதிகள் கண்டித்து சமாதானம் கேட்டபோது சென்னை காங்கிரஸ் வாதிகள் இதேபதில் தான் சொன்னார்கள். என்னவென்றால் "மந்திரி பதவிகளை காங்கிரஸ் ஆதிக்கத்தில் வைத்திருக்கா விட்டால் பிற்போக்காளர்கள் (ஜஸ்டிஸ் கட்சியார்கள்) கைப்பற்றி விடுவார்கள் ஆதலால் காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளை ஆதரிக்க வேண்டியவர்களானார்கள்" என்று சொன்னார்கள்.

ஆதலால் காங்கிரஸ்காரர்களுக்கு எவ்வெப்பொழுது சட்ட சபைக்குள் செல்ல முடியாதோ அப்பொழுதெல்லாம் சட்டசபையை பஹிஷ்கரிப்பதும், எவ்வெப்பொழுது மந்திரி பதவி கிடைக்காதோ அப்பொழுதெல்லாம் மந்திரி பதவி ஒப்புக்கொள்ளக் கூடாது என்று தீர்மானிப்பதும், எவ்வெப்பொழுது சாத்தியப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் "தேசத்துரோகிகளும், பிற்போக்காளர்களும் பிரவேசியாமலும், மந்திரி ஆகாமலும் பார்த்துக் கொள்ளுவதற்காக" என்று பிரவேசிப்பதும் வழக்கமாக இருந்து வருகின்றது.

அதை இந்த வருஷ தேர்தலிலும் பட்டவர்த்தனமாய் காட்டி தங்களது உள் வேஷத்தை விளக்கிவிட்டார்கள்.

இதை 5-12-34ந்தேதி பாட்னாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டியும், சட்டசபைப்பஞ்சாயத்து போர்டும் சேர்ந்து நிறைவேற்றி இருக்கும் தீர்மானத்தால் அறியலாம். அதாவது,

"கூட்டுக்கமிட்டி அறிக்கையை நிராகரித்துவிடவேண்டும். நிராகரிப்பு என்றால் இப்போது இருந்து வரும் அரசியலின்கீழ் இருந்துகொண்டு கஷ்டப்படவேண்டும். இது சகிக்க முடியாததாய் இருந்தாலும் அரசியல் நிர்ணய சபையாரால் வகுக்கப்படும் ஒரு அரசியல் கிடைக்கும் வரை இப்பொழுதிருக்கும் அரசியலின் கீழ் இருக்கவேண்டும்.

ஆகவே "சீர்திருத்தத்திட்டத்தை நிராகரிக்கும்படி அசம்பளி மெம்பர்களை கேட்டுக்கொள்ளுகிறது. காங்கிரஸ் செய்வதை பொது ஜனங்கள் ஆதரிக்க வேண்டும்" என்று தீர்மானித்து இருக்கிறார்களாம்.

இதிலிருந்து விளங்குவது யாவருக்கும் தெரிந்ததே. சட்டசபை மெம்பர் பதவியையும் மந்திரி பதவியையும் அடைவது என்னும் "கஷ்டத்தை" சகித்துக்கொண்டும், சம்பளம் வாங்கி எண்ணி எண்ணி பெட்டியில் போடுவது என்னும் "துன்பத்தை" அனுபவித்துக்கொண்டும் சீர்திருத்தங்களை எதிர்க்கவோ நிராகரிக்கவோ ஆன காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதே அல்லாமல் வேறு இரகசியம் எதுவும் இத் தீர்மானத்தில் இல்லை.

ஒரு புருஷன் தனது மனைவியை விபசாரி என்று கருதி விலக்கி வைக்கவேண்டும் என்று தீர்மானித்து அத் தீர்மானத்தை எப்படி நிறைவேற்றினான் என்றால் அவளோடு வாழ்ந்துகொண்டும், பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டும் இருந்துகொண்டே அவளை விலக்கி விடுவது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியதோடு அதற்கு சமாதானமும் "தான் அந்தப்படி செய்யாவிட்டால்தன் மனைவி வேறு ஒருவனுக்கு பிள்ளை பெற்றுவிடுவாள் என்று சொன்னானாம். அதுபோலவேஅரசியலின் கீழ் இருந்துகொண்டே அந்தபதவியையும் சம்பளத்தையும் அனுபவித்துக்கொண்டு அந்த அரசியலை பகிஷ்கரிப்பது என்று முடிவு செய்து விட்டார்கள் நமது காங்கிரஸ்காரர்கள். அப்பாடா இது எவ்வளவு பெரிய தியாகம்! எவ்வளவு பெரிய வீரம்!! வேறு யாராவது இந்தப் படி செய்ய முடியுமா!!! என்று யோசித்தால் அதன் பெருமை விளங்கிவிடும்.

அறிவில்லாத பாமர மட ஜனங்கள் இவற்றை நம்பி ஏமாந்து போகின்றார்கள் என்பது ஒரு பக்கம் இருக்க அரசியலை நிராகரிப்பது என்றால் என்ன அருத்தம் அது எப்படி முடியும் என்பது பற்றி ஒரு அறிஞனும் யோசித்துப் பார்த்ததே கிடையாது. பார்ப்பனர்கள் என்ன வியாக்கியானம் சொல்லுகிறார்களோ அதையே நம்பி கங்காதா மாண்டாயோ என்று அழுவதை தவிர நமது மக்களுக்கு சொந்த புத்தி சிறிது கூட இல்லை. அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் ஒரு சிறிய ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டாலும் அதற்குள்ள நிபந்தனைப்படி நடந்து ஆகவேண்டுமே ஒழிய வேறு வழியில்லை. ஒருவன் ஓட்டு செய்தபோதே அரசியலுக்கு அடிமை ஆகிவிட்டான் என்றால் சீர்திருத்த சட்டசபைக்குள் நுழைந்து விட்ட பிறகு என்ன ஆவான் என்று சொல்லவேண்டுமா? அவன் சீர்திருத்தப்படி நடக்க வேண்டியதைத் தவிர வேறு ஒரு காரியமும் செய்ய முடியாது. அங்கு நிராகரிப்பது என்பதற்கு ஒரு காரியமும் கிடையாது என்றும், செய்ய முடியாதுஎன்றும், அந்த வார்த்தைக்கு அருத்தமில்லை என்றும் சொல்லுவோம்.

யார் எழுந்து வந்தாலும் யார் ராஜீனமா கொடுத்தாலும் அரசியல் சீர்திருத்தம் என்பது சிறிது கூட அசைவு பெற்று விடாது.

தோழர்கள் தாஸ், நேரு ஆகியவர்கள் பல தடவை வெளியேறினார்கள், "ராஜீனமா" கொடுத்தார்கள், ரப்பர் பந்துமாதிரி எகிரி எகிரி பேசினார்கள் முடிவில் என்ன ஆச்சுது?

தோழர்கள் ஆரோக்கியசாமி முதலியார், ரங்கநாத முதலியார், முத்து லக்ஷிமி ரெட்டியார் "ராஜீனமா" கொடுத்தார்கள் என்ன ஆச்சுது. மறுபடியும் அதே பதவிக்கு தொங்குகிறார்களே ஒழிய சீர்திருத்தத்தை கடுகளவு கூட அசைத்து விடவில்லை.

இந்த இரகசியம் தோழர்கள் ராஜகோபாலாச்சாரிக்கோ, காந்தியாருக்கோ, அல்லது சத்தியமூர்த்தி அய்யருக்கோ தெரியாது என்று நாம் இதை எடுத்துக்காட்ட வரவில்லை. இதை இவர்கள் தெரிந்தே மக்களை இந்தப்படி பேசி ஏமாற்றுகின்றார்கள் என்பதைக் காட்டவே இதை எழுதுகின்றோம்.

சீர்திருத்தம் யார் தடுத்தாலும் யார் நிராகரித்தாலும் யார் பஹிஷ்கரித்தாலும் வரத்தான் போகின்றது. வந்தும் ஆய் விட்டது. அதை ஆதரித்து பதவிகளை ஏற்று நடத்திக் கொடுத்து பணம் பெற பாட்னாவில் தீர்மானமும் 6 மாதத்துக்கு முன்பே செய்தும் ஆய்விட்டது.

"மத்திய அரசாங்கத்தில் சுயாட்சி இல்லாமல் மாகாண சுயாட்சி வேண்டியதில்லை" என்று கூப்பாடு போட்ட வீரர்கள் தான் இன்று மத்திய அரசாங்கத்தை நடத்திக் கொடுக்கும் தேர்தலில் வெற்றி பெற்று விட்டார்கள். மாகாண சுயாட்சியை நடத்திக் கொடுப்பதற்கும், மந்திரிகளை விரட்டி விட்டு அந்தப் பதவியை எங்களுக்குக் கொடுங்கள் என்று கவர்னரை கெஞ்சுகிறார்கள். அந்த தேர்தலிலும் வெற்றி பெற இப்போது இருந்தே முயற்சி செய்து வருவதும், சூட்சிகள் செய்வதும், கவர்னர்களை போய்ப் பார்ப்பதும் யாரும் அறியாததல்ல.

காங்கிரஸ் சட்டசபைகளையும் உத்தியோகங்களையும் பஹிஷ்கரித்திருந்தகாலத்திலேயேசட்டசபைத் தலைவர் பதவியையும், கமிட்டி ஸ்தானங்களையும், அவற்றின் வருவாய்களையும் அனுபவித்து வந்த வீரர்கள் இப்போது காங்கிரசே சட்டசபை ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ள தீர்மானித்து விட்டு உத்தியோகங்களை யேற்றுக் கொள்ளலாம் என்று யோசித்துக் கொண்டும் இருக்கும்போது இனி பஹிஷ்காரம், நிராகரிப்பு என்பவைகள் எல்லாம் மக்களை ஏமாற்றச் செய்யும் பழய பாடங்களே ஒழிய இதில் புதியது ஒன்றுமே இல்லை என்பதே நமது அபிப்பிராயம்.

## சென்னை சட்டசபை உப தேர்தல்.

சென்னை சட்ட சபைக்கு சாமி வெங்கடாசலம் செட்டியார் அவர்களால் காலி செய்த ஸ்தாபனமானது பூர்த்தி செய்யப்படுவதற்கு காங்கிரசுக்காரர்கள் தோழர் சத்திய மூர்த்தி அய்யர் அவர்கள் வெற்றியைப்பார்த்த பிறகு அதற்கும் பார்ப்பனர்களாகவே பார்த்து நிருத்த முயற்சித்து வருகிறார்கள். தோழர் லக்ஷிமிபதி அம்மாள் அவர்கள் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டது. பிறகு தோழர் டி. பிரகாசம் பந்துலு அவர்கள் பெயர் பிரஸ்தாபிக்கப்படுகிறது. அவர்கள் பெயர் ஓட்டர் லிஸ்டில் காணப்படவில்லை என்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது என்றாலும்மறுபடியும் ஒரு அரைப்பார்ப்பனரையாவது அந்தஸ்தாபனத்துக்கு போட பார்க்கின்றார்களே ஒழிய தோழர் கத்தே ரங்கய்ய நாயுடு அவர்கள் காங்கிரசுக்காக என்று எவ்வளவோ உழைத்து வந்தும் அவர் பார்ப்பனரல்லாதாராய் இருப்பதால் அவர் பெயரை பிரஸ்தாபிப்பாரையே காணோம். அவர்எதக்காரணத்தினால் பிடித்தமில்லை ஆனாலும் வே

று ஒரு பார்ப்பனரல்லாதாரை யாவது போடலாம்.

ஆகவே இந்த சந்தர்ப்பத்திலேயே எவ்வளவு பார்ப்பனர்களை புகுத்திக்கொள்ள முடியுமோ அவ்வளவு பெயர்களையும்புகுத்திக்கொள்ள முடிவு செய்து தோழர் டாக்டர் மல்லப்பா அவர்களை நமது பார்ப்பனர்கள் காங்கிரசின் பேரால்சட்ட சபைக்கு சென்னை நகரத் தொகுதியில் நிருத்த தீர்மானித்துஇருக்கிறார்கள். இதற்கு பாட்னாவில் இருந்து உத்திரவு வந்தது போல் வேஷம் போட்டு மக்களை ஏமாற்ற பார்லிமெண்டரி போர்ட் தீர்மானம் செய்து விட்டது என்று தந்தி அடித்து விட்டார்கள்.

ஆகவே காங்கிரசின் வெற்றி பார்ப்பனர் வெற்றி என்பதும் காங்கிரஸ் தேர்தல் பார்ப்பனர் தேர்தல் என்பதும் காங்கிரஸ் கட்சி ஜஸ்டிஸ் கட்சி என்பதும் பார்ப்பனர் கட்சி அல்லாதார் கட்சி என்பது தான் என்பதும் இதிலிருந்தாவது பார்ப்பனரல்லாத புல்லுருவிகள் உணர்வார்களாக.

---

## ஈரோடு முனிசிபாலிட்டி.

---

### பெண் டாக்டர்.

ஈரோடு முனிசிபாலிட்டிக்குகமிஷனராக தோழர் புருஷோத்தம் அவர்கள்வந்தபிறகு டவுனுக்குள் ஒரு பெண் டாக்டரை நியமித்து பெண்மக்களுக்கு சுகாதாரத்தைப்பற்றியும், பிள்ளைகள்வளர்ப்பைப்பற்றியும், பிள்ளைப்பேறுகளைப்பற்றியும் பிரசாரம் செய்யும்படியும், கவனித்து வரும்படியும் செய்ய வேண்டும் என்று செய்திருந்த தீர்மானத்தின் படி ஒரு பெண்டாக்டரை நியமித்து அதன் கருத்துக்களை அமுலுக்கு கொண்டு வந்திருக்கிறார்.

### ரீடிங்ரூம்.

ஈரோடு டவுனுக்குள் 6-இடங்களில் இலவசவாசகசாலை ஏற்படுத்தி தமிழ்நாடு, சுதேசமித்திரன், தினமணி பகுத்தறிவு முதலிய பத்திரிக்கைகளை வரவழைத்து படிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

### பெற்றோர்கள் சங்கம்.

ஒவ்வொரு முனிசிபல் பள்ளிக்கூடத்துக்கு ஒரு பெற்றோர் சங்கம் வேண்டுமென்று தீர்மானித்து அந்தப்படிஏற்படுத்தி அதில் அடிக்கடி பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்து இருக்கிறார்.

### பெண் சூப்ரவைசர்.

ஈரோடு முனிசிபாலிட்டிக்குள் உள்ள பெண்கள் பள்ளிக்கூடங்களை தனிக்கை செய்யவும் பெண் உபாத்தியாயர்களின் வேலைகளை கவனிக்கவும் ஒரு பெண் சூப்ர வைசரை நியமிக்க ஏற்பாடுசெய்துஇருக்கிறார்.

### பெண்கள் உபாத்தியாயர்.

ஆண்பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்கும் பெண்கள் உபாத்தியாயர்களை நியமிக்க வேண்டுமென்று சுமார் ஒரு வருஷத்துக்கு முன் தோழர் கண்ணம்மாள் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றி வைத்திருந்த தீர்மானத்தையும் அமுலுக்கு கொண்டு வந்து சில ஆண்பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு பெண்கள் உபாத்தியாயர்களை நியமித்து இருக்கிறார்கள்.

### "தோட்டிகள்."

முனிசிபாலிட்டியில் தோட்டி வேலை செய்யும் ஆதிதிராவிட சேரிகளில் தனிகவனம் செலுத்தி அவர்களுக்குத் தக்க வீடும், தண்ணீர் வசதியும் இருக்கும்படியாக திட்டம் போட்டு அதை அமுலுக்கு கொண்டுவர முயற்சித்து வருகிறார்.

### சுகாதாரம்.

சுகாதாரத்துக்கு விரோதமாகவும், ஜன சமூகத்துக்கு அசௌகரியமாகவும் இருந்து வந்த சில தொழில்கள் விஷயமாய் அவற்றிற்கு ஏற்கனவே இருந்து வந்த லைசென்சுகளை எல்லாம் கேன்சில் செய்துஅம்மாதிரி தொழில்களை நிறுத்தி வருகிறார்.

### மின்சாரம்.

ஈரோடு முனிசிபாலிட்டி வாட்டர் வர்க்கில் இருக்கும் தண்ணீர் பம்பை மின்சார விசையினால் ஓடும்படி செய்வதற்காக மின்சார திட்டம் முனிசிபாலிட்டியிலேயே ஏற்பாடு செய்வதற்கு கவுன்சிலின் சாங்கிஷன் பெற்று சென்னை அரசாங்கத்தை அனுமதி கேட்டிருக்கிறார்.

### இன்னமும்

தெருக்கள் கக்கூசாகவும், குப்பைத்தொட்டியாகவும் உபயோகப்படுத்தப்பட்டு வருவதைப் பற்றியும் குழாய்களண்டை பாத்திரம் கழுவுவது, குளிப்பது, துவைப்பது ஆகியவைகளைப்பற்றியும் இன்னமும் சரியான முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

(சிட்டிசன்)

(9ம் பக்கத்தொடர்ச்சி)

---

வைத்துக் கொள்ளுங்கள்.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சி கொள்கைகள் மனித சமூகத்தின் சமுதாய வாழ்க்கையைப் பொருத்த வரையிலும் சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்டு பார்ப்பனரல்லாதார் உரிமை என்பதை ஆதரிக்கின்றது என்பதும், அந்தப்படி ஆதரிக்கவில்லை என்றாலும் எதிர்க்கவில்லை என்பதும் எனது அபிப்பிராயம்.

அது போலவே காங்கிரசைப் பற்றியும், அதன் கொள்கைகள் மனித சமூகத்தைப் பொருத்த வரையிலும் தாங்கள் குறிப்பிட்டிருப்பது போலவே முதலாளிகளுடையவும், நில்ச்சுவான்களுடையவும் நன்மைக்கு ஏற்பட்டது என்பதோடு பார்ப்பனீயத்துக்கும் (அதாவது நான் எந்த பார்ப்பனீயம் என்று மேலே சொன்னேனோ அதற்கும்) முழு ஆதரவும் பலத்தையும் கொடுத்து வருகின்றது—அதற்கு ஆகவே பெரிதும் பாடுபடுகின்றது என்பதும் எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

மேலும் தாங்கள் குறிப்பிட்டது போல் நான் சமதர்மக் கொள்கையை அறியாதவனாக இருந்தாலும் இருக்கலாம் அல்லது அறிந்திருந்தும் அதில் நம்பிக்கை இல்லாதவனாகஇருந்தாலும் இருக்கலாம்.

ஆனால் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்றவிஷயங்களில் உள்ள குறைகளும் ஏற்படவேண்டிய மாறுதலும் என்ன என்று நான் கருதிக் கொண்டிருக்கின்றேனோ அவற்றில் எனக்கு சிறிதும் சந்தேகமில்லை என்பதோடு அவ்வெண்ணம் நாளுக்கு நாள் பலப்பட்டும் வருகின்றது.

நிற்க மற்றொரு விஷயம். ஏழை பணக்காரன் என்பதில் தாங்கள் கொண்டுள்ள கருத்துக்கும் நான் கொண்டுள்ள கருத்துக்கும் வித்தியாசமிருக்கும் போல்தோன்றுகின்றது. இந்தியாவில் ஏழை பணக்காரத் தன்மை ஜாதியைப் பொருத்தே அனேகமாய் 100-க்கு 95 பங்காய் இருந்து வருகின்றது.

பணக்காரன் ஏழை என்பது இந்தியாவில் பெரிதும் பிறவியினால் ஏற்பட்ட ஜாதியினாலேயே ஏற்பட்டிருக்கிறது.

பணக்காரன் ஏழை என்பதற்கு நான் கொண்டிருக்கும் அருத்தம் பாடுபடாமல் சரீரத்தால் உழைக்காமல் வாழ்கின்றவன் பணக்காரன் என்றும் அதாவது சரீரத்தினால் உழைப்பது பாவம், அல்லது தோஷம் என்று எந்த எந்த ஜாதியானுக்கு உரிமை இருக்கின்றதோ அவனெல்லாம் செல்வவான் கூட்டத்தில் சேர்ந்தவன் என்றும், எவனெவன் உழைக்கக் கட்டுப்பட்டவன் என்றும் மற்றவனுக்கு உழைத்துப் போட வேண்டியவன் என்றும் உரிமையோடும்! இருக்கிறானோ அவனையும், எவனெவன் உழைத்துக் கஷ்டப்பட்டும் போதிய சுகமில்லாமல் இருக்கிறானோ அவனையும் ஏழை என்றும் நான் கருதிக்கொண்டிருக்கின்றேன்.

இந்த விஷயத்தை வாக்கு சாமர்த்தியத்தாலும் அல்லது "இதைவிட முக்கியமானது வேறு ஒரு காரியம்" என்று காட்டுவதாலும் எதிர்க்கலாம் என்றாலும் இதை மாற்ற வேண்டியதே பிரதானம் என்றும், சமதர்மத்தில் இதுவும் ஒரு கடுகளவாவதுசேர்ந்ததாய் இருக்கலாம் என்றும் நான் கருதுகின்றேன்.

"அதோடு ருஷியாவில் இருக்கிற மாதிரியான சமதர்மக் கொள்கையை இங்கும் புகுத்தவேண்டும்" என்பது எனது கருத்தல்ல என்பதோடு அது சரியா தப்பா என்பதைப் பற்றியும் நான் இப்போது வாதம் செய்யவும் விரும்பவில்லை.

ஆதலால் நமது பிரச்னைகளில் ருஷியாவை மறந்துவிட்டு நம் கண்ணெதிரில் நமது அனுபவத்தில் உள்ள விஷயங்களையும் நமது புத்திக்கு சரி என்று தோன்றும் விஷயங்களையும் பற்றியே பேசுவோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஜஸ்டிஸ் கக்ஷியில் உள்ள முதலியார், நாயக்கர் சண்டை ஜாதியைப் பொருத்ததல்ல. ஆனால் உத்தியோகங்களுக்குப் பெரிய சம்பளமும் கௌரவமும் இருப்பதால் அதை பெருவதற்கான முயற்சிகள் நாயக்கர் முதலியார் செட்டியாராக இருந்து வருகின்றதே ஒழிய வேறில்லை.

பார்ப்பனர்களைப் பார்த்து அவர்களைப் பின் பற்றுகின்றது என்கின்ற முறையில் ஏதாவது சிறிது உயர்வு தாழ்வு கொண்டாடும் உணர்ச்சி இருந்தாலும் இருக்கலாம் என்றாலும் அதை வெளிப்படையாய் கவனிக்க வேண்டிய அளவு நான் காண முடியவில்லை. ஆதலால் அதைப் பற்றி நான் கஷ்டப்படவில்லை. ஏனெனில் உத்தியோக சம்பளம் குறைந்து அதற்கு சரியான பொருப்பும் நிர்ணயமும் ஏற்படும்போது இந்த சண்டைகள் மறைந்து

விடும் என்பது உறுதி மற்ற பெயர்களுடன் இருக்கும் அரசியல் கக்ஷிகளும் மறைந்து விடும். ஆனால் பிரவிப் பெருமைக்காகவும் உரிமைக்காகவும் இருந்து வரும் சண்டைகள் அப் பெருமையும் உரிமையும் ஒழிந்தாலல்லது ஒரு நாளும் மறைந்து விடாது, என்றே கருதுகின்றேன்.

அசம்பளி தேர்தல் விஷயத்தைப்பற்றி தாங்கள் குறிப்பிட்டிருப்பது சரிதான் என்றாலும் இந்த வெற்றி காந்தியாருக்கு மிக மிக ஆனந்தமாய் விட்டது.

நிற்க காங்கிரசின் போக்கையோ, கொள்கையையோ திருத்தி அமைக்கமாட்டாமல் "மகாத்மா" வும் அதை விட்டு விலகி விட்டார் என்றும் அவர் கிராமப்புனருத்தாரண வேலைக்குப் போயிருக்கிறார் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவர் காங்கிரசிலிருந்தாலும் சரி கிராமப்புனருத்தாரணத்தில் இருந்தாலும் சரி அவர் ஜீவன் உள்ளவரையில் பார்ப்பனர்களுக்கோ மற்றும் வெள்ளை அல்லது கருப்பு முதலாளிகளுக்கோ இரும்புக் கூடு போன்ற காவலாளியாய் இருப்பாரே ஒழிய மற்றபடி அவரால் ஒரு கடுகளவு மாறுதலும் ஏற்படப் போவதில்லை. அவரது கிராமப் புனருத்தாரணம் என்பது வருணாச்சிரமப் புனருத்தாரணம் தான் என்பதை தயவு செய்து ஞாபகத்தில் வைத்து பலனை கவனித்து வரும்படி கோருகிறேன்.

கிராமப் புனருத்தாரணத்தின் பேரால் அவர் செய்யப் போவதாய் வெளிப்படுத்தி இருக்கும் திட்டங்கள் ஏழை மக்களுக்கும் இழிவுபடுத்தப்பட்டமக்களுக்கும் என்ன பலனைக் கொடுக்கக் கூடும் என்பது எனக்கு விளங்குவது போலவே தங்களுக்கும் விளங்கக் கூடும் என்று நினைக்கிறேன்.

முடிவாக தாங்கள் குறிப்பிட்டபடி நான் செய்துகொண்டு வரும் வேலை முறையில் மாறுதல் செய்யவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். லக்ஷியத்தில் மாறுதலில்லாமல் வேலை முறையில் அடிக்கடி மாறுதல் செய்ய வேண்டியதும் செய்து வருவதும் குற்றமாகாது. லக்ஷியம்கூட சில சமயங்களில் திருத்தவேண்டிய அவசியத்துக்கு உட்பட்டு விடுகின்றதும் உண்டு. ஆனாலும் இப்போதைக்கு லக்ஷியத்தை மாற்ற வேண்டிய அவசியமிருப்பதாக தோன்றவில்லை. முறைகளில் தாங்கள் எழுதியபடியே கூடிய சீக்கிரம் மற்ற தோழர்கள் பலரையும் கலந்து ஏதாவது மாறுதல் செய்யலாமா என்று யோசித்துக்கொண்டு தான் இருக்கிறேன்.

எப்படி இருந்தாலும் காயம் அசைவில் இருக்கும்வரை ஏதோ ஒரு வேலை செய்தாக வேண்டுமல்லவா? அந்த வேலையானது மற்றொருவருக்கு அடிமைப்பட்டதாகவோ அல்லது மற்றொருவருடைய அபிப்பிராயத்துக்கு அடிமைப்பட்டதாகவோ இல்லாமல் கூடியவரை தன் தன் புத்திக்கு சரியென்று தோன்றிய லக்ஷியத்துடன் நடந்து செல்ல வேண்டியதைத்தான் நான் சுயமரியாதையோடு கூடிய வாழ்வு என்று கருதி இருக்கிறேன். ஆதலால் நான் எனது உண்மை அபிப்பிராயங்களை தங்களுக்கு தெரிவித்திருக்கின்றேன் என்ற அளவிலாவது தாங்கள் நம்பிக்கை வைப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

தங்கள் பக்ஷம் மறவாத தோழர்,

ஈ. வெ. ராமசாமி

---

## விருந்து.

சமீபத்தில் நடந்த சேலம் முனிசிபல்தேர்தலில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்கள்எஸ். ஏ. அய்யாசாமி எம். ஏ. பி. எல்.(முனிசிபல் சேர்மன்), ஜி. ராமச்சந்திர நாயுடு (வைஸ் சேர்மன்), கௌன்சிலர்களான பி. கே. பெருமாள் செட்டியார், கே. ஆர். சோமய்ய செட்டியார், ஏ. வி. குப்புசாமி செட்டியார், ஆகியவர்களுக்கு சேலம் தேவாங்க நண்பர்களால் 9-10-34ந்தேதி ஞாயிற்றுக்கிழமை சின்ன திருப்பதியில் பாராட்டு விருந்தும், வரவேற்புப்பத்திரங்களும் வாசித்துக்கொடுக்கப்படுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## 66 பேருக்கு மரண சிட்சை

### ருஷிய சர்க்கார் தண்டனை "சோவியத் விரோதிகள்"

சென்ற வாரத்தில் 66 பேர் ருஷியாவில் மரண சிட்சைக்குட்படுத்தப்பட்டார்கள். இவர்கள்மீது சோவியத்சர்க்காருக்கு விரோதமாகச் சதிசெய்தனரெனக் குற்றம் சாட்டினர்கள்.

இவர்களில் 37பேர் டிசம்பர் 1ந்தேதியில் லெனின் கிராட்டில் இரகசியமாக விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டனர். மீதம் 29 பேரை மாஸ்கோவில் ராணுவ நீதிஸ்தலத்தில் விசாரித்து டிசம்பர் 2-ந்தேதி தண்டித்தார்கள்.

இவர்களுடைய சொத்து முழுவதும் பறிமுதலாயின.

இன்னும் 5 பேர் விசாரிக்கப்படுகின்றனர்.

---

## சாரதாவாசக சாலை திருக்கோஷ்டியூர்.

இவ்வாசக சாலையின் ஸ்பெஷல் மீட்டிங் புதுக்கோட்டை டவுன் திருக்கோகர்ணம் தோழர் அ. குருசாமி அவர்கள் தலைமையில் 5-12-34ல் நடைபெற்றது. தோழர் எ. சங்கரலிங்கம் அவர்கள் வாசகசாலையின் பயன் என்பது பற்றிப் பேசினார்கள் அதைத்தழுவி தேனாட்சி அம்மன் கோவில் தோழர் தே. சொக்க லிங்கம் அவர்கள் பேசினார்கள். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் தோழர் மு. கல்யாணம் சுந்தரம் அவர்களால் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது தோழர் மு. காளிமுத்து அவர்கள் நன்றி கூறக்கூட்டம் இனிது கலைந்தது.

இவ்வூர் பார்ப்பனரல்லாதார் தலைவரும் பல சுயமரியாதைத் திருமணங்களை முன்னின்று நடத்திய வரும் திருமயம் தோழர் ராம. சின்னய்யா அவர்கள்அன்னையின்சகோதரருமான தோழர் மு. ெர. நீலமேகம் அவர்கள் மரணம் எய்தியதற்கு வருந்துவதுடன் ஷை யார்குடும்பத்தார்க்கும் தோழர் மு. நல்லையா அவர்கள் மு. ரெங்கசாமி அவர்கள் ராம. சின்னய்யாஅவர்கள் ஆகியவர்களுக்கும் இக்கூட்டம் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

2. இவ்வூர் தர்மவைத்தியசாலை அதிபரும் இளைஞருமான தோழர் மெ. செ. மெ. மெ. மெய்யப்பசெட்டியார் அவர்கள் காரைக்குடி முனிசிபல் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொளகிறது.

3. இராமநாதபுரம் ஜில்லா மூன்றாவது சுயமரியாதை வாலிபர் மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவரும் சமதர்மத்தோழருமான தோழர் எஸ். ஆர். எம். வெங்கிடாசலம் அவர்கள் யூனியன் சேர்மனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு இக் கூட்டம் மேற்படியாருக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## கலப்பு மணத்திற்கு வாழ்த்து

செட்டி நாட்டில் பலவான் குடி "சிவநேசன்" பத்திராதிபர் தோழர் ரா. ம. கு. ரா. ம. ராமசாமி செட்டியார் கலப்பு மணம் செய்துகொண்ட விஷயம் "பகுத்தறிவு" மூலமாய் அறிந்து மிக்க சந்தோஷமடைந்தோம்.

கடும் வைதீகத்தையே தங்களது பிறப்புரிமையாகக்கொண்ட சிவநேசச் செல்வர்களே கலப்புமணம் செய்து கொண்டது மிக மிக போற்றற்குரியதாகும்.

ஷை நிகழ்ச்சியிலிருந்து கலப்புமணத்தை எதிர்ப்பவர் யாரேயுளர்!

என தமிழ் நாடு புரோகித மறுப்புச் சங்க காரியதரிசி ச. ம. சி. பரமசிவம் எழுதுகிறார்

---

## முதலாளிகளின் கடமை

### வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கஉதவி

அநேகர் வேலையில்லாமல் திண்டாடுவதைத் தடுக்கச் சர்க்கார் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களாவென்று காமன்ஸ் சபையில் இன்று ஓர் கேள்வி கேட்கப்பட்டது. தொழில்மந்திரியான மேஜர் ஆலிவர் ஸ்டான்லி பின் வருமாறு பதில் கூறினார்:—

வேலைநேரத்தைக் குறித்து பல தொழில்களின் பிரதிநிதிகளையும்கண்டுபேசநான் உத்தேசித்திருக்கிறேன்: தொழிலாளர்கள் தினம் ஏழுமணிநேரம் வீதம் வாரம் ஐந்து தினங்களுக்குவேலை செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும்.

அதிக நேரம் வேலை வாங்குகின்றவர்களைக் கண்டு அதைக் குறைக்குமாறும் நான் கேட்கப்போகிறேன். வேலையில்லாத்திண்டாட்டத்தைத்தீர்க்கச் சர்க்காருக்கு முதலாளிகள் உதவிசெய்யவேண்டியது அவர்களுடைய கடமையாகும். ரஷியாவில் இப்படித்தான் நடக்கிறது.

---

## ஓட்டுகள் பந்தயம்.

தோழர் கே. நாகேஸ்வரராவ் பந்தலுவுக்கு நவம். 27ந் தேதியிட்டகீழ்க்கண்ட கடிதமொன்று காந்தியாரிடமிருந்து வந்திருக்கிறது:—

என தன்புள்ள நாகேஸ்வரராவ்,

ஓட்டுப் பந்தயத்தில் நீங்கள் எல்லோரையும் தோற்கடித்து விட்டீர்கள். எனினும் நீங்கள் கூடப்பணம் செலவழிக்க வேண்டியிருந்தது என்னஅக்கிரமம்! உங்கள் கையிலிருந்து எவ்வளவு பணம் போயிற்று?

---

## "நான் தோற்றுவிட்டது கீர்த்தியேயல்லவா?"

ஸர். ஹரிஸிங் கோர் கூறுவது.

"வாக்காளர்கள் வெறும் ஜடங்கள் ஆடுமாடுகள் போல் பிறர் ஏவியபடி நடப்பவர்கள் ஒருசிறு கட்சியினரின் தூண்டுதலின் பேரில், நாவிதர்களையும்,குயவர்களையும், தோட்டிகளையும், சட்டமறுப்புக் கைதிகளையும் பொறுக்கி எடுத்து அனுப்பியவர்கள். இவர்களால் நான் தேர்ந்தெடுக்கப்படாதது எனது கீர்த்தியேயல்லவா? என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' வுக்கு எழுதினாராம்."

(ஜெயபாரதி)

---

## மரணம்.

சென்னை கொண்ணூர் அம்மன் கோவில் தெருவில் வசிக்கும் தோழர் சி. கோவிந்தன் அவர்களின் அருமந்த குமாரன் தோழர் ஜி. மகாதேவன் திடீரென்று 4-12-34ந்தேதி காலை இறந்து விட்டார். அவர் 16-வயதிலேயே சுயமரியாதை இயக்கத்திலும், பகுத்தறிவு பத்திரிகை பேரிலும் பற்றுக்கொண்டு இப்போது சுயமரியாதைப் பிரசாரமே செய்து வந்தவர்.

## திருவத்திபுரம் தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகா நாடு ஆலோசனைக் கூட்டம்.

தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகா நாட்டை வட ஆற்காடு ஜில்லாவில் கூட்டுவதைப்பற்றி ஆலோசிப்பதற்காக 29-11-34 மாலை திருவத்தி புரம் செங்குந்தர்களின் மகா ஜனக்கூட்டம் கூடியது. அக்கூட்டத்திற்கு திருவோத்தூர், ஈஸ்வரபுரம், வளூர்பேட்டை, பரிதிபுரம் கிருதனம் பேட்டை, அசனம்மா பேட்டை, ஆகிய இடங்களிலிருந்து முக்கியஸ்தர்கள் பலரும் விஜயஞ் செய்திருந்தனர். சென்னையில் இருந்து தோழர்கள் மா. அ. கனகசபை முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியார், முதலியவர்களும் வந்திருந்தனர்.

பல தோழர்கள் பேசிய பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

1. தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டை இவ்வாண்டில் திருவத்தி புரத்தில் நடத்துவதென்றும், அது சம்மந்த மான காரியங்களை கவனிக்க வட ஆற்காடு ஜில்லா செங்குந்தர்களின் மகாஜனக்கூட்டத்தை 3-12-34ந் தேதி திங்கட்கிழமை பகல் 2 மணிக்கு திருவத்திபுரத்தில் கூட்டவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## திருப்பத்தூர் டவுன் பேங்க்

29-11-34 மாலை 5 மணிக்கு இவ்வூர் கச்சேரிவீதி எலிமெண்டரி பாடசாலையில் இந்நகர பிரபல வக்கீலும் பாங்கியின் தலைவருமான தோழர் ஜி. சாமி நாயுடு பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் வெகு சிறும் சிறப்பாக மகாசபை கூட்டம் கூடியது. கூட்டத்திற்கு என்றுமில்லாத சுமார் 300 மெம்பர்களுக்கு அதிகமாகவே கூடி இருந்தார்கள். நிறைவேறிய தீர்மானம்.

1934-1935 வருஷத்துக்குப்புதிய டைரெக்டர்களை தோழர் ஜெ. எம். பொன்னுசாமிகவுண்டர் பிரேரேபிக்க தோழர் டாக்டர் எம். சீனிவாசன் ஆமோதிக்கதோழர் எம். நடேசன் ஆதரிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

டைரெக்டர்கள் விபரம்.

தோழர்கள் பி. பெரியசாமிபிள்ளை பி. ஏ. பி. எல்., பி. சாப்ஜீ சாகிபு, சி. எம். சுப்பிரமணிய நாயுடு (பஞ்சாயத்துகோர்ட்தலைவர்), பி. எம். சுப்பிரமணிய கவுண்டர், எம். அப்துல் மாலிக்சாயபு, கே. ஆர் வைத்தினாதஐயர், ஜெ.கே. புண்ணியலிங்கமுதலியார் ஆகியவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இறுதியாக தோழர் சி. சாமி நாயுடுஎன்றிகூறதோழர்பி.பெரியசாமி பி. ஏ. பி. எல். அவர்களால் தலைவருக்கு நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

1-12-34-ந்தேதி மாலை டவுன் பேங் மேல் மாடியில் தோழர் எம். அப்துல் மாலிக் சாயபு தலைமையில் புதிய டைரெக்டர்கள் கூட்டம் கூடியது. தோழர் பி. பெரியசாமி பி. ஏ. பி. எல். தலைவராகவும் தோழர் பி. சாப்ஜீ சாயபு உபதலைவராகவும் தோழர் சி. எம். சுப்பிரமணியநாயுடு பொக்கிஷதாரராகவும் தெரிந்தெடுக்கப்பட்டு கூட்ட முடிவுற்றது என தோழர் எம் நடேசன் எழுதுகிறார்.

## அமராபதி புதூர் சமதர்ம இளைஞர் ஊழிய சங்கம்.

மேற்படி சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் இவ்வூர் சமதர்ம காந்திபாடசாலையில் 23-11-34ந் தேதி மாலை 6 மணிக்கு தோழர் நாராயணன் அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. அவ்வமயம் தலைவர் தன் முன்னுரையில் நம் நாட்டின் நிலைமை என்பது பற்றி விஸ்தாரமாகப் பேசினார். பின்னர் தோழர் பரமசிவம் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களின் கஷ்டமும் நமது கடமையும் என்பது பற்றியும் தோழர் ஆர். சுப்பிரமணியம் அவர்கள் "மதஸ்தர்களின் மடமையும் சமூதாயத்தின் தாழ்ச்சியும்" என்பது பற்றியும் தோழர் எஸ். டி. வாசன் அவர்கள் "இளைஞர்களும் நமது கடமையும்" என்பது பற்றியும் மிக அழகாகவும், தெளிவாகவும் பேசிய பின்னர் தலைவர் முடிவுரைக்கப்பால் சங்கக் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது என தோழர் ஆர். சுப்பிரமணியம் எழுதுகிறார்.

## செம்பியம் யூனியன் பஞ்சாயத்து போர்ட் தலைவர் தேர்தல்.

15-11-34ல் நடைபெற்ற மேற்படி பஞ்சாயத்து போர்ட் தேர்தலில் அயனாவரம் தோழர் ஏ. பி. பார்த்தசாரதி அவர்கள் எவ்விதஎதிர்ப்புமின்றி தலைவர் ஸ்தானத்தில் வெற்றி பெற்றார்.

இம்மாகாணத்தில் குறிப்பாக செங்கல்பட்டு ஜில்லாவிலே ஓர் ஆதிதிராவிடர் பஞ்சாயத்து போர்ட் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதன் முறையாகும். இவர் தலைவராக வருவதற்கு இணங்கிய ஜாதி இந்துக்கள், முஸ்லீம் மெம்பர்கள் யாவரையும் பாராட்டுகிறோம் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

குறிப்பு:— ஷை போர்டுக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் பார்த்தசாரதி அவர்களை சென்னை பெறம்பூர் சுயமரியாதைச் சங்கத்தார் 4-12-34-ந் தேதியில் பாராட்டிப் பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

## புதுக்கோட்டை முனிசிபல் சபைத்தேர்தல்

புதுக்கோட்டை டவுன் 9-வது வார்டில் கவுன்ஸிலர் பதவிக்கு நபர் தேர்ந்தெடுக்கவேண்டி 25-11-34-ல் எலக்ஷன் நடைபெற்றது. சென்ற இருபது வருஷங்களாகப்போட்டியின்றி பதவி வகித்துவந்த தோழர் பி. எஸ். விஸ்வனதையரும் (வக்கீல்) தோழர் எஸ். கே. இராமலிங்க ரவுத்த என்றவரும் அபேக்ஷகர்களாக நின்றார்கள். தோழர் அய்யர், தான் புதுக்கோட்டை நிரந்தர வாசியென்றும், மிகவும் அனுபவம் வாய்ந்தவரென்றும், இரண்டு காரணங்களைக் காட்டி வாக்காளர்களிடம் ஓட்டுகள் அபேக்ஷித்தார். எஸ். கே. ராமலிங்க ரவுத்த ஒரு வாலிபர், பார்ப்பனரல்லாதார், சுயமரியாதை உணர்ச்சி உடையவர். 1931ம் வருஷம் ஜூலை மாதம் 2ந்தேதியில் புதுக்கோட்டையில் என்றும் நடந்திராத கலகத்தின் சம்பந்தமாய் நடந்த கேஸில் ஒரு எதிரியாக சேர்க்கப்பட்டு பலமாதங்கள் சிறையிலிருந்தவர். ஜனங்களிடம்மிக்க நம்பிக்கையும் அபிமானமும் உடையவர். தோழர் அய்யர் அவர்களின் கூட்டத்தின் ஆரவாரங்கள் அதிகமாக இருந்தபோதிலும் ஜனங்களின் ஆர்வம் ராமலிங்க ரவுத்தையே நாடி நின்றது. தோழர் ரவுத்த 126 வோட்டுகளும் அய்யர் 72 ஓட்டுகளும் பெற்றார்கள். ஓட்டின் விவரமும் தோழர் ரவுத்தின் வெற்றியும் வெளிவந்தவுடன் நூற்றுக்கணக்கான ஜனங்கள் தோழர் ரவுத் அவர்களைக் கண்டு ஆனந்தத்தைத் தெரிவித்தார்கள். இத்தேர்தல் ஜனங்களிடையே அதிக பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது.

## 'இந்தியாவுக்கு ஏற்றதுபொதுவுடமையே'

போனவாரம் கிளாஸ்கோ நாட்டிங்ஹாம், ஸர்வ கலாசாலைகளின் அழைப்பிற்கிணங்கி தோழர். ஷபூர்ஜி சக்லத்வாலா இந்தியாவைப்பற்றி மாணவர்களுக்குப்பேசினார். பிரிட்டிஷ்-இந்திய பாமர மக்கள், இருதரப்பினரின் விடுதலையும் உத்தேசித்து இந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்ய அடிமை வாழ்விலிருந்து இந்தியா பரிபூர்ண மான விடுதலையடைய வேண்டுமென்பதே தம்முடைய விருப்பமென தெரிவித்தார். மத்திய ஆசியாவிலுள்ள ஸோவியத் பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்த பிறகு, பாமர மக்களுக்குப் பயன் படுமாறு, மிகவும் தரித்திர தசையிலுள்ள இந்தியாவின் உற்பத்தி முறையை பொது உடமையாக்கினால் மட்டுமே அதற்கும், ஆசியாவிலுள்ள மற்ற தரித்திர நாடுகளுக்கும் விமோசனம் ஏற்படும் என்பது தனக்குப் புலப்பட்டதாக அவர்தெரிவித்தார்.

தினமணி

## ஓர் கண்டனக் கூட்டம்.

பெங்களூர் அர்ச். காணிக்கை மாதா கோவிலில் சென்ற செப்டம்பர் மாதம் 8-ம் தேதியன்று, அர்ச். ஆரோக்கிய மாதா திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற இரதோற்சவத்தை யடுத்த விஷயமொன்று "பகுத்தறிவு" என்னும் பத்திரிகையின் 23-9-34ந் தேதி வெளியீட்டில் பிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது. அவ்விஷயத்தை நாமதேயம் வெளியிடாமல் "நிருபர்" என்று கையொப்பமிட்டு எழுதினவர் பிரஸ்தாபித்துள்ள அநாவசியமான விஷயங்கள், கத்தோலிக்கரின் மனதைப் புண் படுத்துவதாக இருக்கின்றன. ஆதலால் அவ்விஷயங்களைக் கண்டிப்பதற்காக 25-11-1934ந் தேதி அன்று ஷை கோவிலின் பங்கு கிறிஸ்தவர்களின் கூட்டமொன்று முனிசிபல் கவுன்ஸிலர் தோழர் C. F. டிசோசா பி. ஏ., எல். எல். பி., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் அந்த நிருபரின் மனப்போக்கையும், உண்மையை எழுதாமையையும் கண்டிப்பதாகவும் கனவான்கள் பலர் மனம் வருந்திப் பேசினர். அவசியமான நடவடிக்கை யெடுப்பதற்காகக் கமிட்டியொன்று ஏற்படுத்த வேண்டும் என்பதாகக் கூட்டத்தில் தீர்மானமாயிற்று. அவ்வாறே ஒரு கமிட்டி ஏற்படுத்தப் பட்டதென்று ஷை கமிட்டியின் காரியதரிசி எஸ். டி. ஜாயிஸ் எழுதுகிறார்.

## தஞ்சைஜில்லா போர்டு பிரிவினை.

தஞ்சை ஜில்லா போர்டை இரண்டாகப்பிரிக்க வேண்டுமென்ற விஷயத்தைச்சர்க்கார் அங்கீகரித்து விட்டார்களென்றும், இன்னும் இரண்டு வாரத்தில் இரண்டாகப் பிரித்துவிட முடிவான உத்திரவு வெளியாகலாம் என்றும் தெரியவருகிறது.

## மணமகள் தேவை.

25, வயதுடையவரும், பாண்டிய வேளாளர் வகுப்பைச் சார்ந்தவரும், ஹையர்கிரேடு பாஸ் செய்து உபாத்தியாயர் வேலையில் ரூ. 25 பெற்று வருபவரும், மாநிறமும், திடகாத்திர சரீரமுமுள்ள வாலிபருக்குமணமகள் தேவை.

மணமகள்:—20வயதிற்கு மேற்படாதவராயும், ஹையர் கிரேடு, அல்லது லோயர்கிரேடு பாஸ் செய்து, உபாத்தியாயினி வேலையிலிருந்து வருபவராயும், அல்லது உபாத்தியாயினி வேலைக்கு லாயக்குள்ளவராயும், அழகுள்ளவராயும், கன்னி, அல்லது விதவையாகினும் சரி.

விருப்பமுள்ளவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு 0-1-3 தபால் தலைகளுடன் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

ச. ம. சி. பரமசிவம்,
காரியதரிசி. த. நா. பு. ம. சங்கம்,
22, பாளையம் பஜார்,
உறையூர் P. O., திருச்சி.

## சுயமரியாதைச் சங்கம் விருது நகர்

ஷை சங்கத்தின் சார்பாக 2-12-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-30 மணிக்கு நாடார் பரிபாலன சங்க ஹாலில் சங்கத்தின் பிரஸிடெண்டும் முனிசிபல் கவுன்சிலருமான தோழர் கே. சம்பந்தன் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. சுயமரியாதை இயக்கத்தையும் ஜஸ்டிஸ் கக்ஷியையும் புனருத்தாரணம் செய்து தீவிர பிரசாரம் செய்ய வேண்டிய அவசியத்தைப்பற்றி பல தோழர்கள் பேசினார்கள். சென்ற இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதற்குக் காரணத்தையும் சர். ஆர். கே. ஷண்முகம் திவான்பகதூர் எ. ராமசாமி முதலியார் முதலியவர்கள் தேர்தல் விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களில் சிலர் எவ்விதம் துரோகம் செய்தார்கள் என்பதைப் பற்றியும் விஸ்தாரமாக விளக்கப்பட்டது. பின் தலைவர் அவர்களால் கீழ்கண்ட தீர்மானங்கள் பிரரேபிக்கப்பட்டன:—

1. விருதுநகர் முனிசிபல் சபைக்கு தோழர்கள் வி. வி. ராமசாமியும் எஸ். பெரியசாமியும் முறையே சேர்மனாகவும் வைஸ் சேர்மனாகவும் போட்டியின்றி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து இக் கூட்டம் மகிழ்ச்சி அடைகிறது.

2. பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்கு உண்மையாய் உழைத்து வந்த தோழர் ஜே. என். ராமநாதன் அவர்களின் அகால மரணத்தைக் குறித்து இக் கூட்டம் வருத்தப்படுகிறது.

3. விருதுநகர் சுயமரியாதை மகாநாட்டிற்குப் பின் சுயமரியாதை இயக்கப் பிரசாரம் சற்று குறைவாய் இருப்பதால் அக் குறையை நிவர்த்திப்பதற்காக நான்காவது சுயமரியாதை மகாநாட்டை சீக்கிரம் திருச்சினாப்பள்ளியில் கூட்டி, சுயமரியாதை இயக்கத்தின் லட்சியங்களை வகுத்து கட்டுப்பாடான வேலை ஆரம்பிக்கும்படி இயக்கத் தலைவர்களை முக்கியமாக தோழர் ஈ. வெ. ராமசாமி, டபிள்யூ. பி. எ. சவுந்தரபாண்டியன் இவர்களை இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

4. கடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில் தோழர்கள் ஆர். கே. ஷண்முகம் எ. ராமசாமி முதலியார் ஆகிய இருவர்களும் தோற்பதற்கு கட்சியிலுள்ள பிரபலஸ்தர்களே காரணமாக இருந்தார்கள் என்று தெரிவதால் அவர்களை தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கட்சித் தலைவரைக் கேட்டுக்கொள்கிறது.

5. காங்கிரஸ் இயக்கத்தின் பெயரால் பிராமணரல்லாதாரின் சுதந்திரம் பறிமுதல் செய்யப்படுவதற்கு சூழ்ச்சிகள் நடைபெறுவதால் காங்கிரசுடன் எதிர்த்துப் போராடி பிராமணரல்லாதாரின் நன்மைகளைப் பாதுகாப்பதற்கான பொதுவேலைத் திட்டங்களை அமைக்கும்படி சுயமரியாதை ஜஸ்டிஸ் கக்ஷியுள்பட்ட சகல பிராமணரல்லாத தலைவர்களையும் இக் கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

6. மேலே கண்ட திட்டத்திற்கு அஸ்திவாரமாக தெலுங்கு, மலையாளம், தமிழ் பாஷைகளில் தினசரிப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் தோழர் ஈ. வெ. ராமசாமியால் ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக் கமிட்டியாருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வேலைத் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமென்று "பகுத்தறிவு" 24-11-34 தலையங்கத்தில் கூறப்பட்டிருக்கும் அபிப்பிராயங்கள் ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமென்றும் தலைவர்கள் மாகாண முழுமையும் சுற்றுப்பிரயாணம் செய்து கிளை ஸ்தாபனங்களையும் சம்பளப்பிரசாரகர்களையும் ஏற்படுத்தவேண்டுமென்றும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

7. மேலே கண்ட தீர்மானங்களை அனுசரித்து நாடெங்கும் பிரசாரம் செய்து கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் சமதர்ம சுயமரியாதை ஜஸ்டிஸ் இயக்க ஸ்தாபனங்களையும் தனிப்பட்ட வாலிபர்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

8. இக் கூட்ட நடவடிக்கை நகல்களை தோழர்கள் ஈ. வெ. ராமசாமி பொப்பிலி ராஜா டபில்யூ பி. எ. சவுந்தர பாண்டியன் சர். ஷண்முகம் முதலியவர்களுக்கு அனுப்பி வேண்டிய வேலைகள் செய்ய சுயமரியாதை சங்கம் பிரஸிடெண்டுக்கு இக் கூட்டம் அதிகாரம் அளிக்கிறது.

மேலே கண்ட தீர்மானங்களை தோழர்கள் ல. பெ. ப. பெரியகருப்பன், வா. அ. மு. வெள்ளையப்பன், கூ. பொ. மகாலிங்கம் முதலியவர்கள் ஆமோதித்தார்கள். இத்துடன் கீழ்க்கண்ட தீர்மானத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தோழர் எஸ். உத்தண்டன் பிரரேபணை செய்தார்:—

பிராமணர்கள் ஜஸ்டிஸ் கட்சியுடன் ஒத்துழைக்க முடியாதென்றும், அவர்கள் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவே இருப்பார்களென்றும் இந்தியா சட்டசபைத் தேர்தலிலிருந்து தெளிவாக விளங்கி விட்டபடியால் பிராமணர்களை ஜஸ்டிஸ் கட்சியில் அனுமதித்து ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் செய்த தீர்மானத்தை ரத்து செய்யவேண்டுமென்று ஜஸ்டிஸ் கக்ஷி நிர்வாக சபைக்கு இக் கூட்டம் சிபார்சு செய்கிறது.

இதையும் மற்றத் தீர்மானங்களையும் தோழர் வி. எ. எம். அருணாசலம் ஆமோதித்துப் பேசினார். தீர்மானங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டு கூட்டம் கலைந்தது.

(நமது நிருபர்)

---

## மதிப்புரைகள்

### திரிலோகசஞ்சாரி.

இப்பெயர்கொண்ட வாரவெளியீட்டு இதழ் ஒன்று எமது பார்வைக்குக்கிடைத்தது. இதன் ஆசிரியர் தோழர் ஞா. பா. வேதநாயகம் ஆவர். இதில் இனியபாடல்கள் கதைகள், காங்கிரஸ் செய்திகள், முதலியவை காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| உள்நாடு வருடசந்தா | | 3—50 |
| அரை,, | ,, | 1—75 |
| வெளிநாடு,, | ,, | 5—00 |
| அரை,, | ,, | 2—50 |

விலாசம்:—

மானேஜர் திரிலோகஞ்சாரி.
296, காலிரோட்கொள்ளுப்பிட்டி
கொளும்பு

### விஜய பாஸ்கரன்.

இப்பெயர் கொண்ட மாத சஞ்சிகைப்பிரதி யொன்று எமதுபார்வைக்குக் கிடைத்தது. இதன் ஆசிரியர் தோழர் டி. பி. அண்ணாமலை பிள்ளையாவர். இதில் பலகதைகள், விகடதுணுக்குகள் போன்றன காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| வருடசந்தா உள்நாடு | ரூ | 0—12—0 |
| தனிப்பிரதி | | 0—1—0 |
| ,, வெளிநாடு | ரூ | 1—8—0 |
| தனிப்பிரதி | | 0—2—0 |

விலாசம்:—

விஜய பாஸ்கரன்.
தபால் பெட்டிநெ. 355 மதராஸ்.

### பரமண்டலத்திலிருக்கும் பரம சிவனுக்கோர் பகிரங்கக் கடிதம்

இப் பெயர்கொண்ட புத்தகமொன்று நமது பார்வைக்குக் கிடைத்தது. இது மதுரை சுயமரியாதைத் தோழர் வீ. மு. பொன்னையா அவர்களால் எழுதப் பெற்று "தமிழன்" அநுபந்தமாக வெளியிட்டதாகும்.

இது முக்கியமாகச் சைவ சமயத்திலுள்ள ஆபாசங்களனைத்தையும் வெளியாக்கி இருப்பதுடன் இதனைப் படிப்பவர் எத்தகைய சைவ சமயப்பற்றுடையவராயினும் நாணித் தலைகுனிந்து "நான் ஒருபோதும் சைவன் அல்ல. என்று சொல்லிவிடு தலைச் சீட்டுக்கொடுத்துவிடத்தக்க அவ்வளவு தெளிவான முறையில் எழுதப்பட்டுள்ளது.

இதனைப் பொதுவாகச் சமயப்பற்றுள்ளவர்களும், சிறப்பாகச் சைவ சமயப்பற்றுள்ளவர்களும் வாசிக்க வேண்டுமென்பது நமது அபிப்பிராயம்.

| | | |
|---|---|---|
| புத்தகம் ஒன்று விலை | | 0—0—6 |
| " 100 | " | 2—12—0 |

விலாசம்:—

சித்தார்த்த வாசகசாலை,
ஆண்டர்சன் பேட்டை
P. O. கோலார், தங்கவயல்.

---

### புதிய சீர்திருத்தங்கள்

இப் பெயர் கொண்ட புத்தகம் சமீபத்தில் சர்க்காரால் இந்தியாவிற்குப் புதிய சீர்திருத்தம் வழங்கும் தோரணையில் வெளியிடப்பட்ட "வெள்ளைக்காகித அறிக்கை"யும், "கூட்டுப் பார்லிமெண்டரி கமிட்டியின் ரிபோர்ட்"டும் தமிழில் மொழிபெயர்த்துப் போட்டு அவை இத்தன்மைத் தென்றும், அதைப் பற்றிப் பலபிரபலஸ்தர்கள் கூறியுள்ள அபிப்பிராயங்களும் தெளிவாகஇதில் எடுத்துக் கூட்டப்பட்டு டிம்மி சைஸ் 52 பக்கங்கள் கொண்டதாக தாருல் இஸ்லாம் புத்தகசாலையாரால் வெளியிடப்பட்டதாகும், அரசியல் அறிக்கையைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டிய அனைவரும் இதனை வாங்கிப் படித்தால் விஷயங்கள் சுலபத்தில் விளங்கக் கூடும்.

தனிப்பிரதி விலை 0—2—6

விலாசம்:—

தாருல் இஸ்லாம் புத்தகசாலை
158 B. பிராட்வே, சென்னை

---

## ஏஜண்டுகள் தேவை.

நமது 'பகுத்தறிவு" வாரப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு

1. பொன்மலை
2. சாக்கோட்டை
3. திண்டுக்கல்
4. சென்னை
5. கோலார் தங்கவயல்.
6. பொரையார்
7. கோட்டார்

முதலிய இடங்களில் டிபாசிட் கட்டக்கூடியஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், "பகுத்தறிவு" ஈரோடு

---

## "சஞ்சீவி சத்து"

மனிதர் தலைமுதல் கால்வரைவரும் சகல நோய்க்கும் திவ்யாமிர்தம் போன்றது. இதனால் காது நோய், பல்வலி, விஷப்புண்கள், விஷத்தடிப்பு, கால்ரா, பிளேக், அஜீர்ணபேதி, மாந்தம், பசியில்லாமை, வயிற்றுவலி, இருமல், மயக்கம், ஜுரம், மார்சளி, ஜலப்பு இன்னும் அனேக நோய்கள் மணிநேரத்தில் சொஸ்தமாகும். எல்லோரும் உபயோகிக்கலாம். வாங்கி உபயோகித்து உண்மையை உணருவின்! புட்டி விலை அணா 8.

பண்டிட் வி.கே. கண்ணுபிள்ளை,
மலபார் மெடிகல் ஹால்,
218, தங்கசாலை வீதி, சென்னை,

## பெரியகுளம் தாலூகா கம்ம வாலிபர் மகாநாடு.

### கோவிந்தநகரம்.

மதுரை ஜில்லா கம்மகுல வாலிபர்களை ஒற்றுமைப்படுத்தவும், அவர்களது கல்வி அபிவிருத்தி செய்யவும், பொருளாதார நிலையை உயர்த்தவும், சமூக ஒற்றுமை நிலவிவரவும் அருத்தமும் பொருத்தமுமற்ற அனுவசியப் பழக்க வழக்கங்களை ஒழிக்கவும், தேசத்துக்கு அவர்களைப் பாடுபடும்படி செய்யவும் பெரியகுளம் தாலூகா கம்ம வாலிபர் மகாநாடு முதலாவது ஆலோசனைக் கூட்டம், கண்டமநாயக்கனூர் ஜமீன் கோவிந்த நகரத்தில் 19—11—34ல் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு முக்கிய கம்ம வாலிபர்கள் வந்திருந்தார்கள். வெங்கிடாசல புரத்திலிருந்து தோழர்கள் ப. போ. சங்கய நாயக்கர், வீ. போலப்ப நாயக்கர், லி. சங்கய நாயக்கர், கோ. கோபால்சாமி, கு வெ. பெருமாள்நாயக்கர், கி. எல்லப்ப நாயக்கர், சு. நாராயணசாமி நாயக்கர், பெ. கிருஷ்ணசாமி நாயுடு முதலியவர்களும், ஸ்ரீரங்கபுரத்திலிருந்து தோழர்கள் எல். ஆர். பெருமாள், வி. டி. பெருமாள்சாமி நாயுடு, பி. சீனிவாசன், கொ. வை. ரா. சீனிவாசன், செ. தி. வெங்கிடசாமி நாயுடு, நா. ச. வெ. நல்லய நாயுடு, எல். வெங்கிடசாமி, கொ. வை. ரா. சங்கய நாயக்கர், பெ. பெருமாள்சாமி முதலியவர்களும், நாகலா புரத்திலிருந்து தோழர்கள் தா. ராமசாமி நாயககர், வெ. ராமசாமி நாயக்கர், பெ. வ. கோ. லட்சுமண நாயக்கர், சோ. அ. அழகர்சாமி, எல் பெருமாள் நாயக்கர் முதலியவர்களும், லட்சுமிபுரத்திலிருந்து தோழர்கள் வி. குருசாமி, எஸ். பெருமாள்சாமி, டி. அழகாசாமி நாயக்கர், டி. நாராயணசாமி நாயக்கர், அ. பெ. சுப்பய நாயக்கர் முதலியவர்களும், அம்பாசமுத்திரத்திலிருந்து தோழர்கள் ச. பெருமாள்சாமி நாயக்கர், ந. பெருமாள்சாமி நாயக்கர், செ. வெங்கிடசாமி நாயக்கர், வேலப்பநாயக்கர், பெ. ரங்கசாமி நாயக்கர் முதலியவர்களும் வந்திருந்தார்கள்.

### நடபடிக்கைகள்.

"பாரதி" ஆசிரியர் தோழர் ரா. நாராயணசாமி அவர்கள் தலைமை வகித்தார்.

அக்ராசனர் மகாநாட்டின் அவசியம் கூறிய பிறகு கோவிந்த நகரம் மிராசுதாரும் ஐக்கிய நாணய சங்கத்தின் காரியதரிசியுமான தோழர் கிச்சப்பனவர்கள் அயலூர் பிரதிநிதிகளை அருமையுடன் வரவேற்றார்கள்.

சமூகஒற்றுமை, பெண்கல்வி, நமது கல்வியின்நிலை என்பதுபற்றி முறையேதோழர்கள்பண்டிதபெருமாள்சாமி நாயக்கர் ராச்சேல் அம்மாள் பி. கிருஷ்ணசாமி ஆகியவர்கள்பேசினார்கள்.

அடியிற்கண்ட கனவான்கள் மகாநாட்டின் காரியக்கமிட்டி அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தோழர்கள் கோவிந்தநகரம் ஏ. ஆழ்வார்சாமி நாயக்கர், கி. மூ. வெங்கிடசாமி நாயக்கர், யி. ஆழ்வார்சாமி நாயக்கர், கிச்சப்பநாயக்கர், மெ. கி. நாராயணப்ப நாயக்கர், அ. ந. நாராயணப்ப நாயக்கர், எஸ். ரங்காழ்வார் நாயக்கர், எஸ். திருவேங்கிடப்ப நாயக்கர், பி. என். வெங்கிடராம் நாயக்கர், வி. ரங்கசாமி, வெங்கிடாசலபுரம் பி. பி. சங்கம நாயக்கர், என். வி. போலப்ப நாயக்கர், எஸ். நாராயணசாமி நாயக்கர், பி. கிருஷ்ணசாமி, கே. எல். சங்கம நாயக்கர், கோ. போ. சங்கய நாயக்கர். ஸ்ரீரங்கபுரம் எஸ். ஆர். பெருமாள் நாயக்கர், வே. தா. பெருமாள்சாமி நாயக்கர், பி. சீனிவாசன், நா. ச. வெ. நல்லய நாயக்கர், செ. தி. வெங்கிடசாமி, ப. பெ. நாராயணசாமி. நாகலாபுரம் வி. ராமசாமி, டி. ராமசாமி, ஜி. ராமசாமி, ஜி. லட்சுமணன், எஸ். பெருமாள்சாமி, அய்யப்பா. அம்பாசமுத்திரம் ச. பெருமாள்சாமி நாயக்கர், நா. பெருமாள்சாமி நாயக்கர், கி. வேலப்ப நாயக்கர். லட்சுமிபுரம் பெ. கோபால் நாயக்கர், நல்லய நாயக்கர், சா. பெரிய பெருமாள் சாமி. பாலகிருஷ்ணபுரம் அ. கி. பெருமாள்நாயக்கர். கோனன்பட்டி ரெ. சு. ராமசாமி நாயக்கர், வெ. ரெ. வெங்கிடசாமி நாயக்கர். சுக்கான்கல்பட்டி வீரப்பன், வி. வீரப்ப நாயக்கர். பாலசமுத்திரம் கி. மு. சுப்பையாநாயுடு. சுப்புலாபுரம் பெத்திநாயுடு, சீனிவாசநாயுடு, குருசாமி நாயுடு இவர்களுடன் இனியும் அதிகமாய் அங்கத்தினர்களைச் சேர்க்கக்காரியக் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த பெரியகுளம் தாலூகா கம்ம வாலிபர் மகாநாட்டின் ஆலோசனைக்கூட்டமும் காரியக்கமிட்டிக் கூட்டமும் நாகலாபுரத்தில் 28-11-34ந்தேதி புதன்கிழமை மாலையில் 6மணிக்குக் கூடும் எனக்கூறி தலைவருக்கும் அயலூர் வாசிகளுக்கும் கோவிந்தநகரம் கம்ம தர்ம வித்யாலயம் தலைமை உபாத்தியாயர் தோழர் ஆழ்வார்சாமி அவர்கள் அன்புடன் வந்தனம் செலுத்தினார்கள்.

### தலைவர் முடிவுரை.

காலச்சக்கிரம் வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. உலகத்திற்கே ஒரு பெரும் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. உலகின் மாறுபாட்டைக் கம்ம குலவாலிபர்கள் கவனிக்க வேண்டுகிறேன். இன்று இளந்துருக்கியரைப் பாருங்கள்! ஜப்பானிய வாலிபரைக்கவனியுங்கள்! சைனாவின் யுவர்களைநோக்குங்கள்! ருஷியாவின் யௌவனர்களை ஆராயுங்கள்! பெரியகுளம் தாலூகாவில் சமூக மகாநாடு இதுவே முதலாவது ஊக்கம் கொள்ளுங்கள்! உழையுங்கள்! உங்கள் மரபில் லட்சக்கணக்கான ஏழைகளும் படிப்பற்றவர்களும் இருக்க, இளம் வீரர்களாகிய நீங்கள் மௌனமாக இருப்பது நியாயமா? 28ந்தேதியன்று நாகலாபுரத்திற்கு ஒவ்வொருகிராமத்திலிருந்தும்உங்கள் உற்சாகமுள்ள நண்பர்களுடன் விஜயம் செய்யுங்கள். கூட்டத்தை வெற்றிபெறுமாறு செய்வது உங்களது கடமையென்று ஞாபகப்படுத்துகிறேன். எனக்கு உங்களுடைய அபார உதவியும் ஒத்துழைப்பும் இருந்தால்தான், நான் உற்சாகமாக உங்களுக்காக உழைக்க முடியும், உங்கள் வாலிபர் மகாநாட்டில்ஆவேசத்துடன் தொண்டாற்ற முடியும்என்பதைத்தெரிவித்துக்கொள்ளுகிறேன் என அக்ராசனர் பேசி முடித்தார். என நமது நிருபர் எழுதுகிறார்.

---

## சென்னை சுயமரியாதைச் சங்கம்.

1934ம் வருஷம் டிசம்பர் மாதம் 2ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7மணிக்கு சுயமரியாதைச்சங்கத்தின் கூட்டம் ஸ்ரீ ஆதிலட்சுமி கொட்டகையில் தோழர் சி. பரமசிவம் அவர்கள் தலைமையின் கீழ் நடக்தேறிய கூட்டத்தின் தீர்மானங்கள் அடியில் வருமாறு:—

சென்னையில் அடுத்து நடக்கப்போகும் இரண்டாவது நாஸ்திக மகாநாட்டை வரவேற்பதாகவும், திருச்சியில் கூடிய சீக்கிரம் மாகாண சுயமரியாதை மகாநாட்டை நடத்தும்படியாக மேற்படி சங்கத்தார்களை கேட்டுக் கொள்ளுகிறதாகவும், தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் நடத்தப்போகும் விஞ்ஞான மாதாந்திரப்பத்திரிகையை வரவேற்பதுடன் நமது தோழர்கள் அதனை ஆதரிக்க வேண்டுமென்றும், தென்னிந்திய நலஉரிமை மகாநாட்டிற்கு சுயமரியாதை இயக்கத்தலைவர் தோழர் ஈ. வெ. ரா. அவாகளால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை அவசியம் கவனிக்கும்படியாக மேற்படி தென்னிந்திய நலஉரிமை சங்கத்தார்களை கேட்டுக்கொள்ளுகிறோம் என்றும், சென்னையில் அகால மரணமடைந்த தோழர் ஜே. என். இராமநாதனுக்கு துக்கம் பாராட்டுவதுடன் அன்னார் குடும்பத்தார்களுக்கு அநுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுவதாகவும் பல தீர்மானங்கள் நிறைவேறிய பிறகு தலைவர் முடிவுரை கூற கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது முடிந்தது என ஷை சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

---

## அனுதாபம்.

தோழர் ஜே. என். ராமநாதன் அவர்கள் இறந்ததற்கு நாங்கள் அவர்களது குடும்பத்தாருக்கும், தோழர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோமென சுவாமிமலை தோழர் பி. அவையம்பாள் அவர்கள் எழுதுகிறார்கள்.

---

## லெனின் பற்றி வெல்ஸ் கருத்து.

"டெய்லிஹெறால்ட்" பத்திரிகையில் கீழ்க்கண்டவாறு தன்கருத்தை எச். ஜி. வெல்ஸ் வெளியிட்டிருக்கிறார்:- 14 வருஷங்களுக்குமுன் லெனினை விட பெல்போர்சிறந்தவரெனக் கருதிக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது லெனினுடன் ஒப்பிடத்தக்க யோக்கியதை பெல்போருக்குக் கிடையாதென்றே நான் கூறுவேன். க்ரெம்லினிலுள்ள சிறிய பேர்வழி பெல்போரை அறிவாலும் செயலாலும் மிஞ்சி விட்டார். ஐந்து வருஷங்களுக் குட்பட்ட காலத்திலேயே இடையறாது அரும்பணியாற்றி செல்வாக்குப் பெற்றார். பெருந்தொல்லைகளுக் கிடையே ஆக்க வேலையை வெகு திறமையோடு செய்தார்.

பொதுவுடமைக் கட்சியை அவர் தோற்றுவிக்கா திருந்தால், ருஷ்யப்புரட்சியினால் இராணுவ ஆட்சிதலைவிரித்தாடி, சமுதாயமே பாழ் பட்டிருக்கும். அவர் கல்மனம் கொண்டவரன்று. புரட்சி இயக்கத்தினின்று வெகு திறமையாகத்தன் கவனத்தை சமுதாயத் துறையில் செலுத்தினார். 1920ம் வருஷம் நான் அவரைக்கண்டபோது, இளைஞனுக்குள்ள ஊக்கத்தோடு, ருஷ்யாவை மின்சார மயமாக்கு வதைக் குறித்துப் பயின்று கொண்டிருந்தார். இதினின்று தான் எனைய ருஷ்ய திட்டங்களெல்லாம் முளைத்தன. (சமதர்மம்)

---

## தூத்துக்குடி.

### தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசாரசபா.

ஷை சபையின் கிளை ஸ்தாபனம் இவ்வூரில் ஸ்தாபிக்கும் பொருட்டு நாகம்மாள் சமதர்ம வாசகசாலையில் 27-11-1934ந்தேதி மாலை 5 மணிக்கு கூ. கா. ஆ. பெரியசாமி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் கூடியது.

சுமார் ஒரு வாரமாக இந்நகரில் பிரசாரம் செய்துவரும் மேற்படி ஜீவரக்ஷக பிரசார சபாவின் கௌரவ பிரசாரகர் கிருஷ்ணானந்த சுவாமி அவர்கள் ஜீவரக்ஷக சபை ஸ்தாபிப்பதின் அவசியத்தையும், அதனால் மக்கள் அடையும் பயனையும் பற்றி வெகு விளக்கமாகப் பேசினார்கள்.

பின் கீழ்க்கண்டவர்களை மேற்படி சபைக்கு கௌரவ உத்தியோகஸ்தர்களாக தெரிந்தெடுக்கப்பட்டது.

தலைவராக தோழர் கூ. கா. ஆ. பெரியசாமி அவர்களையும், காரியதரிசிகளாக எஸ். ஓ. வெற்றிவேல், வி. எம். ராஜமணி அவர்களையும், கமிட்டி மெம்பர்களாக தோழர்கள் பொன்னையா பிள்ளை, கபிரியேல் பர்னாந்து, எம். என். ராஜன், பி. எஸ். ஷண்முகம், பி. எஸ். சாமுவேல், கே. அமிர்த பாண்டியன் ஆகியவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

(3ம் பக்கத்தொடர்ச்சி)

ஷப்பட்டார். ஆனால் "அப்படியே எல்லா நூலறிவும் செய்யவல்லது" என்றுகூட சேர்த்துச் சொன்னேன். அப்போது அவருடைய சந்தோஷம் குறைந்து விட்டது.

கடைசி இரண்டு அத்தியாயங்கள் இதைப்பற்றி விவரிக்கும். விஞ்ஞானத்தின் உதவியின்றியே நவீன நாஸ்திகத்திற்கு அரைடஜன் பலத்த அஸ்திவாரங்கள் இருக்கின்றனவென நாம் கண்டிருக்கிறோம்.

பேனி, வால்டேர், இங்கர்சால் முதலியவர்கள் செய்த பைபிளின் சாதாரண தர்க்கப்பரிக்ஷை இருக்கிறது. ஆதிகர்த்தாக் கொள்கையினர் அமெரிக்காப் பள்ளிக்கூடங்களிலிருந்து விஞ்ஞானத்தை எடுத்துவிடுவதில் வெற்றி பெற்றால், அமெரிக்காவின் இருபது லட்சம் குழந்தைகள் கையிலும் வால்டேர், பேனி, இங்கர்சால் இவர்கள் எழுதிய பைபிள் கைப்புத்தகத்தைக் கொடுப்பதற்கு விசேஷ பிரசார வேலையை ஆரம்பஞ்செய்யும்படி நான் எடுத்துச் சொல்லுவேன். அப்புத்தகங்களைப் படித்து அமெரிக்கப் பையன்கள் எப்படிச்சிரிப்பார்கள் என்பதை நான் அறிவேன்.

பிறகு சரித்திரம் இருக்கிறது. அது மனிதச் சரித்திரத்தின் தெய்வீக நடப்புகளை விலக்கி விடுகிறது. வேடிக்கையாகப் பேசும் ஒரு பிரஞ்சுக்காரர் "விஞ்ஞானம் கடவுளைத் தான் எல்லைப்புறம் வரையில் அழைத்துச் சென்று இவ்வளவு காலம் அவர் செய்து வந்த சேவகத்திற்கு வந்தனமும் செய்துவிட்டது" என்று கூறினார். தற்கால சரித்திர விஷயத்திலும் அப்படியே சொல்லலாம். அமெரிக்காவில் சரித்திர ஆசிரியர்கள் எல்லாம் விஞ்ஞானிகளைப் போலவே மதப்பற்றில்லாதவர்களாயிருக்கிறார்கள் என்று விசாரணையால் தெரிகிறது.

சமுதாயக்காரர்கள், சிலா சாசன ஆராய்ச்சிக்காரர்கள் தத்துவ சாஸ்திரிகள் ஆகிய யாவரும் ஒரே கூட்டத்தினர். அடிப்படையான மத நம்பிக்கையும் இவர்களிடம் கிடையாது. புரொபசர் ஆஸ்பர்ன்தானும் வேறு கியாதி பெற்ற ஒரு டஜன் விஞ்ஞானிகளுமே ஆயிரம் விஞ்ஞானிகளுக்குள் கிறிஸ்தவர்களாக இருப்பதாகப் பெருமை பேசிக்கொள்கிறார். அவரால் அதே பிரபல்யமுள்ள ஒரு டஜன் சரித்திரஆசிரியர்களையோ சிலாசாசன ஆராய்ச்சியாளரையோ தத்துவ சாஸ்திரிகளையோ காட்டமுடியாது. நாளைக்கு விஞ்ஞானத்தையே விலக்கிவிடும். அப் பெரியார்கள் வேலை நடைபெற்றுக்கொண்டுதானிருக்கும். சிலாசாசன ஆராய்ச்சிக்காரர் "ஜீனிஸிஸ்" என்னும் முதல் புத்தகம் பழங் காலத்துக் கட்டுக்கதை என்று ருசுப்படுத்துகிறார், சரித்திர ஆசிரியர் மனிதனுடைய ஒழுக்கமும், மதாபி விருத்தியும் கடவுள் சம்பந்தமின்றியே மேற்சென்றிருக்கின்றனவென்றார். சமுதாயக்காரர் மதக் கோட்பாடுகளின்செல்வாக்கை வெகு அசட்டையாகவும், அனாவசியமாகவும் கொள்ளுகிறார். தத்துவ சாஸ்திரி கடவுளைப் பற்றிய நியாய வாதத்தையும் நித்தியத்தைப்பற்றிய வாதத்தையும் அடியுடன் வெறுத்துத் தள்ளுகிறார்.

ஆயினும் மனோசக்தியில் ஆதிக்கம் பெற்றது விஞ்ஞானம் தான். புதிய உண்மைக்கும் பழைய பாரம் பரியத்திற்கும் நடக்கும் போராட்டத்திற்கு அடையாளமாயிருப்பதும் விஞ்ஞானம்தான்.

அதையாரும் சுலபமாய்த்தெரிந்து கொள்ள முடியும். விஞ்ஞானம் நட்சத்திரங்கள், பூக்கள், குன்றுகள், மிருகங்கள், உடல் உறுப்புகள் பொருளின் அணுக்கள் முதலியவைகளைப் பற்றி உலகம் முழுதும் கேட்டுக் கைகொட்டிப் பாராட்டும் கவர்ச்சியுள்ள விஷயங்களை வெளியிடுகின்றது. விஞ்ஞானம் அது வெளியிடும் உண்மைகளை ருசுப்படுத்துகிறது. அவ்வுண்மைகளுக் கேற்ப சிற்பம், ரசாயனம் முதலியவைகளில் அற்புதச் செயல்களை உண்டாக்குகிறது. ஆகவே விஞ்ஞானக் கொள்கைகளின் உண்மையை யாரும் சந்தேகிக்க முடியாது. விஞ்ஞானம் எக் காலத்தும் மனிதனுடைய மனோ பலத்தின் பெரிய வெற்றிக்கு அடையாளமாகும். ஆதலால் விஞ்ஞானி மதத்திற்கு விரோதமாகப் போராட்டத்திற்கு இறங்கினால், அவன் சரித்திர ஆசிரியன் அல்லது தத்துவ சாஸ்திரியை விட அதிகமாக மக்கள் கவனத்தை வசீகரிப்பான்.

ஆதி கர்த்தாக் கொள்கையினர், "ஆம், நாம் அதை ஒப்புக்கொள்ளுகிறோம். உண்மையான விஞ்ஞானம் மிகப் பெரிய சக்திதான் என்று நாங்கள் தெரிந்து கொண்டிருக்கிறோம்" என்று கூறுகிறார்கள். எப்போது விஞ்ஞானம் உண்மையாக இருக்கிறது என்றும், எப்போது அது உண்மையாக இல்லை என்றும் யார் சொல்லுகிறது? உலகத்திலுள்ள எல்லா விஞ்ஞான நிபுணர்களும் லட்சத்திற்கும் அதிகமிருப்பார்கள். அவர்கள் பரிணமம் உண்மையான விஞ்ஞானம் என்று ஒரு மிக்க ஒப்புக்கொண்டிருக்கையில், தனக்கே அதிகமாகத் தெரியுமென்று சொல்ல வேறு எந்த மனிதனுக்கு தைரியம் வரும்?

விஞ்ஞானிகள் பரிணமத்தின் எந்தப் பிரத்தியேக வழியையும் ஒப்புக்கொள்வதில்லை. பரிணமத்திற்கு உபயோகிக்கப்படும் எல்லா நியாய வாதங்களின் மதிப்பையும் அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் உலகத்திலுள்ள சர்வகலா சங்கங்களில் பரிணமம் சம்பந்தமான ஏழு அல்லது எட்டு விஞ்ஞான சாஸ்திரங்களில் பேராசிரியர்களாயிருப்பவர்கள் எல்லாரும் பரிணமம் என்பது உண்மைதான் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதற்கான சில நியாய வாதப் போக்கும் உண்மையான விஞ்ஞானந்தான் என்று அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஒரு டாக்டர் ரீலி, அல்லது ஒரு ரெவரெண்டு ஸ்ட்ராட்டன், அல்லது ஒரு மெக்ரீடி ப்ரைஸ் என்பவர் இப் பெரிய சாட்சியங்களுக் கெதிராய் எழுந்து தனக்கு அதிகம் தெரியும் என்று சொல்லுகிறார். இது ஒரு வேடிக்கையான விஷயமாகவே இருக்கிறது. மெக்ரீடிப்ரைஸ் என்பவர் ஐந்து வருஷங்களாக இங்கிலீஷ் இலக்கியப் போதகராக இருந்தார். அமெரிக்காவில் ஒரு எளிய சர்வகலா சங்கத்திலும் அவருக்கு ஒரு ஆசிரிய ஸ்தானம் கிடைக்கவில்லை. விஞ்ஞானப் படிப்பற்ற உபாத்தியாயர்கள் உலக விஞ்ஞானக் கூட்டத்தார்களை விட உண்மையில் அதிகமாகத் தெரிந்தவர்கள் என்றும், அவர்கள் விஞ்ஞானிகளைக் கேவலப்படுத்த முடியுமென்றும், அமெரிக்காவில் லட்சக் கணக்கானவர்கள் நினைப்பது விசனகரமானதாக இருக்கிறது.

"பிராணி வர்க்க உற்பத்தி" என்னும் டார்வின் வெளியீடு பரவ ஆரம்பித்த கால முதல் விஞ்ஞானத்திற்கும், மதத்திற்கும்போராட்டம் ஆரம்பித்தது. அப் புத்தகத்தின் முழுப் பெயர் "இயற்கைச் சேர்க்கையின் வழியாய் பிராணி வர்க்க உற்பத்தி" என்பதாகும். டார்வின் கொள்கைக்கும் உண்மையான அர்த்தம் அது தான். டார்வின் கொள்கைக்கும் பரிணமத்திற்கும் வித்தியாசம்உண்டு. அது பரிணம இயக்கத்தின் தனிப்பட்ட ஒரு பிரத்தியேகமான சித்தாந்தம். அதற்கு எதிர்ப்பும் இருக்கிறது. டார்வின் கொள்கையையும், பரிணமத்தையும் குழப்பி எழுதியும் பிரசங்கம் செய்தும் வருகிறவர்கள், அவ்விரண்டும் ஒன்றே என்று காட்டுகிறார்கள். விஞ்ஞானிகள் பரிணமத்தை ஒப்புக்கொள்ளாதது போல விஞ்ஞானிகள் டார்வின் கொள்கையை எதிர்க்கிறவர்கள் என்று சொல்லுகிறவர்கள் ஆகிய யாவரும் தங்களைப் பின் பற்றுகிறவர்கள் கண்ணில் மண்ணை வாரிப் போடுகிறவர்களாவார்கள். கீழ் அமெரிக்காவில் இது விஷயத்தில் அறியாமை வெகு அதிகமாக இருக்கிறது.

டார்வினுக்கு விஞ்ஞானத்தில்இருந்த பெரிய மதிப்பும் அவன் மதத்திற்கிழைத்த பெரிய குற்றமும் என்னவென்றால் அவன் பரிணம சித்தாந்தத்தை முதன் முதலாக மக்களுடைய கவனத்திற்குரிய உண்மைகளின் பேரில் ஒரு முறையில் வெளியிட்டதுதான். அந்த சித்தாந்தம் அவனுடைய காலத்திற்கு முன்பே படிப்பாளிகளுக்கெல்லாம் தெரிந்தே இருந்தது. ஆனால் ஆரம்பத்தில் அது பெரிய உண்மைகளைப் பற்றிய அஸ்திவாரம் இல்லாமல் வெறும் நிதானத்தைப்பற்றியே இருந்து வந்தது. டார்வின் இது விஷயமாக முப்பது வருஷம் அமைதியாய், உழைத்துப் பின்பு அதற்கான அஸ்திவாரத்தை அமைத்தான். உலகம் பரிணமத்தைப்பற்றி விவகரிக்க ஆரம்பித்து விட்டது. பெரிய சண்டையும் ஆரம்பமாயிற்று

ஆரம்ப காலத்தில் விஞ்ஞானிகளுக்கும், மதாபிமானிகளுக்கும் சிறு சிறு சண்டைகள் நடந்து வந்திருக்கின்றன. மனிதன் உண்டாகி ஆறு ஆயிரம் வருஷங்களே ஆயினவென்று பைபிள் விளக்கமாய்க் கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் இது காணப்படவில்லை என்று சாமான்யமாய்க் கூறுகிறார்கள். உற்பத்திக் கால ஆரம்பத்தில் இருந்த குடும்பத் தலைவர்களுக்கு ஏற்பட்ட வயதுகளை ஒன்றாய்ச் சேர்க்கவில்லை. இப் புள்ளிகளைச் சேர்த்தால் ஆதாம் உண்டாக்கப்பட்டது கிறிஸ்து பிறக்க சுமார் 4000 வருஷங்களுக்கு முன்பாகும். இங்கிலாந்தின் பாதிரிகள் உலகம் படைக்கப்பட்ட சரியான தேதியையும் மணியையும் குறிப்பிடும்போது அவர்கள் பாராட்டிற் குரியவர்களாவார்கள் தான்! டார்வினுக்கும்வெகு காலத்திற்கு முன்பே விஞ்ஞானிகள் சரித்திர காலத்திற்கு முன்பிருந்த கல் ஆயுதங்களைக் கண்டுபிடிக்க ஆரம்பித்தார்கள். அக்காலம் பத்தாயிரக் கணக்கான வருஷங்களுக்கு அப்பால் செல்லுகிறது. ஆகவே மனிதனுடைய உற்பத்திக் காலத்தைப் பற்றிச்சண்டை உண்டாயிற்று.

பேபல் கோபுரத்தைச் சுற்றியும் பாஷைகளின் குழப்பத்தைப் பற்றியும் மற்றொரு சண்டை உண்டாயிற்று. பத்தொன்பதாவது நூற்றாண்டில் பாஷா சாஸ்திரம் விஞ்ஞானத்தின் ஒரு பிரிவாக இருந்தது. ஐரோப்பியர்கள், இந்துக்கள், பெர்ஷியர்கள் ஆகியவர்களின் பாஷைகள் ஒன்றிற்கொன்று நெருங்கிய சம்பந்தம் பெற்றிருந்தனவென்று விஞ்ஞானிகள் கண்டார்கள். பிராணிகளின் விருத்தி முறை அறியப் படுவதற்கு முன்பே பாஷைகள் விருத்தியடைந்திருந்தன. பேபல் கோபுரச் சரித்திரம் தள்ளிவிடப்பட்டது.

பூகர்ப்ப சாஸ்திரம் என்ற ஒன்றுண்டு. டார்வினுக்கு வெகு காலத்திற்கு முன்பே அந்த நூல் பிரளயக் கதையை மறுத்தது. அது சென்ற லட்சாதி லட்சம் வருஷங்களாகக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பூமி கடினமாகிக்கொண்டு வந்ததாகக் கற்பித்தது. டார்வின் காலத்திற்கு முன்பே சண்டை அதிகமாக இருந்தது. ஆனால் டார்வின் காலத்தில் தான் மக்களின் கவனம் அதில் அதிகமாகச் சென்றது. ஆனால் தத்துவ சாஸ்திரமும் சரித்திரமும் செய்தது போல டார்வின் நாஸ்திகத்தின் அடிப்படைக்குச் செல்லவில்லை.

(தொடரும்)

# பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

(சார்லஸ் T. கோர்ஹாம் மொழிபெயர்ப்பு)

இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

(பெர்ட்டிரண்ட்ரசல் மொழிபெயர்ப்பு.)

இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

## மதம் என்றால் என்ன?

(ராபர்ட் G. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

## கடவுள்.

(ராபர்ட் ஜி. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில்உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின்தன்மைகளையும், உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும்விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட்பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

## மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

(பெர்ட்டிரண்ட் ரசல் மொழிபெயர்ப்பு)

இந்நூல் மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

## நான் சம்சயவாதி ஆனதேன்?

(இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில், தான்கடவுளைப்பற்றிக்க வலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

## பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

## மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். விலை அணா 4

## குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், குடிஅரசில்எழுதிய தலையங்கங்களையும், பலமகாநாடுகளில்பேசியபேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

## பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(பாதிரி செனிக்யூ மொழிபெயர்ப்பு.)

இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும் பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

## பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவை இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 3.

## மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இதில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள பேதங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

## "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. இதில் சகல விதமான மூடநம்பிக்கைகளும், விபரமான பதில்கள் இருக்கின்றன. சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

ஷை இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

## பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M.A. மொழிபெயர்ப்பு

இதில் பிரமச்சரியம் என்னும் பெயரால் பல பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

## மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கைவீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும் விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.

விலை அணா 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா' அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது. விலை அணா ½.

## மநுநீதி விளக்கம்.

இது மநுதர்ம சாஸ்திரம் என்பதில் உள்ள சூட்சிகளையும், கொடுமைகளையும் விளக்குவது. விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

பண்டிதர் மகாவித்வான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. இதில் அகத்தியர் என்பதாக ஒருவர் இருந்ததாகச்சொல்லுவது உண்மை அல்ல என்றும் அந்தப்படி ஒரு அகத்தியர் இருந்திருக்க முடியாது என்றும் தமிழ் சங்கங்கள் என்று சொல்லப்படுபவை கூட இருந்திருக்க முயடியாது என்றும் சரித்திர ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டதாகும். விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

இது வடலூர் ராமலிங்க சுவாமி என்பவரால் சமதர்மத்தை ஆதரித்துப்பாடிய பாட்டுகள். விலை அணா 2.

## விவாக விடுதலை.

தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்., அட்வகேட் அவர்களால் எழுதப்பட்டது. இது நமது "இந்து"ப் பெண்களுக்கு விவாக விடுதலையின் அவசியத்தை வலியுறுத்துவதுடன் அது சம்மந்தமான சாஸ்திரஏற்பாடுகளையும், சட்டங்களையும் விளக்குவதுமாகும். மிகவும் ஆராய்ச்சித்திரம் கொண்டது. தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் மேல் நாட்டுப் பிரயாண உருவப்படமும், மதிப்புரையும் கொண்டது. விலை அணா 0—4—0

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.